விவிலியத் தமிழ்

முனைவர் அ. ஆலிஸ்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

விவிலியத் தமிழ்

முனைவர் அ. ஆலிஸ்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம்
தரமணி, சென்னை - 600 113

தவத்திரு தனிநாயகம் அடிகளார் அறக்கட்டளைச் சொற்பொழிவு

வரிசை எண் : 5 நாள் : 23-4-2004

அறக்கட்டளை நிறுவியோர்: தமிழ் இலக்கியக் கழகம், திருச்சிராப்பள்ளி

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	viviliyat tamil
Author	:	Dr. A. Alice Associate Professor Tamil Department Bharathidasan University Thiruchirappalli
General Editor	:	Dr. K. Bhagavathi Associate Professor, IITS
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Chennai - 600 113 Phone: 22542992
Publication No.	:	492
Date of Publication	:	2004
Language	:	Tamil
Edition	:	First
Paper Used	:	18.6 kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	10 points
No. of Pages	:	viii + 136
No. of Copies	:	1200
Price	:	Rs. 40/- (Rupees forty only)
Printed by	:	United Bind Graphics 189, (101-D), Royapettah High Road Mylapore, Luz, Chennai - 600 004
Subject		Stylistics

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

அணிந்துரை

மொழி மனித மனங்களை ஒருங்கிணைப்பது; கருத்துப் பரிமாற்றத்திற்குத் துணைபுரிவது. கருத்துகள் வேறுபடும் நிலையில் மொழியும் வேறுபடுவது இயற்கை. ஒரு மொழியின் வளர்ச்சி என்பது கல்வி, சமயம், அரசியல், பண்பாடு, பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப அமையும்.

மொழி வளர்ச்சிக்குப் பல காரணங்கள் இருந்தாலும் சமயம் அவற்றுள் அடிப்படைக் காரணமாக அமையும். தமிழ்மொழி வளர்ச்சியில் கிறித்தவ சமயம் பெரும் பங்காற்றி யிருப்பதை நம்மால் உணர முடிகிறது. இச்சமயத்தினர் மதத்தைப் பரப்புவதை மட்டுமே நோக்கமாக அமைத்துக் கொள்ளாமல் மொழியை வளர்க்கவும் செய்தனர்.

கிறித்தவ சமயப் பரப்புநர்களாகத் தமிழகம் வந்துசேர்ந்த மத குருமார்கள் தமிழைக் கற்றுக்கொள்ளவும், கற்றுக்கொண்ட தமிழைச் சமயப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தவும் செய்தனர். இதனால் அவர்கள் தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டதோடு தமிழ் வழியாகச் சமயத்தைப் பரப்பும்பொழுது படிப்பறிவு இல்லாத சாதாரண மக்களுக்கும் தாம் சொல்ல நினைத்த கருத்தை ஆழமாகப் பதியவைக்கும் நிலையில் அவர்கள் தங்களுடைய மொழிநடையை மாற்றியமைத்துக் கொண்டனர். கிறித்தவ சமயத்தைப் பரப்பும்நோக்கில் தம்பிரான் வணக்கம், கிரீசித்தியானி வணக்கம் ஆகிய நூல்களை **அன்டிரிக் அடிகளார்** எளிய தமிழ் நடையில் எழுதித் தம் சமயப் பரப்பும் பணியை மேற்கொண்டமை தெரிய வருகிறது. இவரைத் தொடர்ந்து ராபர்ட் டி நொபிலி அவர்களும் **வீரமாமுனிவர்** அவர்களும் பல உரைநடை நூல்களைத் தமிழில் எழுதினர். உரைநடை என்னும் புதிய வடிவம் கிறித்தவரால் தமிழுக்குக் கிடைத்ததென்றால் அது மிகையாகாது. சமயச் செய்திகளைத் தமிழில் எழுதியதோடு மட்டுமல்லாமல் விவிலியத்தைத் தமிழில் பெயர்த்தும் எழுதினர். உரைநடை நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என இத்தகு நூல்கள் தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தூண்களாக அமைந்தன.

சீகன்பால்கு மொழிபெயர்ப்பைத் தொடங்கி, முழு விவிலியம் ஏறத்தாழ 6 முறை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழி வரலாற்றைப் பொறுத்தவரை கிறித்தவர்களின் தமிழ்த்தொண்டை நீக்கிவிட்டு எண்ணிப்பார்க்க இயலாது. மக்களைக் கிறித்தவ சமயத்திற்கு ஈர்க்கவும், அவர்களைக் கிறித்தவ சமயத்திலேயே நிலைகொள்ளச்செய்யவும் தாம் கூறவிரும்பும் கருத்துகளை அவர்களுக்கு எளிமையான மொழிநடையில் தந்து மொழியை எளிமைப்படுத்தினர். இத்தகு மொழிநடை பற்றி ஆராய்வது இன்றைய தமிழ் உலகிற்குத் தேவையான ஒன்றாகும். இந்நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் இந்நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ள தனிநாயக அடிகளார் அறக்கட்டளையின் ஐந்தாவது சொற்பொழிவுப் பொருண்மையாக **'விவிலியத் தமிழ்'** அமைத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வறக்கட்டளையின் ஐந்தாவது சொற்பொழிவாக இச்சொற்பொழிவு நடைபெறுகிறது. இச்சொற்பொழிவை நிகழ்த்துபவர் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் அ. ஆலிஸ் அவர்கள். ஆலீஸ் அவர்கள் ஆழ்ந்த இலக்கிய, இலக்கணப் புலமை கொண்டவராகவும், திறனாய்வு நோக்கு உள்ளவராகவும் விளங்குகிறார். அவர்கள் இச்சொற்பொழிவினை நிகழ்த்துவது பாராட்டுக்குரியதாகும். இச்சொற்பொழிவுக்குரிய எழுத்துருவை முன்பே வழங்கி நூல் உருவாக்கம் பெறுவதற்குப் பெருந்துணைபுரிந்துள்ளார். அவர்களுக்கு இந்நிறுவனத்தின் சார்பில் நன்றியும் பாராட்டுகளும் உரியன.

இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவு நூலாக்கம் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்ட இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் கு. பகவதி அவர்களுக்கும் நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளி அச்சுக்கோப்புச் செய்த நிறுவனக் கணிப்பொறியாளர் திருமதி ந. இலட்சுமிக்கும், அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை
22.4.2004

இயக்குநர்

ஆசிரியரைப் பற்றி



பெயர் : அ. ஆலிஸ்

பிறந்த தேதி : 10-2-1953

ஊர் : தேனி (தேனி மாவட்டம்)

பணி : இணைப்பேராசிரியர்
தமிழியல் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி
(12-4-1989 முதல்)

விரிவுரையாளர்
லேடிடோக் கல்லூரி
(20-10-1984 - 11-4-1989)

கல்வித் தகுதி :

முதுகலை (தமிழ்)	1975-77	மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
முதுகலை (மொழியியல்)	1982-84	"
முதுகலை (இதழியல் & மக்கள் தகவல் தொடர்பியல்	1992-94	"
ஆய்வியல் நிறைஞர்(M.Phil.)	1977-78	"
முனைவர் பட்டம் (Ph.D.)	1979-83	"
காந்திய சிந்தனை - சான்றிதழ்	1974-75	"

எழுதியுள்ள நூல்கள் :

1) கண்ணதாசனின் கவிதை நடை
2) கட்டமைப்பு ஆய்வில் அகநானூறும் புறநானூறும்
3) மக்கள் தகவல் தொடர்பியல் கலைச்சொல் அகராதி (1995ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் சிறந்த நூலுக்கான விருதினைப் பெற்றது)
4) குர்பக்ஷ் சிங் (மொ.பெ.), சாகித்திய அகாதெமி வெளியீடு
5) ஹிமானா சையத்தின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு
6) பதிற்றுப்பத்து (உரை), NCBH வெளியீடு, (ஜூன் முதலாம் தேதி 2004 வெளியிடப்படவிருக்கும் நூல்)

எழுதியுள்ள கட்டுரைகள்: இதழ்களில் வெளிவந்தவை : 60
கருத்தரங்கில் படைக்கப்பட்டவை : 55

ஆய்வுக்களம் : 1) நடையியல் (Stylistics)
(Area of Research) 2) அமைப்பியல் (Structuralism)
3) இதழியல் (Journalism)
4) இலக்கியத் திறனாய்வு (Literary Criticism)

முன்னுரை

பதினைந்தாம் நூற்றாண்டில் அய்ரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் விளைவாக, சமயத்தைப் பரப்பும் நோக்கில் வந்த மேனாட்டுப் பாதிரிமார்களின் கிறித்தவ சமயப் பணி பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கிடைக்கச் செய்தது. எந்த ஒரு பேச்சுச் செயலாயினும் இலக்கியப் படைப்பாயினும் தான் கூறவரும் கருத்தைக் கேட்போனிடம் கொண்டு சேர்க்கும் திறனில்தான் முழுமையாக வெற்றி பெறும். இவ்வகையில் பல்வேறு நூல்களை உள்ளடக்கிய நூலாகிய விவிலியம் வசன நடையில் அமைந்து பின்னாளில் உரைநடைத் தமிழ் வளர்ச்சிக்கு வித்திடுகிறது. வசனநடையில் அமையும் இவ் விவிலியம் எவ்வாறு கருத்துப் புலப்பாட்டில் வெற்றி சிறக்கிறது என்பதைக் காணும் நோக்கில் தென்னிந்தியத் திருச்சபையினருள் புராட்டஸ்டன்ட் பிரிவினர் பயன்படுத்தும் தமிழ் விவிலியம் இந்நூலில் அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டு, தேவைப்படும் இடங்களில் மட்டும் பொது மொழிபெயர்ப்புத் திருவிவிலியம் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளது.

கூறுவோனிடமிருந்து தொடங்கும் பேச்சு, கேட்போனைச் சென்றடைவதற்குக் கருத்து, வடிவம், சூழல், தொடர்பு, கருவி ஆகியனவும் உதவுகின்றன. மேலும் கருத்து, வடிவம் ஆகிய இரண்டனை ஒருசேரப் பார்க்கும்போது அமையும் 'ஒட்டுமொத்தம்' என்னும் தன்மையும் அக்கருத்துப் பரிமாற்றம் தொடர்பான பல்வேறு விடைகளை நல்கும். விவிலியத் தமிழின் நிறைகுறைகளை ஆராயும் இவ்வாய்வு ஒரு சமய உள்ளடக்கம் தெரிவிக்கப்படும் நெறிமுறைகளை இனங்காண உதவுவதுடன் அச்சமயக் கருத்துத் தெரிவிப்பில் 'கருத்து', 'கேட்போர்', 'கூற்று நிகழ்த்துவோர்' ஆகியோருக்குரிய பங்கினையும் தெளிவாகப் புலப்படுத்தும். ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட சான்றாதாரங்களின் அடிப்படையில் விவிலியத் தமிழின் ஒரு சில கூறுகளை இவ்வாய்வு புலப்படுத்துகிறதே தவிர இந்நூலில் கண்டறியப்படும் முடிவுகளே முடிந்த முடிவுகள் அல்ல. இவ்வடிப்படையில் விவிலிய நூலின் அனைத்து நூல்களையும் ஆராய்ந்தால்

அவ்வனைத்து நூல்களின் மொழி அமைப்பே விவிலியத் தமிழ் குறித்த முடிபாக அமையும். இவ்வாய்வு 'இன்னகருத்துக்கு இன்ன வடிவம்' என்ற அமைப்பு முறை விவிலியத்தில் இருக்கிறதா என்பதையும் விவிலியத்தமிழ் அமைப்பிற்கு மொழிபெயர்த்த காலச் சூழல் எந்த அளவிற்குக் காரணமாகிறது என்பதையும் காண முயற்சிசெய்கிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைந்துள்ள **தனிநாயக அடிகளார் அறக்கட்டளை** சார்பில், **'விவிலியத் தமிழ்'** என்ற தலைப்பில் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23ஆம் நாள் நிகழ்த்தும் சொற்பொழிவே இந்த நூலாக வெளிவருகிறது. சொற்பொழிவு ஆற்ற வாய்ப்புத் தந்ததோடு மட்டுமன்று சொற்பொழிவு ஆற்றுகின்ற அன்றே இந்நூலையும் வெளிக் கொண்டு வந்துள்ள நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும் அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் கு. பகவதி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலாக்கத்திற்குத் தேவையான நூல்களைத் தந்துதவிய திருச்சி தூய பவுல் இறையியல் கல்லூரியின் கல்விப்பிரிவுத் தலைவர் அருட் தந்தை முனைவர் சேவியர் இளங்கோ அவர்களுக்கு என் நன்றி. நான் இந்நூலினை எழுதும்போது எப்போதும்போல் எனக்குத் தேவையான சூழலை உருவாக்கித் தந்த எனது அன்பு அம்மா அவர்களுக்கும் என் அன்பான நன்றி.

அ. ஆலிஸ்

உள்ளடக்கம்

	பக்கம்
நூலறிமுகம்	1
சொல்லாட்சி	17
தொடரமைப்பு	54
உத்திகளும் மொழி அமைப்பும்	82
கருத்தோட்டமும் மொழி அமைப்பும்	120
ஆய்வு முடிவுகள்	127
துணை நூற்பட்டியல்	133

நூலறிமுகம்

எந்தவொரு சமய வேதமும் பொதுவாக அவ்வச்சமயம் தொடர்பான கோட்பாடுகளையும் தத்துவங்களையும் வரலாற்றினையும் விளக்கி நிற்கும். கிறித்தவ மறை நூலான விவிலியமும் இதற்கு விதிவிலக்கன்று.

பதினைந்தாம் நூற்றாண்டில் அய்ரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி குறிப்பிடத்தக்க ஒன்று. 15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் போர்ச்சுக்கீசியர்கள், பிரெஞ்சுக் காரர்கள், டச்சுக்காரர்கள் ஆகிய மேனாட்டுக் கிறித்தவர்கள் வணிகத்தின் பொருட்டும் அவர்களோடு கிறித்தவப் பாதிரிமார்கள் சமயத்தைப் பரப்பும் நோக்கிலும் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தனர். "பதினெட்டாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் அய்ரோப்பியர் ஆட்சி தமிழ்நாட்டில் ஏற்பட்டதும் மேனாட்டுச் செல்வாக்குத் தமிழ்நாட்டிலே தீவிரமாக இடம்பெறத் தொடங்கிற்று; ஆங்கிலக் கல்வி விருத்தியும் கிறித்துவமதப் பிரச்சாரமும் மேனாட்டுச் செல்வாக்குப் பரவுவதற்குக் கருவிகளாயின"[1] என்று இச்சூழலை விளக்குகிறார் ஆ. வேலுப்பிள்ளை. சமயத்தைப் பரப்பும் நோக்கில் வந்த பாதிரிமார்கள் தமிழ் மக்களோடு இணைந்து நின்று தம் மதத்தைப் பரப்புவதற்காகத் தமிழ் மொழியைத் தாம் கற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர். எனவே தமிழைக் கற்றுப் பின்னர்த் தம் சமயக் கருத்துகளைப் பரப்பினர். இவர்களால் தமிழ் பலதுறைகளில் தனிச் சிறப்பெய்தி ஏற்றம் பெற்றது என்று குறிப்பிடும் அறிஞர்கள் மேனாட்டுக் கிறித்தவர்களின் வருகையால் விளைந்த பல்வேறு வகையிலான வளர்ச்சிகளுள் தமிழ்மொழி அடைந்ததாகப் பின்வரும் முக்கியமானதொரு மாற்றத்தைக் குறிப்பிடுகின்றனர். "சிலருக்கு மட்டும் உரியதாக இருந்த தமிழை எல்லோர்க்கும் பொதுவாக்கிச் செய்யுள் தமிழை உரைநடைத் தமிழாக மாற்றிப் புதிய போக்கினை ஏற்படுத்தினர்"[2]. சமயத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்ட கிறித்தவர்கள் அச்சுக்கூடங்களை நிறுவினர். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த தரங்கம்பாடியில் முதல் அச்சுக்

கூடம் டேனிஸ் பாதிரிமார்களால் நிறுவப்பட்டது. "ஜெர்மனி நாட்டவரான ஸீகன்பால்கு என்பாரின் அரிய முயற்சியால் 1713ஆம் ஆண்டு முதல் தரங்கம்பாடியில் தமிழ் அச்சுப் புத்தகங்கள் வெளியிடப்பட்டன."[3] மக்களுக்கு விளங்கும் வகையில் எளிய உரைநடையில் தம் மதக்கருத்துகளை அச்சிட்டுத் துண்டுப் பிரசுரங்களாகவும் நூல்களாகவும் கொடுத்து மக்களை ஈர்த்துத் தம் கருத்துகளைப் பரப்பினர்.

1815ஆம் ஆண்டு சென்னை நகரத்தில் கிறித்துவ மதக் கொள்கைகளைப் பரப்புவதற்காக ஒரு சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கம் கிறித்துமத சம்பந்தமான துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு இலவசமாக வழங்கியது; படிப்பதற்குப் புத்தகங்கள் கிடைக்காத அக்காலத்தில் இந்தப் பிரசுரங்களை மக்கள் ஆவலாகப் படித்தனர். 1818 செப். 29இல் சென்னை சமயத் துண்டுப் பிரசுர சங்கமும் 1823 பெப்ரவரி 19இல் யாழ்ப்பாணத்தில் துண்டுப் பிரசுர சங்கமும் 1922 அக்டோபர் 31இல் பாளையங்கோட்டை மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் துண்டுப் பிரசுர சங்கங்களும் 1830ஆம் ஆண்டு நெய்யூரில் துண்டுப் பிரசுர சங்கமும் தொடங்கிச் செயல்பட்டமையும் 1855ஆம் ஆண்டு செய்யூர் சங்கமும் நாகர்கோவில் சங்கமும் ஒன்றாக இணைந்து தென்திருவாங்கூர் துண்டுப் பிரசுர சங்கம் என்னும் பெயருடன் செயலாற்றத் தொடங்கித் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டமையும் மதுரையிலிருந்த அமெரிக்கன் மிஷன், தஞ்சாவூர் துண்டுப் பிரசுர சங்கம், தரங்கம்பாடி மிஷன் ஆகிய சங்கங்களும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டமையும் இந்தப் பிரசுரங்கள் படிக்கும் பழக்கத்தை உண்டாக்கவும் புத்தகங்களை வாங்கிப் படிக்க இயலாதவர்களுக்கு உதவியாகவும் இருந்தன என்பதையும்[4] மயிலை.சீனி வேங்கடசாமி 'பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்' என்ற தமது நூலில் குறிப்பிடுகிறார்.

"சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டிலே துண்டுப் பிரசுரம் வெளியிட்டதும் அல்லாமல் திங்கள் இதழ்கள், வார இதழ்கள், செய்தித்தாள்கள் முதலியவற்றை முதன்முதலாக வெயியிட்டவர்களும் கிறிஸ்துவர்களே. கிறிஸ்துவர்களின் வெளியீடுகளைக் கண்ட இந்துக்களும் பிறகு வார இதழ், திங்கள் இதழ்களை வெளியிடத் தொடங்கினார்கள்"[5] என்று அவர் மேலும் விளக்குகிறார்.

இவ்வாறு வெளிநாட்டிலிருந்து வந்து கிறித்தவ மதம் தொடர்பாகவும் மற்றும் இலக்கிய, இலக்கணம் தொடர்பாகவும் பல்வேறு பணியாற்றியவர்களுள் வீரமாமுனிவர் (1680-1746), ஜி.யு.போப் (1820-1907), கால்டுவெல் (1815-1891), இராபர் டி நொபிலி (1577-1656), சீகன் பால்கு (1683-1791), ரேனியஸ் (1790-1838), லாசரஸ், கிரால், பெர்சிவல், வின்சுலோ, எல்லிஸ் போன்ற பலர் ஆற்றிய தமிழ்ப்பணிகள் குறிப்பிடத்தக்கவை. இவர்களது பணிகள் இலக்கியப்பணிகள், இலக்கணப்பணிகள், அகராதிப் பணிகள், உரைநடைப் பணிகள், மொழிபெயர்ப்புப் பணிகள் என்று பலவாறாய் அமைந்தன. இக்கால கட்டத்தில் கிறித்தவர்களின் புனிதவேதமாகக் கருதப்படும் பைபிளைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தமிழில் பவர் (Bower) மொழிபெயர்ப்பு, கத்தோலிக்க மொழி பெயர்ப்பு, பொது மொழிபெயர்ப்பு ஆகியவை பெரும் பணிகளை உள்ளடக்கிச் செல்வாக்குப் பெற்றனவாகத் திகழ்கின்றன. "பவர் மொழிபெயர்ப்பு தமிழகத்தில் உள்ள வெவ்வேறு சீர்திருத்தச் சபைகளை இணைக்கக்கூடியதாகவும் நிலையான மொழிபெயர்ப்பாகவும் இருக்க வேண்டும் என்பது வேதாகமச் சங்கத்தின் அன்றைய நிபந்தனையாகும்"[6] என்பார் அருள்தந்தை வி.மி. ஞானப்பிரகாசம். விவிலியத்தின் மூலமொழிகள் குறித்தும் மேற்சுட்டப்பட்ட மூன்று மொழிபெயர்ப்புகளும் மூலமாக எவற்றைக் கொண்டன என்பது குறித்தும் த. எஸ்தர் நான்சி பியூலா தனது 'தமிழில் விவிலிய மொழிபெயர்ப்புகள் - ஓர் ஒப்பாய்வு' என்ற நூலில் குறிப்பிடும் கருத்துகள் பின்வருமாறு:

"விவிலிய மூல மொழிகள்:

பழைய ஏற்பாடு	- எபிரேயம்/அரமேயு
இணைத்திருமுறைகள்	- செப்துவஜிந்து/கிரேக்கம்
புதிய ஏற்பாடு	- கொய்னே/கிரேக்கம்

பவர் மொழிபெயர்ப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட வாசகமான Textus Receptus என்ற கிரேக்கப் புதிய ஏற்பாட்டையும் பப்ரிசியசின் மொழி பெயர்ப்பையும் அடிப்படையாகக் கொண்டு மொழிபெயர்க்கப்பட்டதாகும். கத்தோலிக்க மொழிபெயர்ப்புகளான,

1. பாரிஸ் அந்நிய வேத போதகக் குழுவினரின் புதிய ஏற்பாடு (1857), பாண்டிச்சேரி

2. கத்தோலிக்க இயேசுசபை சார்ந்த திரிங்கால் அடிகளாரின் புதிய ஏற்பாடு (1889), திருச்சிராப்பள்ளி
3. அருள்திரு பொத்தேரோ தலைமையிலான பாரிஸ் அந்நிய வேத போதகக் குழுவினரின் விவிலியம் (1910), பாண்டிச்சேரி
4. தூத்துக்குடி தமிழ் இலக்கியக் கழகம் வெளியிட்ட முழு விவிலியம் (1960)

இவை யாவும் இலத்தீன் 'வுல்காத்தா' (Vulgate)வை மூலமாகக் கொண்டவையாகும்.

1970இல் வெளியான தமிழக ஆயர்களின் மொழி பெயர்ப்பான கத்தோலிக்கப் புதிய ஏற்பாடுதான் முதன் முதலில் மூலமொழியான கிரேக்கத்திலிருந்து மொழிபெயர்க்கப் பட்டது.

பொது மொழிபெயர்ப்பு முழுவதும் மூலநூல்களி லிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. இம்மூலங்கள் அண்மையில் கிடைத்திருக்கும் பழஞ்சுவடிகளின் புதிய ஆராய்ச்சிப் பதிப்புகளினின்று உருவாக்கப்பட்டனவாகும்."[7]

இவ்வாறு பல்வேறு நிலைகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ள விவிலியம் தமிழில் வேதம், வேதாகமம், மறை எனப் பல்வேறு பெயர்களால் குறிக்கப் பெறுகின்றது. நூல் என்ற பொருள்படும் பிப்ளோஸ் (Biblos) என்ற கிரேக்கச் சொல்லிருந்து[8] ஒலிபெயர்ப்புச் செய்யப்பட்ட சொல்லே விவிலியம் என்ற சொல் ஆகும்.[9] ஆங்கிலத்தில் இது பைபிள் (Bible) என்று குறிப்பிடப்படுகிறது. "பவர் முழு விவிலியத்திற்கும் 'சத்திய வேதம்' எனப் பெயரிட்டு வெளியிட்டார். அது தற்போது 'பரிசுத்த வேதாகமம்' என்ற பெயரில் பதிப்பிக்கப் படுகிறது. கத்தோலிக்க விவிலியமும் (1973) பரிசுத்த வேதாகமம் என்றே பெயர் பெற்றுள்ளது. இன்றைய வழக்கில் 'திருமறை', 'திருநூல்' ஆகிய பெயர்களும் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, திருமறை என்னும் சொல் சீர்திருத்தச் சபையினரிடையே வழங்கும் சொல்லாகும். தற்போது உருவாக்கப்பட்டுள்ள பொதுமொழிபெயர்ப்பு பழைய ஒலிபெயர்ப்புச் சொல்லான 'விவிலியம்' என்பதை அடியொற்றி 'திருவிவிலியம் - பொதுமொழிபெயர்ப்பு' எனப் பெயரிடப்பட்டுள்ளது. 'திருவிவிலியம்' என்ற சொற்றொடர் ஆங்கிலத்தில் உள்ள 'Holy Bible' என்பதற்கு இணையாக உள்ளது."[10]

விவிலியத்தில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இருபகுதிகள் உள்ளன. பழைய ஏற்பாடு 39 நூல்களையும், புதிய ஏற்பாடு 27 நூல்களையும் உள்ளடக்கியவை. இவ்வமைப் பிலேயே சீர்திருத்தச் சபைகள் பின்பற்றும் விவிலியம் உள்ளது. பழைய ஏற்பாட்டில் அடங்கியுள்ள நூல்களைச் சட்ட நூல்கள், வரலாற்று நூல்கள், கவிதை நூல்கள், இறைவாக்கு நூல்கள் என வகைப்படுத்துவர். புதிய ஏற்பாட்டில் அடங்கும் நூல்களை நற்செய்தி நூல்கள், வரலாற்று நூல், திருமுகங்கள், இறைவாக்கு நூல் என்று வகைப்படுத்துவர்.

"பாலஸ்தீனத்து யூதர்கள் எபிரேய மொழியில் உள்ள முப்பத்தொன்பது நூல்களை மட்டுமே பழைய ஏற்பாடாக ஏற்கின்றனர். பாலஸ்தீனத்துக்கு வெளியே வாழும் யூதர்கள் கிரேக்க மொழிபெயர்ப்பான 'செப்துவஜிந்து' (Septuaginta) வில் உள்ள நாற்பத்தாறு நூல்களையும் ஏற்றுள்ளார்கள். யூதர்கள் இன்றளவும் பழைய ஏற்பாட்டை மட்டுமே தங்கள் வேதமாகக் கொண்டுள்ளார்கள். புதிய ஏற்பாட்டை அவர்கள் ஏற்பதில்லை"[11] என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. கத்தோலிக்க விவிலியத்தில் கூடுதலாகச் சில நூல்கள் இணைக்கப்பட்டுள்ளன. சீர்திருத்தச் சபை விவிலியத்திற்கும் உரோமன் கத்தோலிக்க விவிலியத்திற்கும் பழைய ஏற்பாட்டில் இவ்வாறு நூல்களின் எண்ணிக்கை வேறுபடும் சிக்கலினைத் தீர்க்கும் பொருட்டு, 'செப்துவசிந்தா' (எழுபதின்மர் மொழிபெயர்ப்பு) எனப்படும் கிரேக்க விவிலியத்தில் காணப்படும் தோபித்து, யூதித்து, சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம், பாரூக்கு, 1. மக்கபேயர், 2. மக்கபேயர் ஆகிய ஏழு நூல்களையும் எஸ்தர், தானியேல் நூல்களில் காணப்படும் கிரேக்க இணைப்புகளையும் 'இணைத்திருமுறை' என்ற பெயரில் பொது மொழிபெயர்ப்புத் திருவிவிலியத்தில் தனிப்பகுதியாக இணைத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விவிலியத்தில் உள்ள நூல்களைச் சிலவகைகளுள் அடக்கிக் காண விரும்புவோர் அதில் வாழ்க்கை வரலாறுகள், கதைகள், பேருரைகள், இறைவிண்ணப்பங்கள், பாடல் வகைகள், பழமொழிகள், விடுகதைகள், உவமைக் கதைகள் (Parables), சுருக்க உரைகள் (Epigrams), மரபு வரிசைகள் (Genealogies) மற்றும் வரலாற்றுச் செய்திகள் (Chronologies) போல்வன அடங்கியுள்ளன என்பர்.[12]

இத்தகைய பல்வேறு நூல்களைத் தன்னுள் அடக்கியுள்ள விவிலியம் இறையருளால் அருளப்பட்டது என்று கிறித்துவ மதத்தினரால் முழுக்க முழுக்க நம்பப் பட்டாலும் பொதுவாகப் பல்வேறு சீடர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள் போன்ற தனிமனிதர்களின் நூல்கள் விவிலியத்தினுள் காணப்படுவதால் இறைச் செய்திகள் 'கூறுவோர்' என்ற தனிமனிதரின் கூற்றுத் திறத்தை வைத்தே கேட்போராகிய மக்களைச் சென்றடைய வேண்டியிருக்கிறது என்ற உண்மையும் மற்றொருபுறம் உண்டு.

படைக்கப்படும் எந்த ஒரு நூலின் அமைப்பும் பொதுவாக 'வடிவம்', 'கருத்து', 'வடிவம் மற்றும் கருத்து ஆகிய இரண்டனையும் ஒருசேரக் காணும் ஒட்டுமொத்தம்' ஆகிய மூன்று தன்மைகளின் அடிப்படையில் இனங்காணப்படக் கூடும். அதாவது நூலின் வடிவம், கருத்து, ஒட்டுமொத்தம் மூன்றனையும் ஆராயும்போது அந்நூலின் கட்டமைப்பு புலனாகும். பொதுவாக ஒரு படைப்பின் (நூலின்/இலக்கியத்தின்) அமைப்பு குறித்து ஆராய்வோமாயின் படைப்பிலக்கியத்தின் கட்டமைப்பைக் கணிப்பதற்கென விதிகள் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. ஸ்ட்ரக்சர் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு "இலக்கியத்தின் பகுதிகளின் ஒன்றுக்கொன்றுள்ள உறவுமுறைகளின் தொகுப்பு"[13] என்று இலக்கிய அகராதி பொருள் கூறுகிறது. மொழியின் அமைப்பினை ஆராயும் சசூர் "மொழியின் அமைப்பு கருத்து, வடிவம், அவற்றின் தொடர்பு என்ற மூன்றையும் உள்ளடக்கியது"[14] என்பார். ஜீன்பியாஜெட், "கவிதையின் கட்டமைப்பு ஒட்டுமொத்தம் என்னும் தன்மை, ஒன்றிலிருந்து இன்னொன்றை ஆக்குதல் என்னும் தன்மை, சுயக்கட்டுப்பாடு என்னும் தன்மை என்ற மூன்றையும் உள்ளடக்கியது" என்பார்[15]. இவரது கூற்று கவிதையின் பகுதிகள் இணைக்கப்பட்டுள்ள முறையில் காணலாகும் வரிசை முறை, முழுமை, விதிகள், மாறும்தன்மை முதலியவற்றைச் சுட்டுகிறது. வினிஃப்ரெட் நொவோட்னி, "கவிதையை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது கவிதையின் பொருளைப் பார்க்கிறோம். ஆயின் கவிதையின் கூறுகளைப் பார்க்கும்போது ஒரு வார்த்தை, தொடர், பெயர்த்தொடர், பாடலின் ஒரு வரி முதலியவற்றின் பாதிப்புக்களைப் பார்க்கிறோம்"[16] என்று விளக்குகிறார். இவரது கருத்திலும் நூலின் அமைப்பினை ஒட்டு மொத்தமாகப் பார்த்தல், பகுதிகளாகப் பார்த்தல் என்ற இரு அணுகு

முறைகளைப் பார்க்க முடிகிறது. ஜோனதன் காலஸி செய்திப் பரிமாற்றம் (Communication) என்ற நிகழ்ச்சியை அப்படியே கவிதைக்கும் விளம்பரத்திற்கும் பொருத்திப் பார்க்கிறார்.[17] ரோமன் யக்கோப்சன் மொழியின் கட்டமைப்பை விளக்கு வதற்குப் பேச்சு என்ற நிகழ்ச்சியையே உதவியாகக் கொள்கிறார். எந்தப் பேச்சுச் செயலும் ஆறு உறுப்புக்களைக் கொண்டதாகக் கூறிப் பின்வருமாறு விளக்குகிறார்.[18]

சூழல்
செய்தி
கூறுவோர் ———————— கேட்போர்
தொடர்பு
கருவி

நாட்டுப்புற இயலிலும் கூட இலக்கியங்களின் கூறுகளைக் கணித்தல் முக்கிய ஆய்வு முறையாகக் கொள்ளப்படுகிறது. கதையின் உள்ளமைப்பைப் பகுதிகளாகப் பிரித்து அப்பகுதிகள் ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள தொடர்பினையும் அப்பகுதிகள் யாவும் ஒருங்கிணைந்து தரும் முழுமையினையும் பிராப் நாட்டுப்புறக் கதைகளின் அமைப்பு[19] என்று கொள்கிறார். குறிப்பிட்ட இலக்கிய வகையின் அமைப்பு, கூற்று நிகழ்த்துவோருக்கேற்பவும் மாறுபடலாம்; பேசப்படும் கருத்திற்கேற்பவும் மாறுபடலாம். "இலக்கிய மரபுகளினால் எதிர்பார்க்கப்படும் கூறுகள் கவிதைகளில் அடங்கியிருக்கின்றன. அவை பொதுப் பேச்சுமொழியிலிருந்து எவ்வாறு வேறுபடுத்திக் கவிதை மொழியை ஆக்கிக் கொள்கின்றன''[20] என்று கவிதையைப் பற்றி ஜோனதன் கல்லர் கூறுதல் போல அவ்வப் படைப்பு சார்ந்த மரபு காரணமாக யார் யாரிடம் என்ன பேசலாம்; எவரெவரிடம் பேசலாம்; என்ன முறையில் பேசலாம் என்று பேசுவோர், பேசப்படும் கருத்து முதலியவற்றில் ஒரு வரன்முறையினைக் காண முடிகிறது. மேற்சுட்டப்பட்ட அறிஞர் பெருமக்களின் கருத்துகளின் அடிப்படையில் பார்த்தால் எந்த ஒரு படைப்பையும் அது கவிதையோ, உரைநடையோ, கட்டுரையோ, பேச்சுச் செயலோ எதுவாக இருப்பினும் அதன் அமைப்பைக் கணிப்பதற்குப் பின்வரும் கூறுகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

1. LÚjõ (ûNn§) (Message)
2. வடிவம் (Form)

3. ஒட்டுமொத்தமாகிய கருத்து வடிவத் தொடர்பு (Totality)
4. கூறுவோர் (Speaker)
5. கேட்போர் (Hearer)
6. சூழல் (Context)
7. தொடர்பு (Contact)
8. கருவி (Code)

இக்கூறுகளுள் ஒன்றாகிய கருவி என்னும் மொழி மட்டும் ஒரு படைப்பில் அமைந்திருக்கும் பான்மையினை ஆராயப் புகுந்தாலும் கூட முந்தைய ஏழு கூறுகளுக்கும் முக்கியத்துவமும் கவனமும் கொடுத்தாக வேண்டும்; ஏனெனில் பயன்படுத்தப் பட்டுள்ள கருவியாகியமொழி முந்தைய ஏழு கூறுகளுடனும் தொடர்புடையதாகவே அமைகிறது. மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் விவிலியத்தின் மொழிச்சிறப்பை இனங்காணுவதற்கும் இதேமுறையே பொருந்தும். "கிறிஸ்துவர் பைபிள் என்னும் விவிலிய நூலையும் கிறிஸ்துவமதச் சார்பான வேறு பல நூல்களையும் வசனமாக எழுதி அச்சிட்டார்கள்; தமிழ் வசன நடை வளர்ச்சிக்கு ஊக்கம் ஊட்டியவர் கிறிஸ்துவர்களே..... கிறிஸ்து மதத்தைப் பரவச் செய்வது நோக்கமாகக் கிறிஸ்துவர் இவற்றையெல்லாம் செய்தார்கள். இந்தத் தொண்டுகள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் வாய்ப்பாக இருந்தன. ஆகவே இதுவும் அவர்கள் செய்த தமிழ்த் தொண்டாகும்"[21] என்ற மயிலை சீனி. வேங்கடசாமியின் கூற்று விவிலிய மொழிபெயர்ப்புகளில் வசன நடையின் இன்றியமையாமை குறித்தும் விவிலியம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட காலச் சூழலில் கிறித்தவர்கள் உருவாக்கிய இவ்வசன நடை பிற்காலத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வாய்ப்பாக அமைந்ததையும் விளக்குகிறது. எனவே விவிலிய வசனநடைத் தமிழை இனங்காணும்போது அங்குப் பேசப்படும் கருத்து, வடிவம், ஒட்டுமொத்தம், கூறுவோர், கேட்போர், சூழல், தொடர்பு ஆகிய பல்வேறு கூறுகளையும் கவனத்தில் கொண்டால் கருவியாகிய மொழியின் சிறப்பை அது வெளிப்படுத்தும் என்பது தெளிவு.

நோக்கம்

வேற்றிடத்திலிருந்து வந்து பண்பாடு, மொழி ஆகியவற்றில் வேறுபடும் புதிய ஓரிடத்தில் தம் மதக் கருத்துகளைப் பரப்ப வேற்று நாட்டவர் எடுத்துக் கொண்ட

முயற்சியின் வளர்ச்சி நிலையில் தமிழ் வளர்ச்சிக்கு உதவும் வகையில் அமைந்த தமிழ் விவிலியம் தான் பேச எடுத்துக் கொள்ளும் கருத்தை மக்களிடம் சென்று சேர்ப்பதற்கு மொழி சார்ந்து பயன்படுத்தியுள்ள உத்திகளை இனங் காண்பதும் அவ்வுத்திகள் விவிலியத்தின் வழி நிகழும் கருத்துப் பரிமாற்றம் வெற்றி பெறுவதற்கு உதவியுள்ள பான்மையினை ஆராய்வதும் இந்நூலின் நோக்கங்களாவன. விவிலியம் பேச எடுத்துக் கொள்ளும் செய்திகளோ பரந்துபட்ட அளவிற்குட்பட்டவை. இப்பெரிய நூலினை மொழிபெயர்த்து உருவாக்கும் பணியில்- கருத்துகளை மக்களிடம் சேர்க்கும் கருத்துப் பரிமாற்றத்தில் அதில் கையாளப்பட்டுள்ள மொழி கை கொடுப்பதற்கும் தடையாக இருப்பதற்கும் மொழிபெயர்க்கப்பட்ட காலச்சூழல் ஒரு காரணமாக அமைகின்றதா என்று காண்பதும் நோக்கமாக அமைகிறது.

சான்றாதாரங்கள்

விவிலியம் ஒரு பரந்து பட்ட கடல் போலப் பல்வேறு வகையான நூல்களை உள்ளடக்கியது என்பது ஏற்கெனவே சுட்டப்பட்டது. இவற்றுள் ஏதாவது ஒரு நூலினை மட்டும் தெரிந்தெடுத்து அப்பகுதியின் மொழி அமைப்பினை ஆராய்ந்தால் அப்பகுதியை எழுதியவரின் வெளிப்பாட்டுத் திறனும் அதனை மொழிபெயர்த்தவரின் மொழித்திறனும் புலனாகும். அவை மட்டுமல்ல; அவ்வாறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் ஒரு நூலின் மொழி அமைப்பையும் முடிவுகளையும் விவிலியத்தின் பிற நூல்களுக்கும் மாதிரியாகக் கொள்ள ஏதுவுண்டு. சான்றாக, மத்தேயு எழுதிய நற்செய்திப் பகுதியை எடுத்து அப்பகுதியில் கையாளப்பட்டுள்ள தமிழை இனங்கண்டால் மத்தேயுவின் கருத்து வெளிப்பாட்டுத் திறனும், அப்பகுதியை மொழிபெயர்த்த மொழிபெயர்ப்பாளரின் மொழியைக் கையாளும் திறனும் புலனாகும். இவ்வகையில் ஆய்வதன் பயன் கருதி விவிலியத்தில் உள்ள அனைத்து நூல்களுக்கும் மாதிரியாக, மத்தேயு என்ற நற்செய்தி நூல் மட்டும் இங்குச் சான்றாதாரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. மத்தேயு நூல் மட்டுமன்றிப் பரவலாகச் சில வசனங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

கிறித்துவ மத போதகர்களாலும், கிறித்தவர்களாலும் திரும்பத் திரும்பப் பேசப்படும் விவிலியச் செய்திகள்

(வசனங்கள்) பல உள்ளன. பொதுவாக விவிலியத்தின் சில பகுதிகள் அதிகமாகச் சுட்டப்படுவதில்லை. மாறாக, சில சம்பவங்கள், சில வசனங்கள் அதிகமாக மேற்கோள்களாகச் சுட்டப்பட்டோ அல்லது அருளுரை தயாரிப்பதற்கு உதவும் நூல்களிலோ அல்லது செய்தியாகவோ அல்லது துண்டுப் பிரசுரங்கள் மற்றும் மாத இதழ்களில் செய்தியாகவோ திரும்பத் திரும்பப் பேசப்படுகின்றன. இவ்வாறு விவிலியத்தில் அங்கும் இங்கும் உள்ள சில வசனங்கள் அடிக்கடிச் சுட்டப்படுவதற்குச் சில காரணங்கள் இருக்க வேண்டும்.

ஹோமிலி என்ற சொல் சமய நற்போதனையைக் குறிக்கும். “கிரேக்கச் சொல்லான 'homilia' என்ற பதத்திலிருந்து உருவான 'Homily' என்ற சொல் இன்று ஒரு கூட்டத்தினருடன் உரையாடும் முறையோடு தொடர்புபடுத்தப்படக் கூடுவதை விடவும் மிகுந்த நெருக்கமான முறையில் எதிரிலிருப்போரை விளித்து உரையாடும் வடிவத்தைக் குறிக்கும். போதனை என்பதற்குப் புதிய ஏற்பாட்டில் மிகவும் அடிக்கடி பயன்படுத்தப்படும் சொல் 'keryssein' என்பதாகும். இதன் பொருள் உரிமையோடு அதிகாரமாக அறிவித்தல் (to proclaim) என்பதாகும். போதகர்களும் முன்னறிவிப்போரும் தங்களது சொந்த அதிகாரத்திலல்லாமல் அவர்களை அனுப்பிய ஒருவரின் (கடவுளின்) அதிகாரத்தின்படி அறிவிக்கும் பொறுப்புரிமை பெற்றதனால் அறிவிக்கும் செய்திகளை அப்படியே சரி என ஏற்றுக்கொள்ளும் வகையிலான அறிவிப்பு என்பதை இச்சொல் குறிக்கும்”[22] என்று சுவிசேஷ அறிவிப்பு அல்லது சமய நற்போதனை (பிரசங்கம்) குறித்து ஹெரால்டு அ. பியூடௌ விளக்குகிறார்.

ஐக்கியக் குடியரசுகளின் பேராயர்கள் ஹோமிலி எனப்படும் சமய நற்போதனை பற்றி, “முறை வாசகச் சுவடிகளில் (Liturgy) குறிப்பிடப்படும் வசனங்கள் மற்றும் உணர்ச்சிக் குறிப்புகள் மூலமாக விசுவாசத்தில் கடவுளின் ஊக்கமான பிரசன்னத்தை உணரவும் அவரது பிரசன்னத்தை உணர்ந்ததை நடவடிக்கைகளில் காட்டுவதற்கு - பொது வழிபாட்டு முறை வாசகச் சுவடிகளில் (Liturgy) குறிப்பிடப்படும் வசனங்கள் உணர்ச்சிக் குறிப்புகள் மூலமாகவும் விசுவாசத்தில் அதற்கும் மேலாக இயேசு அருளிச் செய்த நற்செய்தியில் மனம் இயைந்து

உறுதிப்பாட்டுடனான வாழ்வை வாழ்ந்து காட்டுதற்கு வழிவகை செய்யும் மனித வாழ்க்கை இருப்பு குறித்துக் கூறும் ஒரு சமய விளக்கம்''[23] என்று விளக்குகின்றனர். இப்போதனைகள் விவிலியத்தின் பல்வேறு வசனங்களின் அடிப்படையில் அமைகின்றன.

"இத்தகைய சமய நற்போதனைகளின் நோக்கம் ஒன்று விடுதலை பெற உதவுதலும் மற்றொன்று அப்போஸ்தலர்களை உருவாக்குதலும் ஆகும்; ...நற்போதனைகளைக் கேட்போரை நம்பிக்கையிலும் அன்பிலும் வழிகாட்டிப் பிதாவிடம் சேர்வதற்கு ஒரே வழியான இறைமகன் இயேசுவைப் பின்பற்றச் செய்யும்படி மனந்திரும்பச் செய்தலும் விடுதலை பெறுதல் என்பதைக் குறிக்கும்"[24] என்பார் ஹெரால்டு அ. பியூடௌ. அப்போஸ்தலர்களை (சுவிசேஷப் பணி செய்வோர்) உருவாக்கும் பணி இறுதியாக மூன்று பணிகளை உள்ளடக்கியது. முதலாவது Kerygma - அதிகார அறிவிப்பு எனப் பொருள்படும்; விசுவாசம் குறித்த அடிப்படை உண்மைகளைப் போதித்தல்; இரண்டாவது didascalia அல்லது didache- கோட்பாட்டு வரிகளுடன் மேலும் விளக்கக் குறிப்புகளை அளித்தல். இறுதியானது ஹோமிலியா- உண்மையில் ஏற்கெனவே சொல்லப்பட்டது போல ஒரு தலைமை தாங்கும் பேராயர் அல்லது போதகர் தன் மக்களுக்கு மறைச் செய்திகளை எளிமையான வழியில் ஒரு தந்தையைப் போலப் பேசி விளக்குதல் ஆகும்.[25]

இப்படிப்பட்ட சமய நற்போதனை சிலுவையில் அறையப்பட்டதை அன்புடன் ஏற்றுக் கொண்ட இயேசுவின் செயலையும் அதாவது தான் அத்தகைய ஒரு செயலைத் தெரிந்தெடுக்காமல் பிதாவாகிய தேவனின் (தன் தந்தையின்) விருப்பத்திற்கு அன்புடன் தன்னை ஒப்புக் கொடுத்த செயலையும் கிறிஸ்தவ வாழ்க்கைப் போராட்டத்தில் தினமும் எதிர்படுகின்ற சிலுவைகளை நாமும் அவர் வழி ஏற்றுக் கொள்ளுதலை மையமாகக் கொண்டதாக அமைய வேண்டும்.[26]

இச்சமய நற்போதனைகளைக் கேட்கும் திருச்சபை மக்களும் பல்வேறு விதங்களில் வேறுபடுகின்றனர். "திருச்சபையில் பல வேறுபாடுகள் உள்ளன. ஆண், பெண்; வயதானவர்கள், இளைஞர்கள்; வெற்றியடைந்தோர், தோல்வியடைந்தோர்; மகிழ்ச்சியில் இருப்பவர்கள், துயரத்தில்

இருப்பவர்கள்; தணியாப் பற்றுடையவர்கள், அரை மனதானோர்; வலிமையுடையோர், வலிமையிழந்தோர்; அறிவுடையோர், அறிவில்லாதோர் எனப் பலர் அங்கிருப்பர். ஒவ்வொரு தனிமனிதரும் அவரவருக்கு வேண்டிய குறிப்பிட்ட தேவைகளைக் கருத்தில் கொள்வர். எனவே இத்தகைய முரண்பட்ட எதிர்பார்ப்புகள் ஒரு ஆக்கபூர்வமான மற்றும் விரைந்த பாதிப்பை ஏற்படுத்துகிற செய்திக்குத் தளம் அமைக்கின்றன. ஆனால் அங்கு ஒரு ஒற்றுமையும் உள்ளது - கடவுளின் மக்களாகிய இவர்கள் எல்லோரும் கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள்; இவர்கள் ஒரு பொதுவான விசுவாசத்தை உடையவர்களாயும் தம்மைச் சுற்றியுள்ள உலகத்தை ஒரு குறிப்பிட்ட வழியில் விளக்குபவர் களாகவும் உள்ளனர்"[27] என்று சமய நற்போதனைகளைக் கேட்க ஆலயத்திற்கு வரும் திருச்சபை மக்களாகிய அருட்செய்தியைக் 'கேட்போர்' விளக்கப்படுகின்றனர்.

இவ்வாறு பல்வேறு வகைகளில் வேறுபட்டும் சில வகைகளில் ஒன்றுபட்டும் விளங்கும் செய்தி கேட்போராகிய கிறித்தவப் பொதுமக்களுக்கெனப் பெரும்பான்மையும், பிற மக்களுக்கெனச் சிறுபான்மையும் அவர்களை நோக்கிச் செய்திகளை முன்வைக்கும் ஆயர்கள் அடிக்கடி குறிப்பிடும் வசனங்கள், கிறித்தவ மக்கள் தத்தம் வாழ்க்கையில் அடிக்கடி விரும்பிப் பயன்படுத்தும் வசனங்கள் முதலியவையும் கருத்தில் கொள்ளப்பட்டால் அவையும் மக்களை ஈர்த்திருப்பதற்குக் கருத்துடன் இணைந்து மொழியும் ஒரு காரணமா என்பது புலனாகும். சங்கீத புத்தகத்திலிருந்து பல்வேறு தியானங்களைச் 'செயல்படும் தேவன்' என்ற தலைப்பில் மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ள அருள்திரு தியோடர் வில்லியம்ஸ் தான் சங்கீதங்களின் பால் ஈர்க்கப்பட்டதற்கான காரணங்களாகக் குறிப்பிடுபவை பின்வருமாறு: "இவற்றில் மனித இதயத்தின் பல்வேறு மனநிலைகளும் உணர்ச்சிப் பெருக்குகளும் துல்லியமாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மனித வாழ்வில் ஏற்படும் வியாதிப் படுக்கை, பாடுகள், தனிமை, மனமுறிவு, அச்சுறுத்தும் திகில், மரணம் ஆகிய கார்மேகங்களைக் கிழித்துக் கொண்டு அன்புள்ள, ஜீவிக்கிற, சகலவற்றையும் அரசாளுகிற கடவுள் மீது வைக்கும் தளராத பற்றுறுதியை இவை மெய்யாக எடுத்துக்காட்டுகின்றன.

சங்கீதங்கள் மனித வாழ்வில் சகல நிலைகளுக்கும் அனுபவங் களுக்கும் ஏற்ற விதமாக நம்மோடு பேசுகின்றன. ஏனெனில் அவைகள் அத்தகைய சூழ்நிலைகளில் கடவுளது நிலைமாறா அன்பையும், கிருபையையும் பெற்றனுபவித்த நம்மைப் போன்ற மனிதரால் எழுதப்பட்டவை. இவ்விதமாக இஸ்ரவேலின் இனிமையான பாடல்களுடன் இணைந்து வாழ்வதும் ஆழ்ந்து படிப்பதும் மற்றும் அவற்றிலிருந்து பிரசங்கிப்பதும் எனக்கு ஆவியானவரின் மிகுந்த அருளாற்றலையும் ஆசீர்வாதங் களையும் கொண்டு வந்தன"[28]

இக்கூற்றின் அடிப்படையிலேயே கிறித்தவ மக்கள் விவிலியத்தோடு கொண்டுள்ள தொடர்பினையும் மக்கள்தம் மனநிலையினையும் விளக்க முடியும். மனிதன் வாழ்வில் எதிர்கொள்ளும் பல்வேறு அனுபவங்கள், அவை தொடர்பான மனநிலைகள், விளைவாகக் கடவுளோடு கொள்ளும் உறவு வலுப்படுதல் ஆகியவை தொடர்பான வசனங்கள் திரும்ப திரும்ப கிறித்தவ உலகில் கவனத்தைப் பெறுகின்றன. எனவே அங்கும் இங்குமாகப் பரவலாகத் தெரிந்தெடுக்கப்படுகிற வசனங்களும் ஆய்வில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவது சிறந்தது என்பதால் வாய்ப்பு மாதிரி முறையில் (Random Sampling Method) அங்குமிங்குமாகப் பல வசனங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. எனவே இவ்வாய்விற்கான ஆதாரங்கள் பின்வருமாறு:

1. மத்தேயு எழுதிய நற்செய்தி நூல்
2. வாய்ப்பு மாதிரி முறையில் பரவலாகத் தெரிந்தெடுக்கப்பட்ட வசனங்கள்

இவ்வசனங்கள் அனைத்தும் சீர்திருத்தச் சபையினர் (தென்னிந்தியத் திருச்சபை பிரிவைச் சார்ந்த புராட்டஸ்டன்ட் பிரிவினர்) பயன்படுத்தும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (பரிசுத்த வேதாகமம், இந்திய வேதாகம சங்க வெளியீடு, பெங்களூர்) எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. தேவைப்படும் இடங்களில் பொது மொழிபெயர்ப்பு (திருவிவிலியம் (இணைத்திரு முறையுடன்) பொதுமொழி பெயர்ப்பு, Tamilnadu Biblical Catechetical & Liturgical Centre Publication, Tindivanam, India, 1995) ஒப்பிடப்படுகிறது.

அணுகுமுறை

மேற்சுட்டப்பட்ட ஆதாரங்கள் அடிப்படைகளாக அமைய, இந்நூல் 'சொல்லாட்சி', 'தொடரமைப்பு', 'உத்திகளும் மொழி அமைப்பும்', 'கருத்தோட்டமும் மொழி அமைப்பும்' என்ற நான்கு இயல்களாக அமைந்துள்ளது. சமய வேதங்களின் நோக்கம் தான் சொல்ல வரும் கருத்தைக் கேட்போனுக்குக் கொண்டு சேர்த்துக் கேட்போனின் மனதில் பாதிப்பை ஏற்படுத்திக் கேட்பவனைக் கடவுளை நோக்கி ஈர்ப்பது ஆகும். இத்தகைய கருத்துத் தெரிவிப்பில் கேட்போன் உடனடியாகத் தனது கருத்தையோ, உணர்வையோ தெரிவிக்கும் வாய்ப்பு இல்லை எனினும் பொதுவாகக் கேட்போனின் உள்ளத்தில் பாதிப்பு ஏற்படுவது திண்ணமே. அப்பாதிப்பின் விளைவு பின்னர் வெளிப்படுத்தப்படும். இவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் விவிலியத் தமிழில் எத்தகைய சொற்கள் தெரிவுசெய்து பயன்படுத்தப்படுகின்றன; எத்தகைய தொடர் களால் என்னென்ன கருத்துத் தெரிவிப்புகள் நிகழ்கின்றன; கூறுவோருக்கும் கேட்போருக்கும் இடையே கருத்துத் தெரிவிப்பு நிகழும்போது அதற்கெனவே என்னென்ன சிறப்பான உத்திகள் கையாளப்படுகின்றன; அவ்வுத்திகள் கையாளப்படு வதன் நோக்கங்கள் யாவை? கூறுவோருக்கும் கேட்போருக்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றத்தில் இருவருக்குமிடையே யான தொடர்புடனான கருத்தோட்டம் தங்குதடையில்லாமல் செல்கின்றதா? அதற்கு மொழி எத்தகைய பங்காற்றுகிறது என்பனவற்றை இவ்வியல்கள் ஆராய்கின்றன.

ஒரு நூல் மற்றும் ஒரு சில வசனங்களின் அடிப்படையில் விவிலியத் தமிழ் குறித்து மேற்கொள்ளப்படும் இவ்வாய்வு விவிலியத் தமிழின் முழுமையைப் புலப்படுத்தும் என்று கூற முடியாவிட்டாலும் விவிலியத்தமிழின் பரந்துபட்ட அமைப்பினைப் புலப்படுத்தும் என்பதில் அய்யமில்லை. இம்முறையிலேயே விவிலியத்தின் ஒவ்வொரு அதிகாரத்தையும் ஆய்வு செய்து விவிலியம் முழுமையையும் ஆய்வு செய்தால் அம்முடிவுகள் விவிலியத் தமிழின் முழுமையையும் காட்டுவதாக அமையும். அவ்வாய்வு விவிலியத் தமிழின் சிறப்பைப் புலப்படுத்துவதுடன் அம்மொழிப் பயன்பாட்டில் கொண்டுவர வேண்டிய மாற்றங்களையும் புலப்படுத்தும்.

குறிப்புகள்

1. ஆ. வேலுப்பிள்ளை, **தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்**, ப. 188.
2. தி. அரங்கநாதன் மற்றும் கா. வாசுதேவன், **தமிழ் இலக்கிய வரலாறு - ஒரு புதுப்பார்வை**, ப. 106.
3. மா. இராமலிங்கம், **இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்**, ப. 4.
4. சீனி. வேங்கடசாமி, **பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்**, பக். 72-74.
5. மேலது., ப. 74.
6. வி.மி. ஞானப்பிரகாசம் சே.ச., **தமிழ் விவிலிய மொழிபெயர்ப்புக்கள் - ஓர் ஒப்பாய்வு** என்ற நூலின் சிறப்புரை, ப. ix.
7. த. எஸ்தர் நான்சி பியூலா, **தமிழில் விவிலிய மொழிபெயர்ப்புக்கள் - ஓர் ஒப்பாய்வு**, பக். 16-17.
8. ச.சே. சுந்தரராஜன், **பழைய ஏற்பாடு - ஓர் அறிமுகம்**, (புத்தகம் புத்தகமாக), த. எஸ்தர் நான்சி பியூலா, மு.நூ. ப.II.
9. ம. ஆரோக்கிய சாமி, சே.ச., "விவிலியத்தின் புதிய மொழிபெயர்ப்பு - ஒரு சில வார்த்தைகள்", **தோழன்** வார இதழ், அக். 1993, த. எஸ்தர் நான்சி பியூலா, மு.நூ. ப. II.
10. த. எஸ்தர் நான்சி பியூலா, மு.நூ. பக். 2-3.
11. கலைக்களஞ்சியம், பைபிள் - தலைப்பு, தொகுதி - 7, ப. 4.
12. Compton's Pictured Encyclopedia and Fact Index, Vol. 2, P. 103, த. எஸ்தர் நான்சி பியூலா, மு.நூ. ப. 6.
13. Alex Preminger (Ed.), **Princeton Encyclopaedia of Poetics**, p. 812.
14. Saussure, By Jonathan Culler, **Fantana**, p. 10.
15. Jean Piaget, Structuralism, Quoted by Terence Hawkes, **Structuralism and Semiotics**, p. 16.
16. Winifred Nowottny, **The Language Poets Use**, p. 74.

17. Jonathan Calassi, "Determined Forms", **Poetry,** Dec. 1976, Vol. cxxix, No.3, p. *239*.

18. Roman Jacobson, Closing Statement Quoted by Terence Hawkes, Op.cit., p. *83*.

19. V. Propp, **Morphology of the Folklore,** pp. 19-20.

20. Jonathan Culler, **Structuralist Poetics,** p. 164.

21. *சீனி. வேங்கடசாமி, மு.நூ. பக். 74-75.*

22. Harold A. Buetow, **GOD still speaks; Listen! Homily Reflections for Sundays and Holy Days; Cycle A,** pp. 7-8.

23. Ibid, p. 8.

24. Ibid, p. 9.

25. Ibid, p. 10.

26. Ibid, p. 8.

27. Ibid, p. 14.

28. *தியோடர் வில்லியம்ஸ்,* **செயல்படும் தேவன்–சங்கீதங்களிலிருந்து தியானங்கள்,** *முகவுரை, ப* II

1. சொல்லாட்சி

எந்த ஒரு படைப்பும் தான் சொல்லவரும் கருத்தைத் தகுந்த சொற்களால் வெளிப்படுத்தும்போது அக்கருத்து கேட்போருக்குத் தெளிவாகப் புலப்படும். கேட்போர் குழப்பமின்றி விளங்கிக் கொள்வாரேயாயின் கருத்துப் பரிமாற்றமும் வெற்றி பெறும். "மனநிலையின் நெகிழ்ச்சியினை அவரவர் எடுத்தாளும் சொற்களே நன்கு வெளிப்படுத்துகின்றன"[1] என்பார் இ. சுந்தரமூர்த்தி. மொழிநடை என்பது ஒருவரது உள்ளப் பண்போடு ஒன்றியது என்பதனை மு.வ., "புலவரின் உள்ளத்தில் உண்மையும் உறுதியும் சிறந்து விளங்கினால் அவருடைய நடை திட்பமும் நுட்பமும் அமைந்ததாகும்; அவருடைய உள்ளத்தில் ஆர்வம் மிகுதியானால் நடையின் ஆற்றலும் மிகுதியாகும்''[2] என்று கூறுகிறார். இக்கூற்று, பேசுவோரின் மனநிலைக்கும் அவர் பேச்சில் கையாளும் மொழி அமைப்புக்கும் உள்ள தொடர்பைச் சுட்டுகிறது. ''தன் அனுபவத்தைக் குறியீடாக வடித்துச் சொல்வதற்கு ஏற்ற சொற்பரப்பிலிருந்து ஓரளவு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்தல் நல்ல நடை; இத்தகைய தேர்ந்தெடுக்கும்பணி படைப்போனின் வேலையைச் சிக்கலாக்குகிறது"[3] என்கிறார். வார்பர்க். "சொற்கள், தொடர்க்கட்டமைப்பு ஆகியவற்றின் நல்ல தெரிவே சிறந்த நடை"[4] என்பது ஈஸ்ட்மேனின் கருத்து. ஒரு படைப்பினைச் சுவைப்பதற்காயினும், திறனாய்வு செய்வதற்காயினும் அப்படைப்பின் மொழி பற்றிய செய்திகள் முக்கியமானவை என்பதனை ஜெ. நீதிவாணன், "இலக்கியத்தை ஆக்குகின்ற ஒரு கருவியேயானாலும் இலக்கியச் சுவைப்பில் மொழியின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும்; அக்கருவியின் பயன்பாட்டு முறையைப் பற்றிய உணர்வும் இலக்கியத் திறனாய்வும் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகும்"[5] என்று விளக்குகிறார். எனவேதான் "ஒரு படைப்பின் சிறப்புக்கு அதனுள் பயன்படுத்தப்படும் சொற்களும் இன்றியமையாத காரணங்களாகின்றன. சொற்களின் தேர்வு, பயன்படுத்தும் முறை, புதியனவற்றை ஆக்கும் திறமை, புதிய பொருள்களை ஏற்கும்

திறமை முதலியவை இன்றியமையாத நடையியல் உத்திகளாகும்"[6] என்று சுட்டப்படுகிறது. தகுந்த இடத்தில் தகுந்த சொற்களைப் பயன்படுத்தினால் கூறுவோர் சொல்லவரும் கருத்து அவர் எண்ணியவாறே கேட்போரைச் சென்றடையும். அதாவது சொல்லைக் கையாளும் திறமை பேச எடுத்துக் கொண்ட கருவை நன்கு வெளிப்படுத்த உதவும். இவ்வகையில் விவிலியத்தில் கருத்து விளக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் சொற்கள் இவ்வியலில் ஆராயப்படுகின்றன. ஆய்வுக்கு அடிப்படை ஆதாரங்களாக அமையும் வசனங்கள் அவைபேசும் செய்திகள் இவை இவை என்று தெரிந்து கொள்வது முதலில் அவசியமாகும்.

மத்தேயு எழுதிய நற்செய்தி நூல் பற்றிப் பொது மொழிபெயர்ப்புத் திருவிவிலியம் குறிப்பிடும் கருத்துகள் கவனிக்கத்தக்கன. மத்தேயு நூலின் ஆசிரியர் பற்றி, "இயேசு கிறிஸ்து நிறுவிய இறையாட்சி பற்றிய நற்செய்தியைத் திருத்தூதர் மத்தேயு முதன்முதலில் எழுதினார் என்றும் அதனை அரமேய மொழியில் எழுதினார் என்றும் திருச்சபை மரபு கருதுகிறது. எனினும் இன்று நம்மிடையே இருக்கும் கிரேக்க மத்தேயு நற்செய்தி நூல் ஒரு மொழிபெயர்ப்பு நூலாகத் தோன்றவில்லை. இயேசுவைப் பின்பற்றிய ஒரு திருத்தூதர் தாமே நேரில் கண்ட, கேட்ட நிகழ்ச்சிகளை நூலாக வடித்திருக்கிறார் என்பதை விட அவரது வழிமரபில் வந்த சீடரோ, குழுவினரோ இதனைத் தொகுத்து எழுதியிருக்க வேண்டும்'' என்றும் இந்நூலின் சூழல் பற்றி, "எருசலேம் கோவிலின் அழிவுக்குப் பின்னர் யூதச் சங்கங்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய ஒரு காலகட்டத்தில் இந்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும். இயேசுவின் சீடர்கள் யூதத் தொழுகைக் கூடங்களை விட்டுவிட்டுத் திருச்சபையாகக் கூடிவரத் தொடங்கிவிட்ட காலத்தில் இந்நூல் தோன்றியிருக்கிறது" என்றும் குறிப்பிடுகிறது. மேலும் இந்நூலின் உள்ளடக்கம் குறித்துப் பின்வரும் கருத்தைச் சுட்டுகிறது. "கிரேக்க மொழி பேசும் அந்தியோக்கியா போன்ற நகரங்களில் யூதக்கிறிஸ்தவர்களும் பிற இனத்துக் கிறிஸ்தவர்களும் திருச்சபையில் உறுப்பினர்களாக இருந்தனர். இவர்களுக்குள் பல சிக்கல்கள் இருந்தன. இது தவிர யூதக் கிறிஸ்தவர்கள் பலர் மற்ற யூதர்களால் துன்புறுத்தப்பட்ட நிலையில் மனத் தளர்ச்சியடைந்து இருந்தனர். இயேசுதான் உண்மையான மெசியாவா என்ற ஐயப்பாடு அவர்கள்

உள்ளத்தில் எழுந்தது. இச்சிக்கல்களுக்குத் தீர்வு காண இந்நூல் எழுதப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. யூதர்கள் எதிர்பார்த்திருந்த மெசியா இயேசுதாம் எனக் கிறிஸ்தவர்களுக்கு அழுத்தமாக இந்நூல் கூறுகிறது. அவர் இறைமகன் என்பது வலியுறுத்தப் படுகிறது. அவருடைய வருகையில் இறையாட்சி இலங்குகிறது எனும் கருத்தும் சுட்டிக்காட்டப்படுகிறது. யூதக் கிறிஸ்தவர்கள் பிற இனத்தாரையும் சீடராக்கும் பணியைச் செய்ய இந்நூல் அறைகூவல் விடுக்கிறது. பிற இனத்தார் திருச்சட்டம் பெறாதவர்கள். இப்போது அவர்கள் கிறிஸ்தவர்களாக மாறிடினும் திருச்சட்டத்தின் உயர்வு பற்றி அவர்களுக்குச் சொல்லப்படுகிறது. கிறிஸ்து திருச்சட்டத்தின் நிறைவு எனவும் வலியுறுத்தப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் மத்தேயு இறையாட்சியின் நெறிகள் யூதச் சமய நெறிகளைவிட மேலானவை எனக் கூறிக் கிறிஸ்தவ மதிப்பீடுகளைத் தொகுத்துப் புதிய சட்ட நூலாகத் திருச்சபைக்கு வழங்குகிறார்; யாவரும் இப்புதிய சட்டத் தொகுப்பைக் கடைப்பிடிக்க அறைகூவல் விடுக்கிறார் (மத். 28:20). இதற்கு இயேசுவின் வாழ்க்கை நிகழ்வுகள், முக்கியமாக அவரின் கலிலேயப் பணிகள் எவ்வாறு அடிப்படையாக அமைகின்றன எனவும் இந்நூல் சுட்டிக் காட்டுகிறது; இந்நூலில் கிறிஸ்தியல், திருச்சபையியல், நிறைவுகாலஇயல் ஆகியவற்றிற்கான அடிப்படைகள் பிணைந்து கிடக்கின்றன"[7]

முன்னுரை - இயேசுவின் குழந்தைப் பருவம் (அதி. 1-2)

பகுதி 1 விண்ணரசு பறைசாற்றப்படல் (அதி. 3-7)

பகுதி 2 விண்ணரசுப் பணி (அதி. 8-10)

பகுதி 3 விண்ணரசின் தன்மை (அதி. 11:1 - 13:52)

பகுதி 4 விண்ணரசின் அமைப்பு (அதி. 13:53 - 18:35)

பகுதி 5 விண்ணரசின் வருகை (அதி. 19-23)

முடிவுரை - இயேசு துன்புற்று இறத்தலும் உயிர்த்தெழுதலும் (அதி. 26-28)

முன்னுரை, முடிவுரை நீங்கலாக அமைந்துள்ள ஒவ்வொரு பகுதியிலும் ஒரு நிகழ்ச்சிப் பகுதியும் ஓர் அறிவுரைப் பகுதியும் காணப்படுகின்றன.[8] மத்தேயு நற்செய்தி நூலினைப் படிக்கும் ஒருவர் பொதுவாக அதில் இயேசுவின் பிறப்பு, குழந்தைப்

பருவம், அவர் பின்னாளில் சீடர்களைத் தமக்கெனச் சேர்த்து அவர்களோடு குறிப்பிட்ட இடங்களில் சுற்றி அலைந்து பல்வேறு செய்திகளை மக்களுக்குப் போதிக்கிறவராயும் பல்வேறு பிணியாளர்களுக்குச் சுகமளிக்கிறவராயும் அமைகின்ற சம்பவச் சித்திரிப்புகள், இயேசுவின் இவ்வுலக இறுதிக் காலப் பாடுகள், உயிர்த்தெழுதல், தம் சீடர்களுக்கு உலகமெங்கும் போய் நற்செய்தியைப் போதிக்கும் அதிகாரத்தைக் கொடுத்தல் முதலிய செய்திகளைக் காணலாம். இந்நூலில் இயேசுவின் கூற்றிலேயே அடங்கியுள்ள போதனைப் பகுதிகள் குறிப்பிடத் தக்கவை.

விவிலியத்தில் அங்குமிங்கும் பரவலாகத் தெரிந்து கொள்ளப்படக் கூடிய வசனங்கள் பொதுவாகத் தேவன் உலகைப் படைத்தவை, ஜீவராசிகளைப் படைத்தமை, அடியார்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் வாழ்வில் நிகழ்ந்த சில சம்பவங்கள், அவர்கள் முன்னுரைத்த தீர்க்கதரிசனங்கள், சங்கீத புத்தகத்தில் இடம்பெறுகின்ற உலக வாழ்வில் கடவுள் வழிகாட்டுவார் என்பது குறித்த செய்திகள், மக்களின் மாறுதலான நடவடிக்கைகள் குறித்த எச்சரிப்புக்கள், நல்லவராக நடந்தால் கிடைக்கும் நன்மைகள், பாவங்களில் வாழ்ந்தால் கிடைக்கும் தண்டனைகள், கிறித்தவ வாழ்வில் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் மற்றும் குறிப்பிட்ட விழாக்காலங்களில் வாசிக்கப் படுவன முதலியனவற்றோடு தொடர்பு கொண்டவை. இவ்வசனங்களில் கையாளப்படும் சொற்களைப் பின்வருமாறு பகுத்து ஆராய இடமுண்டு.

1. பெயர்ச் சொற்களும் அடைமொழிகளும்
2. வடசொற்கள்
3. கிறித்தவ சமய மரபுச் சொற்கள்
4. சுட்டுச் சொல்
5. பேச்சுவழக்குச் சொற்கள்
6. துணை வினைகள்
7. எதிர்ச்சொற்கள்
8. முரண் சொற்கள்
9. அடுக்குச் சொற்கள்
10. ஒலிக்குறிப்புச் சொற்கள்
11. வேற்றுமை மயக்கம்

12. தகுந்த சொற்கள்
13. கடினமான சொற்கள்
14. திரும்பத் திரும்ப வரும்சொற்கள்

1.1. பெயர்ச் சொற்களும் அடைமொழிகளும்

விவிலியத்தில் இறைவனின் பெயர்கள் பல இடங்களில் சுட்டப்படுகின்றன. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற திரித்துவக் கோட்பாடு கிறித்துவத்தின் அடிப்படைக் கோட்பாடு ஆகும். பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவி என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதும் வழக்கில் காணப்படுகிறது.

பரிசுத்த ஆவி பற்றிய விளக்கம் பின்வருமாறு: "இயேசு கிறிஸ்து இப்பூமியில் மனிதனாய் இருந்த நாட்களில் என் பிதாவின் சித்தத்தைச் செய்வதே என் வேலை என்றார். இயேசு கிறிஸ்து பாவிகளை இரட்சிக்கவும் இழந்து போனதைத் தேடியும் வந்தார் அல்லவா? அவருடைய இந்தக் காரியங்களை இப்பூமியிலே தொடர்ந்து செய்வது யார்? இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் மனிதன் இரட்சிக்கப்பட வேண்டும். தேவனுடைய ராஜ்ஜியத்திற்குள் சேர்க்கப்பட வேண்டும் அல்லவா. ஆம்! பரிசுத்த ஆவியானவரே இயேசு கிறிஸ்துவின் பணியைத் தொடர்ந்து செய்கின்றனர். மனிதருடைய இரட்சிப்புக்காகக் கிரியை செய்கிறவரே பரிசுத்த ஆவியானவர்"[9] என்ற இவ்விளக்கம் கடவுளின் மூன்று வடிவங்களை இணைத்துப் பேசுகிறது.

"தேவன் இயேசு மூலமாய்ப் பேசினார்; வார்த்தை மாம்சமானவர் இயேசு, இயேசு உரிமையோடு அதிகாரமாக நற்செய்தியை அறிவித்தார்; தேவனின் வார்த்தைகள் விசுவாசிகளின் கூட்டத்தைச் சேர்த்து அவர்களுக்குள் ஒருமைப் பாட்டை ஏற்படுத்துகின்றன"[10] என்ற கூற்று, தேவனுக்கும் குமாரனுக்கும் உள்ள பிணைப்பைக் காட்டுகிறது. இத்தகைய நீக்கமற நிறைந்திருக்கும் கடவுளை விளக்குவதற்குப் பெயர்கள் விவிலியத்தில் இடம் பெறுமாறு:

> ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதி. 1:1)
>
> தேவன் வெளிச்சம் உண்டாகக் கடவது என்றார்; வெளிச்சம் உண்டாயிற்று (ஆதி. 1:3)

என்று பழைய ஏற்பாட்டிலே 'தேவன்' என்ற பெயர் இடம்பெறக் காண்கிறோம்.

> **கர்த்தருடைய** வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; **கர்த்தருடைய** சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது *(சங். 19:7)*

> *சிலர் இரதங்களைக் குறித்தும் சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள். நாங்களோ எங்கள்* **தேவனாகிய கர்த்தருடைய** *நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்* *(சங். 20: 7)*

> **கர்த்தாவே,** இரட்சியும். *(சங். 20:9)*

இச்சான்றுகளில் 'கர்த்தர்', 'தேவனாகிய கர்த்தர்' என்ற பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன. இயேசு நாதரின் பிறப்பு குறித்து யோசேப்பிடம் கர்த்தருடைய தூதன் நிகழ்த்தும் பேச்சு,

> "...... யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது **பரிசுத்த ஆவியினால்** உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு **இயேசு** என்று பேரிடுவாயாக ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்
>
> *(மத். 1: 20-21)*

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 'இயேசு' என்ற பெயரையும் 'பரிசுத்த ஆவி' என்ற பெயரையும் இச்சான்றில் காணலாம். பெயர் சொல்லி அதற்கும் கூடவே விளக்கம் சொல்லுதலும் ஒரு முறையாகச் சிலவிடங்களில் அமைகிறது. இயேசுவின் பிறப்பு குறித்து நடந்த மேற்சம்பவம் ஏற்கெனவே தீர்க்க தரிசனமாக உரைக்கப்பட்டிருந்ததைச் சுட்டும் மத்தேயு,

> தீர்க்கதரிசியின் மூலமாய்க் **கர்த்தராலே** உரைக்கப் பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது; அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு **இம்மானுவேல்** என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். **இம்மானுவேல்** என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்
>
> *(மத். 1: 22-23)*

என்று குறிப்பிடுகிறார். இங்கும் பெயருக்கு அதன் அர்த்தம் குறிக்கப்படுவதைக் காண்கிறோம். பழைய ஏற்பாட்டில் **'தேவன்'** என்றும் **'உன் தேவனாகிய கர்த்தர்'** என்றும் குறிப்பிடப்படுவது பரக்க அமைகிறது. புதிய ஏற்பாட்டில் இயேசுவே தேவனைக் குறிப்பிடும்போது **'பரமபிதா'** (மத். 6:14), **'பிதா'** (மத். 7:21) என்று குறிப்பிடுகிறார். இயேசு தன் சீடர்களை நோக்கி உலகின் பட்டணங்களில் போய்ச் பிரசங்கியுங்கள் என்று அறிவுறுத்துகிறார். அப்பொழுது மனிதர்களே சீடர்களுக்கு விரோதமாக எழும்பி அவர்களை இராசாக்களிடம் ஒப்புக் கொடுப்பார்கள்; அத்தகைய சூழலிலும் அவர்கள் பிரசங்கிக்க வேண்டும் என்று குறிப்பிடும்போது,

> பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல; **உங்கள் பிதாவின் ஆவியானவரே** உங்களிலிருந்து பேசுகிறவர்
>
> (மத். 10-20)

என்று விளக்குகிறார். இங்கு, **பிதாவின் ஆவியானவர்** என்ற விளக்கத்தைக் காணுகிறோம்.

> இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; **தேவ ஆவி** புறாவைப் போல இறங்கி தம்மேல் வருகிறதைக் கண்டார்.
>
> (மத். 3: 16)

> **பரலோகத்திலிருக்கிற என் பிதா**
>
> (மத். 10: 32-33)

என்று இயேசு சுட்டுவதையும் காணலாம். இயேசு மனுஷ குமாரனாக வந்துதித்த பரம்பரையின் அடிப்படையில் **தாவீதின் குமாரன்** (மத். 12:23, 15:22) என்றும் போற்றப்படுகிறார். இயேசு தன்னை யார் என்று மக்கள் சொல்லுகிறார்கள் என்று கேட்கும்போது

> சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக நீர் **ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து** என்றான்
>
> (மத். 16: 16)

என்று விளக்கப்படுகிறது. இயேசுவானவர் சீடரில் இரண்டு பேரை நோக்கி (மத். 21:1) என்ற வசனத்தின்படி

'இயேசுவானவர்' என்றும் இயேசுவின் பெயர் சுட்டப்படுவதும் உண்டு. இவ்வாறு,

தேவன்
கர்த்தர்
தேவனாகிய கர்த்தர்
பரிசுத்த ஆவி
பரம பிதா
பிதா
பிதாவின் ஆவியானவர்
தேவ ஆவி
பரலோகத்திலிருக்கிற என் பிதா
ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து
இயேசு / இம்மானுவேல்
இயேசு கிறிஸ்து
இயேசுவானவர்

என்று பல வகைகளில் திரியேகக் கடவுள் குறிக்கப்படுவதை விவிலியம் முழுவதும் பரக்கக் காணலாம். பரவலாக இவ்வாறு குறிக்கப்படுவது கேட்போரின் மனதில் இப்பெயர்கள் மூவரிலொன்றானவர் இறைவன் என்ற கருத்தைப் பதிய வைப்பதற்கு உதவியாக அமைகின்றது. இப்பெயர்களுள் 'ஆன', 'ஆகிய', 'என்ற' முதலான பெயரெச்சங்களும் இடைச் சொற்களும் சேர்க்கப்பட்டு விளக்கமாகக் குறிப்பிடும் அமைப்பில் இடம்பெறும் பெயர்கள் கூடுதல் விளக்க முடையனவாய் அமைகின்றன. பெயர்ச்சொற்கள் தனித்தோ விளக்கமாகக் கூட்டுச் சொற்களாகவோ அடைமொழிகளுடன் சேர்த்தோ சொல்லப்படும் முறையே விவிலியத்தின் பொதுவான முறையாகப் பல இடங்களில் காணப்படுகிறது.

பிசாசு	*(மத். 4:1)*
பிசாசானவன்	*(மத். 4:11)*
சாத்தான்	*(மத். 4:10)*
சோதனைக்காரன்	*(மத். 4:3)*
பரிசுத்த நகரம்	*(மத். 4:5)*
ஆனந்த சந்தோஷம்	*(மத். 2:10)*
பரலோக ராஜ்யம்	*(மத். 3:2)*

பரிசேயர்	(மத். 3:7)
சதுசேயர்	(மத். 3:7)
அவியாத அக்கினி	(மத். 3:12)
ஜெப ஆலயங்கள்	(மத். 4:23)
மாயக்காரர்	(மத். 6:5)
இடுக்கமான வாசல்	(மத். 7:13)
கள்ளத் தீர்க்கதரிசிகள்	(மத். 7:19)
நீதிமான்கள்	(மத். 9:13)
பாவிகள்	(மத். 9:13)
யோவான்ஸ்நானன்	(மத். 11:12)

இச்சான்றுகள் பெயர்ச் சொற்கள் தனித்தும், அடைமொழி களுடனும், பெயரெச்சங்களாலும் 'காரன்', 'காரர்', 'மான்', 'ஸ்நானன்' போன்ற பின்னொட்டுக்களாலும் தழுவப்பட்டும் அமைகின்றதைப் புலப்படுத்துகின்றன. இம்முறையிலேயே பெயர்களும் அடைத்தொடர்களும் விவிலிய மொழி பெயர்ப்பில் அமைத்துக் கொள்ளப்படுகின்றன.

1.2. வடசொற்கள்

விவிலியத்தில் வடசொற்களை அதிகமாகக் கையாளு வதான ஒரு மொழிபெயர்ப்பு முறையினைக் காண முடிகிறது. வடசொற்கலப்பு அன்றாடப் பேச்சு வழக்கிலிருந்தும் எழுத்துத் தமிழிலிருந்தும் மாற்றம் பெற்றதாய்ச் சமய போதனைக்கான ஒரு மதிப்பையுடையதான ஒரு தோற்றத்தை அளிக்கும் என மொழிபெயர்ப்பாளர்கள் அவர்கள் காலச் சூழலுக்கேற்பக் கருதியிருந்திருக்கலாம். அதன் விளைவாக வடசொற்களை அதிகம் கலந்து எழுதியிருக்கக்கூடும் என்று எண்ண இடமிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவினுடைய **ஜெநநத்தின்** விவரமாவது (மத் : 1: 18)

ஏனெனில் அவர் தமது **ஜனங்களின்** பாவங்களைநீக்கி அவர்களை **இரட்சிப்பார்** (மத். 1:21)

கர்த்தருடைய தூதன் **சொப்பனத்தில்** அவனுக்குக் காணப்பட்டு

அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்

(மத். 2:10)

அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து பிள்ளையையும் அதன் தாயாகிய மரியாளையும் கண்டு சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்து கொண்டு தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப் போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்

(மத். 2:11)

அப்பொழுது ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு

(மத். 2:16)

மனந்திரும்புங்கள்; பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்

(மத். 3:2)

மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன். எனக்குப் பின் வருகிறவரோ, என்னிலும் வல்லவ ராயிருக்கிறார். அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல. அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்

(மத். 3:11)

ஆனாலும் கர்த்தாவே, அநுக்கிரக காலத்திலே உம்மைநோக்கி விண்ணப்பஞ் செய்கிறேன்

(சங். 69: 13)

அதற்கு இயேசு உன் தேவனாகிய கர்த்தரை பரீட்சை பாராதிருப்பாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்

(மத். 4:7)

உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து

(மத். 4:8)

ஜெப ஆலயங்களில் உபதேசித்து ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்

(மத். 4:23)

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது

(மத்: 5: 3)

நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கிய வான்கள் அவர்கள் திருப்தி அடைவார்கள்

(மத். 5:6)

''1850இல் பெர்சிவல் தலைமையில் நிகழ்ந்த பரிசோதனைப் பதிப்பில் கடினமான வடசொற்கள் மிகுந்திருந்தன. அம்மொழிபெயர்ப்புக் குழுவில் பங்கு பெற்ற நடையியலாளரான ஆறுமுக நாவலர் இந்து வேதங்களில் காணப்பட்ட வடசொற்களை விவிலியச் சொற்சமனிகளாகப் பயன்படுத்தினார். எனவே அச்சொற்கள் மக்கள் வழக்கில் இருந்த வடசொற்களாக இல்லாது, கடினமானவைகளாக இருந்தன. பரிசோதனைப் பதிப்பிற்குப் பின்னர் வந்த பவர் மொழிபெயர்ப்பில் வடசொற்கள் பெரும்பாலும் மக்கள் வழக்கில் உள்ளனவாக இருந்தன. ஆயினும், வடசொற்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை பரிசோதனை மொழி பெயர்ப்பிற்கும் பவர் மொழிபெயர்ப்பிற்கும் மிகுந்த வேறுபாடு இருக்கவில்லை''[11] என்ற சபாபதி குலேந்திரனின் கூற்று, சீர்திருத்தச் சபைகள் பின்பற்றும் மொழிபெயர்ப்பில் வடசொற்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பினும் அவை மக்கள் வழக்கில் இருந்தவையே என்பதைச் சுட்டுகிறது. அண்மையில் வெளிவந்துள்ள பொது மொழிபெயர்ப்புத் திருவிவிலியத்தில் இத்தகைய வடசொற்கள் நீக்கப்பட்டு அவை தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம்.

ஜெநநம்	- பிறப்பு
ஜனங்கள்	- மக்கள்
இரட்சிப்பார்	- மீட்பார்
சொப்பனம்	- கனவு
ஆனந்த சந்தோஷ-மடைந்தார்கள்	- மட்டில்லாப் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள்

சாஷ்டாங்கமாய்	- நெடுஞ்சாண்கிடையாய்
பொக்கிஷங்களைத் திறந்து	- பேழைகளைத் திறந்து
தூபவர்க்கம்	- சாம்பிராணி
சாஸ்திரிகள்	- ஞானிகள்
பரலோக ராஜ்யம்	- விண்ணரசு
பிரசங்கிக்க	- பறைசாற்ற
ஜலம்	- தண்ணீர்
ஞானஸ்நானம்	- திருமுழுக்கு
பாதரட்சை	- மிதியடி
பரிசுத்த ஆவி	- தூய ஆவி
அக்கினி	- நெருப்பு
பரீட்சை பாராதிருப்பாயாக	- சோதிக்க வேண்டாம்
மகிமை	- மேன்மை
ஜெப ஆலயம்	- தொழுகைக் கூடம்
உபதேசித்து	- கற்பித்து
சுவிசேஷம்	- நற்செய்தி
சொஸ்தமாக்கினார்	- குணமாக்கினார்
பாக்கியவான்கள்	- பேறு பெற்றோர்
திருப்தி	- நிறைவு

என்பனவற்றைப் பொது மொழிபெயர்ப்பு வடசொற்களை மாற்றித் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளமைக்குச் சான்றுகளாகச் சுட்டலாம்.

1.3. கிறித்தவ சமய மரபுச் சொற்கள்

வடசொல் கலந்து எழுதும் மொழி மரபு விவிலியத்தில் பயின்று வந்துள்ள நிலையைக் கண்டோம். கிறித்தவ மக்கள் வழக்கில் இத்தகைய சொற்கள் இயல்பான தமிழ் மொழி போலவே கலந்துவிட்டமை காலப்போக்கில் நிகழ்ந்துவிட்டது; கிறித்தவ ஆயர்களும் பேராயர்களும் திருச்சபை மக்களும் மிகவும் இயல்பாகப் பயன்படுத்தும் பல சொற்களில் இவ்வடசொற்களையும் காணலாம். இவ்வகையில் வடசொற்கள் மற்றும் பல தமிழ்ச் சொற்கள் கிறித்தவ சமயத்திற்கென்றே உரியன என்று கருதப்படக்கூடிய சொற்களாகக் கிறித்தவர்களிடம் நின்று நிலைத்திருப்பதைக் காண முடிகிறது.

எழுத்து மொழியிலும் அவர்தம் பேச்சு வழக்கிலும் இவை நின்று நிலைத்துவிட்டன. இன்று கிறித்தவம் தொடர்பான சிற்றிதழ்கள், கைப்பிரதிகள் மற்றும் மொழிபெயர்ப்பு நூல்களிலும் இத்தகைய பல சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை கிறித்தவ சமய மரபுச்சொற்கள் எனக் குறிப்பிடப்படலாம்.

பாவம்

இரட்சிப்பு

பரிசுத்த ஆவி

வானசாஸ்திரிகள்

ஜெபம்

ஸ்தோத்திரம்

கட்டுக்களிடமிருந்து விடுதலை

கர்த்தர்

உபவாசம்

ஜெபஆவி

ஆவியை ஊற்றினார்

எழுப்புதல்

அர்ப்பணிப்பு

பட்டணம்

ஊழியங்கள்

சகோதரர்

பாக்கியவான்

சோதனை

சத்தியங்கள்

விசுவாசம்

அவிசுவாசம்

ஆசீர்வாதம்

இரட்டிப்பான ஆசீர்வாதங்கள்

விசேஷித்த ஆசீர்வாதங்கள்

முறுமுறுப்பு

ஜீவகிரீடம்

சாத்தான்

பாவச் சோதனை

சுயாதீனன்

சுதந்தரவாளி

பிரயோஜனம்

ஒப்புக் கொடுத்தல்

சோதனையைச் சகித்தல்

பாரம்

மோட்சம்

நரகம்

எரி நரகம்

ஜெயம்

கிருபை

பெலன்

பெலவீனம்

கிருபாசனம்

மகிமைப்படுத்துதல்

ஆத்மதாகம்

கிரியை

நிரப்புதல்

உலகின் முடிவு பரியந்தம்

பொல்லாத ஆவி

திருக்குள்ளது

மனுக்குலம்

தேவ பிள்ளைகள்

பிதாவின் சித்தம்

கர்த்தருக்குச் சித்தமானால்...

அசுத்த ஆவி

மாம்சத்திற்கேற்றபடி நடத்தல்

ஆவிக்கேற்றபடி நடத்தல்

விசனம்

மனஸ்தாபம்

தேவஆட்டுக்குட்டி

அபிஷேகம்

அந்நிய பாஷை

புத்திரசுவிகாரத்தின் ஆவி

நியாயத்தீர்ப்பு

விசுவாசி

அவிசுவாசி

பாவமன்னிப்பின் நிச்சயம்

பாவத்தைக் கழுவிச் சுத்திகரித்தல்

சொந்த இரட்சகர்

வாஞ்சை

பரிசுத்தப்படுத்துதல்

பரலோக இராஜ்ஜியம்

பரிசுத்தர்

நித்திய ஜீவன்

பிரியம்

தூஷணம்

புறஜாதியார்

போஷிப்பு

சுவிசேஷம்

தாலந்து

உலகமீட்பர்

கிறிஸ்தவ ஐக்கியம்

தவக்காலம்

திருச்சபை

போன்றவை சான்றுகளாவன. இச்சொற்களுள் பெரும் பாலானவை விவிலியத்தில் மொழிபெயர்ப்பாளர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய மரபுச் சொற்கள் கிறித்தவ சமயப் போதனை உள்ளடக்கம் இது என்றோ பிரச்சாரம் என்றோ குறிப்பிட்ட ஒன்றினை இனங் காட்டுவன ஆவன. தூரத்திலிருந்து கேட்கும் ஒரு சமயப் பிரச்சாரத்தை இவை போன்ற சொற்கள் நிகழ்வது கிறித்தவ சமயப் பிரச்சார உரை

என்று இனங்காட்டுவன என்றால் இவை கிறித்தவ மக்களின் மொழிப் பயன்பாட்டில் கலந்திருப்பது புலனாகும்.

1.4. சுட்டுச் சொற்கள்

இயேசு தேவகுமாரனாக மனிதஉருவில் இவ்வுலகில் வந்து அவதரித்து வாழ்ந்து தம் அருளுரைகளாலும் நற்செயல் களாலும் மக்களைத் தேவன் பால் மனந்திரும்பச் செய்து சிலுவையிலறையுண்டு உயிர்த்தெழுந்து தம் சீடர்களுக்கு நற்செய்தியைப் போதிக்கின்ற (சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற) அதிகாரத்தை வழங்கினார் என்பது கிறித்தவ மத வரலாறும் கிறித்தவ நம்பிக்கையும் ஆகும். எனவே இயேசு வாழ்ந்த காலத்து அவர் வழங்கிய அருளுரைகளையும் அவர்தம் நற்செயல் களாகிய பிணியாளிகளைச் சுகமாக்கிய அற்புதங்களையும் சேர்த்து அவர் மேற்கொண்டனவாகப் பின்வரும் இரு நிலைகளைச் சுட்டுவர்.

போதனைப் பணி (Preaching Ministry)

சுகமளிக்கும் பணி (Healing Ministry)

இவை தவிரவும் இயேசுவின் வாழ்வில் நடந்த சில முக்கியச் சம்பவங்களும் குறிக்கத்தக்கவை. இத்தகைய செய்திகளை எழுதும்போது 'இதோ' என்ற சுட்டுச் சொல்லைக் கொண்டு ஆரம்பித்து எழுதும் முறை காணப்படுகிறது.

யோசேப்பின் கனவில் தேவதூதன் வந்து இயேசுவின் பிறப்பை அறிவிக்கும் சம்பவம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. அங்குச் சுட்டுச் சொல் பயன்படுத்தப்படுவது பின்வருமாறு:

> *அவன்:* **இதோ,** ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான்.
>
> *(மத். 1:23)*

இயேசு யோவான்ஸ்நானகனிடம் திருமுழுக்குப் பெறும் பொருட்டு, கலிலேயாவை விட்டு யோவானுக்கு அருகே வருகிறார். யோவான் அவர் திருமுழுக்குப் பெறத் தடைவிதித்து நான் உம்மாலே திருமுழுக்குப் பெற வேண்டியதாயிருக்க நீர் என்னிடத்தில் வரலாமா என்று கேட்கிறார். இயேசு இப்பொழுது விட்டுவிடும். கடவுளுக்கு ஏற்புடையவனவற்றை நாம் நிறைவேற்றுவதுதான் முறை என்று கூற, யோவான்

சம்மதிக்க, இயேசு யோவானிடம் திருமுழுக்குப் பெறுகிறார். அவர் திருமுழுக்குப் பெற்றபோது நடந்த சம்பவம் பின்வருமாறு சுட்டுச் சொல் பயன்பாட்டுடன் எடுத்துரைக்கப் படுகிறது.

> இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவஆவி புறாவைப் போல இறங்கி தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக் கிறேன் என்று உரைத்தது.
>
> (மத். 31: 16, 17)

இயேசு மக்களுடன் பேசிக் கொண்டிருக்கும்போது அவருடைய தாயாரும் சகோதரரும் அவரைப் பார்த்துப் பேச வேண்டுமென்று வந்திருப்பதாக அவருக்குச் சொல்லப்படுகிறது. அப்போது அவரது பதில் பின்வருமாறு அமைகிறது.

> தம்மிடத்தில் இப்படிச் சொன்னவனுக்கு அவர் பிரதியுத்தரமாக : என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி இதோ என் தாயும் என் சகோதரரும் இவர்களே! பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்.
>
> (மத். 12: 48-50)

இயேசு பரலோகத்துக்கு உவமையாகச் சொல்லும் கதைகளுள் ஒன்று பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன் தன் பணியாட்களை அழைப்பித்துத் தன் ஆஸ்திகளை அவர்கள் வசம் ஒப்புக் கொடுத்த கதை. அவர் திரும்பி வந்து கேட்கிற போது ஒவ்வொரு ஊழியக்காரனும் கூறுகிற பகுதிகளில், இதோ என்று சுட்டிச் சொல்லும் அமைப்பு உள்ளது.

> அப்பொழுது ஐந்து தாலந்தை வாங்கினவன் வேறு ஐந்து தாலந்தைக் கொண்டு வந்து ஆண்டவனே ஐந்து தாலந்தை என்னிடம் ஒப்புவித்தீரே!

அவைகளைக் கொண்டு இதோ வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான்

(மத். 25: 20)

இரண்டு தாலந்தை வாங்கினவனும் வந்து ஆண்டவனே இரண்டு தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக் கொண்டு, இதோ, வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான்.

(மத். 25: 22)

ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும் தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன். ஆகையால் நான் பயந்து, போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன். இதோ, உம்முடையதை வாங்கிக் கொள்ளும் என்றான்.

(மத். 25: 24, 25)

இங்கும் 'இதோ' என்ற சுட்டுச் சொல் பயன்படுத்தப் படுகிறது.

128ஆம் சங்கீதத்தில் கர்த்தருக்குப் பயந்து நடக்கும் மனிதன் பெறும் ஆசீர்வாதங்கள் சுட்டப்படுகின்றன. அதில் ஒரு பகுதி பின்வருமாறு அமைகிறது.

இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான். கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார். நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய்.

(சங். 128: 4, 5)

பழைய ஏற்பாட்டில் ஆபிரகாம் கர்த்தருடன் பேசுகிறான். கர்த்தர் சோதோம், கொமோரா ஆகிய பட்டணங்களை அழிக்கப் புகும் சூழலில் துன்மார்க்கனோடே நீதிமானையும் அழிப்பீரோ என்று ஆபிரகாம் கேட்கிறான்.

அப்பொழுது ஆபிரகாம் பிரதியுத்தரமாக இதோ தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன் ஆண்டவரோடே பேசத் துணிந்தேன்.

(ஆதி. 19: 27)

> அப்பொழுது அவன் இதோ ஆண்டவரோடே பேசத் துணிந்தேன்
>
> (ஆதி. 19: 31)

என்று பேசத் துணியும் காட்சி 'இதோ' என்று சித்திரிக்கப் படுகிறது.

வரலாற்றுச் சம்பவங்கள், குறிப்பாக இயேசுவின் பிறப்பு, அவர் திருமுழுக்குப் பெற்ற நிகழ்ச்சி, இயேசுவே தன் கருத்தை உரைக்கும் பகுதிகள், மனிதன் பெறும் ஆசீர்வாதங்கள் போன்ற உயரியவையும் முக்கியத்துவம் வாய்ந்தவையுமான சம்பவங்கள் வருமிடங்களில் அவற்றைக் கண்முன்னே காட்சிப்படுத்திச் சொல்வதற்குச் சுட்டுச் சொற்கள் உதவி நிற்பதைக் காண முடிகிறது.

1.5. பேச்சுவழக்கு சொற்கள்

மிகவும் புனிதமாக மதிக்கப்படுகின்ற வேதநூலில் மனிதர்கள் நம்புவதற்கு ஏதுவாகவும் ஆறுதல்படுத்து முகமாகவும் அமையும் மொழிநடையே கூறவரும் கருத்தைச் சென்று சேர்ப்பதற்கு உதவும். இத்தகைய நோக்கில் அமையும் வேத நூலில் பேச்சுவழக்குச் சொற்கள் அருகியே அமையும்.

இயேசுவின் பிறப்பு குறித்த சம்பவங்கள் பற்றி உரைக்கும் தூதன் "தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது" (மத். 1: 22) என்று உரைக்குமிடத்து 'இவையெல்லாம்' என்று எழுதப்பட வேண்டியது 'இதெல்லாம்' என்று எழுதப் பட்டிருப்பது பேச்சு வழக்காகும். சாத்தான் இயேசுவைச் சோதிக்கும்போது,

> அவர் பிரதியுத்தரமாக மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்
>
> (மத். 4:4)

என்று கூறுமிடத்து 'அன்று' என்று இருக்க வேண்டியது 'அல்ல' என்று பன்மையில் இடம்பெறுவது பேச்சில் நாம் அவ்வாறே பேசுவதாலேயே எனலாம். இதே பகுதியில்,

> அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக்

கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்

(மத். 4:3)

என்று சாத்தானின் கூற்று சுட்டப்படுகிறது.

கற்கள் > **கல்லுகள்**

இந்த மாற்றம் பேச்சு வழக்கின் விளைவே. இதுபோல் இடம்பெறும் சான்றுகள் பின்வருவன.

அவைகளின் மகிமையையும் காண்பித்து

(மத். 4:8)

படகு > **படவு** *(மத். 4.22)*

இவர் எப்படிப் பட்டவரோ *(மத். 8: 27)*

மணவாளன் அவர்களை விட்டு **எடுபடும்** நாள் வரும் *(மத். 9:15)*

..........**என்னத்தைப்** பேசுவோம் *(மத். 10: 19)*

ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்புறுத்தினால் மறுபட்டணத்திற்கு **ஓடிப்போங்கள்**

(மத். 10: 23)

தேவனே மவுனமாயிராதேயும்; பேசாமலிராதேயும், தேவனே **சும்மா** இராதேயும்

(சங். 83:1)

உங்கள் தலையிலுள்ள **மயிரெல்லாம்** எண்ணப் பட்டிருக்கிறது

(மத். 10:30)

உயிர்த்தெழுதலில் **கொள்வினையும் கொடுப்பி-னையும்** இல்லை

(மத். 22:30)

இவ்வாறு பேச்சு வழக்குச் சொற்கள் ஒருமை பன்மை மயக்கமுடையனவாய் அல்லது பன்மைச் சொல்லுக்கே மேலும் ஒரு பன்மை விகுதி சேர்க்கப்பட்டதாய் அல்லது பேச்சு வழக்கை நெருங்கிய தொடர்புடையதாகவும் பேச்சில் உள்ளபடியே அமைவனவாயும் என்று பல நிலைகளில் அமைகின்றன.

1.6. துணைவினைகள்

வினைச் சொற்களைத் தொடரின் ஈற்றில் வினைமுற்றாக அமைக்கும்போது ஓரிரு இடங்களில் துணைவினை சேர்த்து எழுதும் முறை காணப்படுகிறது. இயேசுவின் பிறப்புக் காலத்தில் யோசேப்பு, ஏரோது மன்னன் இறந்த பின்பு எகிப்திலிருந்து கர்த்தருடைய தூதனின் வழிநடத்தலால் இஸ்ரவேல் தேசத்துக்குப் பிள்ளையையும் அதன் தாயாகிய மரியாளையும் கூட்டிக் கொண்டு வருகிறான்.

> நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம் **பண்ணினான்.** நசரேயன் என்னப்படுவார் என்று தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.
>
> *(மத். 2: 23)*

இயேசு பிசாசினால் சோதிக்கப்பட்டு 'அப்பாலே போ சாத்தானே' என்று அவர் பிசாசினை விரட்டிய பின்னர் யோவான் காவலில் வைக்கப்பட்டான் என்று கேள்விப்பட்டுக் கலிலேயாவுக்கு வருகிறார்.

> நாசரேத்தை விட்டு செபுலோன் நப்தலி என்னும் நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கரைக்கு அருகான கப்பர்நகூமிலே வந்து வாசம்**பண்ணினார்.**
>
> *(மத். 4: 13)*

வசித்தார் என்பது வாசம்பண்ணினார் என்று 'பண்ணு' என்னும் துணைவினை கொண்டு எழுதப்படுவது ஓரளவு பேச்சுச் சாயல் நிறைந்த வகையில் எழுதப்படும் முயற்சியினாலேயே எனலாம். இதே போல 'இரு', 'மாட்டு' என்ற துணைவினைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இத்துணைவினைகள் குறித்த செய்திகள் எதிர்மறைச் சொற்களில் பேசப்பட்டுள்ளன.

1.7. எதிர்மறைச்சொற்கள்

சிற்சில இடங்களில் எதிர்மறைச் சொற்கள் பயன் படுத்தப்படுகின்றன. யோவான்ஸ்நானன் 'மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது' என்று பிரசங்கம் பண்ணும்போது விளைந்த கோதுமை மணிகளைத் தூற்றி எடுத்துப் பதரினின்று பிரிப்பதுபோல மனந்திரும்பி நீதிமானாக விளங்குபவர்களைப் பிரித்தெடுப்பார். மனந்திரும்பாதவர்களைப்

பதரை எரிப்பது போல அழிவுக்குட்படுத்துவார் என்று குறிப்பிடுமிடத்து,

> தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ **அவியாத அக்கினியினால்** சுட்டெரிப்பார்
>
> (மத். 3:12)

என்று விளக்குவதைக் காணலாம். எரியும் தீ என்று உடன்பாட்டில் சொல்ல வந்ததை **அவியாத அக்கினி** என்று எதிர்மறைப் பெயரெச்சத்தால் சொல்லுவது மத்தேயுவின் கூற்றுத் திறத்தை - நடைச்சிறப்பைப் புலப்படுத்துகிறது.

சுற்றத்தினரை விட்டுவிலகி, வெறுத்துக் கடவுளிடம் வந்து சேர்கிறவனே உண்மையான சீடன்; எனவே இவ்வாறு சுற்றத்தைவிட்டு வந்து சேர்பவனைக் குறித்து வீட்டில் உள்ள உறவினர் உலக வாழ்க்கையினின்று வழுவிச் சென்றுவிட்டானே என வருந்துவர் என்னும் பொருள்பட 'ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே' என்று இயேசு விளக்குகிறார்.

> தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் **அல்ல**. மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் **அல்ல** தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் **அல்ல**
>
> (மத். 10:37-39)

இங்கு, தனக்கு எவ்வெவர் பாத்திரர் ஆவார் என்பதை விட **எவ்வெவர் ஆக மாட்டார்** என்பதைச் சொல்வதே முக்கியம் என்பதால் 'அல்ல' என்ற எதிர்மறைச் சொல்லைப் பயன்படுத்திக் கருத்துத் தெரிவிக்கும் முறை கையாளப்பட்டுள்ளது.

சிற்சிலவிடங்களில் பெயரடைகளும் எதிர்மறைப் பொருளைத் தெரிவிக்கும் சொற்களாகின்றன.

> இந்த **பொல்லாத** விபசார சந்ததியார் (மத். 12:39)
>
> **அற்ப** விசுவாசியே! ஏன் சந்தேகப்பட்டாய் (மத். 14:31)

இச்சான்றுகளில் எதிர்மறைச் சொற்களுக்கு மாறாகப் பெயரடைகள் எதிர்மறைப் பொருளைத் தருவனவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நீதி என்பதற்கு எதிராக 'அ' என்ற முன்னொட்டினைச் (Prefix) சேர்த்து 'அநீதி' என்று ஆக்கி அச்சொல் எதிர்மறைப் பொருளை உணர்த்துவது போல இங்கும் 'அ' என்ற முன்னொட்டுப் பயன்பாட்டினைக் காணமுடிகிறது.

அவர்களுடைய **அவிசுவாசத்தினிமித்தம்** *அவர்*
அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை

(மத். 13: 58)

உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ் செய்தால் நீ அவன் குற்றத்தைத் தனியே அவனைப் பார்த்து அவனுக்கு உணர்த்து; அவன் செவிகொடாமற் போனால் இரண்டு அல்லது மூன்று சாட்சிகளுடைய வாக்குமூலத்தால் அனைத்தும் உறுதி செய்யப்படும் என்ற மறைநூல் மொழிக்கேற்ப உன்னோடு ஒன்றிரண்டு பேரைக் கூட்டிக் கொண்டு போ; அவர்களுக்கும் செவி சாய்க்காவிடில் திருச்சபையிடம் சொல். அவர்களுக்கும் அவன் செவிகொடாமற் போனால்,

அவன் உனக்கு **அஞ்ஞானியைப்** *போலவும்*
ஆயக்காரனைப் போலவும் இருப்பானாக

(மத். 18:17)

என்று சுட்டுமிடத்து 'அஞ்ஞானி' என்ற எதிர்ப்பதம் இம் முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அன்றியும்

நீங்கள் ஜெபம் பண்ணும்போது **அஞ்ஞானிகளைப்**
போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்.
.........அவர்களைப் போல நீங்கள் **செய்யாதிருங்கள்**

(மத். 6: 7, 8)

என்பதும் இவ்வகையிலேயே அமைகிறது.

அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழிகளிலேபோய்,
தாங்கள் கண்ட நல்லார் **பொல்லார்** *யாவரையும்*
கூட்டிக்கொண்டு வந்தார்கள். கலியாண சாலை
விருந்தாளிகளால் நிறைந்தது

(மத். 22:10)

> ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடே இணைக்கமாட்டான்................ புது திராட்சரசத்தை பழந்துருத்திகளில் வார்த்து வைக்கிறதும் இல்லை'
>
> *(மத். 9: 16, 17)*

போன்றவையும் சான்றுகள். இவ்வாறு 'இல்லை', 'அல்ல' போன்ற சொற்களாலும், எதிர்மறைப் பெயரெச்சங்கள், பெயரடைகள் முதலியவற்றாலும் 'அ' என்ற முன்னொட்டின் மூலமும், அடுக்குத் தொடரமைப்பிலும் 'செய்யாதிரு', 'செய்யமாட்டான்' போன்றவற்றில் துணைவினைகள் கொண்டும் எதிர்மறைப் பொருள் உணர்த்தப்படுகிறது.

1.8. முரண்சொற்கள்

இயேசுவின் போதனைச் செய்திகளில் இருக்கின்ற நிலையை விளக்கவும் இனிவருகின்ற நிலையை விளக்கவும் முரண்சொற்கள் பல பயன்படுத்தப்படுகின்றன.

> நீயோ தர்மஞ் செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமா யிருப்பதற்கு உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக் கடவது; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்
>
> *(மத். 6: 4)*

என்று இங்கு அந்தரங்கம் x வெளியரங்கம் என்ற முரண் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. இதே அதிகாரம் 18ஆம் வசனமும் இதே அமைப்பினதே.

> தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்
>
> *(மத். 10:39)*

இங்கு காத்தல் x இழத்தல் ஆகிய முரண்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

> வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே!
> நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்
>
> *(மத். 11:23)*

இங்கு வானம் x பாதாளம், உயர்த்தப்படுதல் x தாழ்த்தப்படுதல் ஆகிய முரண்சொற்கள் கையாளப்பட்டுப் பொருள் புலப்படுத்தப்படுகிறது.

எருசலேமிலிருந்து வந்த வேதபாரகர், பரிசேயர் இயேசுவினிடத்தில் வந்து அவரது சீடர்கள் கைகழுவாமல் உணவு உண்பதன்மூலம் முன்னோர்களின் பாரம்பரியத்தை மீறி நடக்கிறார்களே என்று விவாதிக்கிறார்கள். அப்பொழுது இயேசு உங்கள் மரபின் பொருட்டுக் கடவுளின் வார்த்தையைப் (கற்பனையை) பயனற்றதாக்குகிறீர்கள் என்று பதில் கூறும்போது அவர்களை மாயக்காரர் என்று குறிப்பிட்டு,

> இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள் அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாக விலகியிருக்கிறது
>
> (மத். 15:8)

என்று கூறுகிறார். இங்கு,

வாயினால் துதித்துச் சேர்தல் x இருதயமோ தூரமாக விலகியிருத்தல் என்ற முரண் பொருளை முரண் சொற்கள் புலப்படுத்துகின்றன.

> வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப் படுத்தாது வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்
>
> (மத். 15:11)

மனிதனின் இருதயத்திலிருந்து புறப்படும் தீய எண்ணங்களும் நல்லனவல்லாத சொற்களும் மனுஷனின் இயல்பைப் புலப்படுத்தி அவனுக்குத் தீமை விளைவிக்கும் என்ற கருத்து இங்கே வாய்க்குள்ளே போகிறது x வாயிலிருந்து புறப்படுகிறது என்ற முரண் சொற்களால் தெளிவாகப் புலனாகிறது.

செல்வந்தர்கள் செல்வத்தின் மீதுள்ள ஆசையை விட மனதில்லாமல் இருக்கிறார்கள். எனவே அவர்கள் பரலோக ராஜ்யத்தில் நுழைய இயலாது என்று இயேசு பேசுகையில் அவரது சீடர்கள் அப்படியானால் யார் ரட்சிக்கப்படக்கூடும் என்று கேட்கிறார்கள்.

இயேசு அவர்களைப் பார்த்து, மனுஷரால் இது ***கூடாததுதான்,*** *தேவனாலே எல்லாம்* ***கூடும்*** *என்றார்*

(மத். 19: 26)

என்று பதிலிறுத்தமை சுட்டப்படுகிறது. இங்குக் கூடாதது x கூடும் என்ற முரண் சொற்கள் கருத்தைத் தெரிவிக்கின்றன.

கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும் தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார். மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்.

(சங் 138: 6)

தன்னை ***உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்*** *தன்னைத்* ***தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.***

(மத். 23: 12)

உயர்ச்சி x தாழ்மை என்ற சொற்பொருள்கள் முரண் சுவையைத் தருகின்றன. இவ்வாறு முரண்சொற்களைப் பயன்படுத்துதல் சொல்லவரும் கருத்தின் ஆழத்தை எளிதில் விளக்குகிறது.

1.9. அடுக்குச் சொற்கள்

பொதுவாக அடுக்குச் சொற்கள் துயரத்தை வெளிப் படுத்தவும் குறிப்பிட்டதொரு எண்ணத்தை வெளிப்படுத்தவும் நிலைநாட்டவும் கருத்தை வலியுறுத்தவும் பயன்படுவன.

நியாயத்தீர்ப்பு நாளில் நல்லவர்களும் கெட்டவர்களும் நியாயந்தீர்க்கப்படுவர். கெட்டவர்கள் அப்பொழுது என்னை நோக்கிப் புலம்புவார்கள். நான் அவர்களைக் கவனியேன் என்ற பொருளில் இயேசு சுட்டும் பகுதி பின்வருமாறு:

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப் பானேயல்லாமல் என்னை நோக்கி ***கர்த்தாவே! கர்த்தாவே!*** *என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி* ***கர்த்தாவே! கர்த்தாவே!*** *உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும்*

உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக் காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.

(மத். 7: 21-23)

இங்கு வாழ்நாளில் நல்ல பயன் கொடாதவர்கள், கெட்டவர்கள், கள்ளத்தீர்க்கதரிசிகள் போன்றோரின் இறுதிநாள் புலம்பலைக் **கர்த்தாவே! கர்த்தாவே!** என்ற அடுக்குச் சொல் உணர்த்துகிறது.

எருசலமே! எருசலமே! தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர் களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன். உங்களுக்கு மனதில்லாமற் போயிற்று. இதோ உங்கள் வீடு பாழாக்கி விடப்படும்

(மத். 23:37, 38)

எழும்பு எழும்பு சீயோனே

(ஏசாயா 52:1).

1.10. ஒலிக்குறிப்புச் சொற்கள்

உரையில் சில ஒலிகளை அல்லது தன்மையை மற்றும் தோற்றத்தை அப்படியே காட்டுவதற்கு ஒலிக்குறிப்புச் சொற்கள் கையாளப்படுகின்றன. பேசுபவரின் உள்ளத்து உணர்வைப் புரிந்து கொள்ளவும் பேசுபவர் காட்டவிழையும் சூழலை அப்படியே படம்பிடித்துக் காட்டவும் இத்தகைய சொற்கள் பயன்படும். இரக்க உணர்வைக் குறிக்கப் பொதுவாகக் கவிதைகளில் அந்தோ, ஐயோ, ஐயகோ ஆகிய சொற்கள் கையாளப்படுவது உண்டு.

வேதபாரகர், பரிசேயர் மரபு என்ற பெயரில் சுட்டும் சொற்கள், செயல்கள் வெறும் வறட்டுச் சடங்கு முறைகள் தாமே தவிர மனிதநேயமற்றவை; தங்களைச் சபைகளில் உயர்த்திக் கொள்வார்களே தவிர இறைவனைப் பெரியவன் என்று எண்ணக் கடின மனமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் இருதயத்தைத் தாழ்த்தாமல் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வதைப் பார்த்து இயேசு இரக்கப்படுகிறார்.

இவ்விரக்கத்தைக் குறிக்க ஐயோ! என்ற சொல் பயன்படுத்தப் படுகிறது.

> மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! **உங்களுக்கு ஐயோ!** மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப் போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை. பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்கவிடுகிறதுமில்லை
>
> (மத். 23:13)

இதே முறையில் '**உங்களுக்கு ஐயோ**' என்று சொல்லி அவர்கள் செயல்கள், எண்ணங்கள் குறித்துப் பரிதவிப்பது இதே அதிகாரம் வசனங்கள் 14, 15, 16, 23, 25, 27, 29 ஆகியனவற்றிலும் திரும்பத் திரும்ப வருகிறது.

1.11. வேற்றுமை மயக்கம்

ஓர் உருபு வரவேண்டிய இடத்தில் மற்றொரு வேற்றுமை உருபு மயங்கி வருவது வேற்றுமை மயக்கம் எனப்படும். இவ்வமைப்பு உருபு மயக்கம், பொருள் மயக்கம் என்றிருவகைகளில் அமையும்.

தன்னிடம் திருமுழுக்குப் பெற வரும் இயேசுவிடம் நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க நீர் என்னிடத்தில் வரலாமா என்று கேட்கும் பகுதி

> யோவான் அவருக்குத் தடை செய்து (மத். 3:14)

என்று ஆரம்பமாகிறது. அவரைத் தடைசெய்து என்ற பொருளில் இரண்டாம் வேற்றுமையுருபு 'ஐ' வரவேண்டிய விடத்து நான்காம் வேற்றுமை உருபு 'கு' இடம் பெறுகிறது.

> இதோ! வானம் அவருக்குத் திறக்கப்பட்டது
>
> (மத். 3: 16)

'கு' என்ற நான்காம் வேற்றுமை உருபு 'அவருக்காக' என்ற பொருளில் இடம்பெறுகிறது. இயேசு தம்மைக் காணவந்த மக்களைப் பார்த்து, அவர்கள் சரியான ஆன்மீகத் தலைவன் இல்லாததால் சோர்ந்து போயிருப்பதைப் பார்த்து, வருந்தி,

> தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம். ஆதலால்

அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலை யாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றார்

(மத். 9:37-38)

என்று கூறப்படுகிறது. இங்கு 'அறுப்புக்கு' என்பதில் நான்காம் வேற்றுமை உருபு 'கு' இருமுறை வந்து பொருட்குழப்பத்தை விளைவிக்கிறது. இப்பொருட் குழப்பத்தைத் தவிர்க்க,

"அப்பொழுது அவர்தம் சீடரைநோக்கி, அறுவடை மிகுதி; வேலையாள்களோ குறைவு ஆகையால் தேவையான வேலையாள்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்" என்றார்

(மத். 9: 37-38)

என்று பொதுமொழிபெயர்ப்புத் திருவிவிலியத்தில் மாற்றி எழுதித் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

1.12. தகுந்த சொற்கள்

தகுந்த இடத்தில் தகுந்த சொல்லை அதாவது ஒரு சொல்லை வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து பயன்படுத்துவது சிறப்புடைப் பயன்பாடாகும். பொருத்தமான இடத்தில் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துவது வாசகனுக்குச் சுவையூட்டுவதாய் அமைவதோடன்றிப் பொருளையும் தெளிவாகப் புலப்படுத்தும்.

கள்ளத் தீர்க்கதரிசிகள் (மத். 7:15)

அற்ப விசுவாசி (மத். 6: 30)

என்ற சான்றுகளில் உள்ள அடைமொழிகளும்

இருதய கடினம் (மத். 19:8)

என்ற அடைத் தொடரும் பொருத்தமான சொற்களாக அமைந்து பொருள் சிறக்கின்றன.

1.13. கடினமான சொற்கள்

கருத்துப் புலப்பாட்டில் விவிலிய மொழிநடையில் சில சொற்களும் தொடர்களும் கடினமாக அமைந்து உடனே

பொருளைப் புரிந்து கொள்வதற்கு இயலாத வகையில் சற்று நின்று நிதானிக்க வைப்பனவாய் அமைகின்றன. அத்தகைய சொற்களுக்கு ஓரிரு சான்றுகளை மட்டும் இங்குக் காண்போம்.

> நான் உங்களுக்குச் சொல்கிறேன். **பரிச்சேதம்** சத்தியம் பண்ண வேண்டாம். வானத்தின் பேரில் சத்தியம் பண்ண வேண்டாம். அது தேவனுடைய சிங்காசனம். பூமியின் பேரிலும் சத்தியம் பண்ண வேண்டாம். அது அவருடைய பாதபடி. எருசலேமின் பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம் அது மகாராஜாவின் நகரம். உன் சிரசின் பேரிலும் சத்தியம் பண்ண வேண்டாம். அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே.
>
> *(மத். 5: 34-36)*

'பரிச்சேதம்' என்ற சொல் உடனடியாகப் பொருளைத் தெரிவிக்கக்கூடிய சொல்லாக இல்லை. 'எப்பொழுதும்', 'ஒருக்காலும்', 'எந்தக் காலத்தும்', 'எதன் மீதும்', 'என்றும்' என்று எப்பொருளை வேண்டுமானாலும் பொருத்திக் கொள்ளும் வகையில் அச்சொல் அமைந்துள்ளது.

கணவன் மனைவி உறவு பற்றித் தம்மிடம் பேசும் தமது சீடர்கள் கணவன் மனைவியர் உறவுநிலை இத்தகையது என்றால் திருமணம் செய்து கொள்ளாதிருப்பதே நல்லது என்று கூற,

> அதற்கு அவர் வரம்பெற்றவர்களே தவிர மற்றவர்கள் இந்த வசனத்தை ஏற்றக் கொள்ள மாட்டார்கள். தாயின் வயிற்றிலிருந்து **அண்ணகர்களாய்ப்** பிறந்தவர்களும் உண்டு; மனுஷர்களால் **அண்ணகர் களாக்கப்**பட்டவர்களும் உண்டு; பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை **அண்ணகர்களாக்கிக்** கொண்டவர்களும் உண்டு; இதை ஏற்றுக்கொள்ள வல்லவன் ஏற்றுக்கொள்ளக் கடவன் என்றார்
>
> *(மத். 19: 11, 12)*

என்ற இப்பகுதியில் 'அண்ணகர்' என்ற சொல் பொருள் புரிதலுக்குத் தடையாகிறது. பொதுமொழிபெயர்ப்புத் திருவிவிலியம் அண்ணகர் என்ற சொல்லுக்கு 'மணஉறவு

கொள்ள முடியாதவர்' என்று எழுதியிருப்பது பொருளைத் தெளிவாகத் தடையில்லாமல் புலப்படுத்துகிறது.

கடினமான சொற்களால் பின்னப்பட்ட சொற்றொடர்கள் பொருள் புலப்பாட்டில் சாதாரண வாசகனுக்கு இடர் விளை விப்பதாய் அமைகின்றன. கிறித்தவ மரபிலும் வேத வாசிப்பிலும் தவறாது ஈடுபட்டு வாழும் கிறித்தவர்களுக்குப் பொருள் புலப் பாட்டில் இத்தகைய தொடர்கள் இடர் ஏற்படுத்தாமலிருக்கலாம்.

சான்று

1) நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டா திருப்பேனாக; **அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது; நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன். கிறிஸ்து இயேசுவுக்குள்** விருத்த சேதனமும் ஒன்றுமில்லை, விருத்த சேதனமில்லாமையும் ஒன்றுமில்லை. புது சிருஷ்டியே காரியம்.

(கலாத். 6: 14, 15)

2) அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய **இயேசு கிறிஸ்துவுக்குள்** தேவனுக்கென்று பிழைத் திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்.

(ரோமர் 6:11)

3) தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப் பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே. **கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன்.** ஆயினும் பிழைத்திருக் கிறேன். இனி நான் அல்ல; கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.

(கலாத். 2: 19, 20)

4) **கிறிஸ்துவுக்குள்** எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப் பண்ணி....

(II: கொரி. *2:14*)

5) இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின.

(II: கொரி 5:17)

6) **கர்த்தருக்குள்** நிலைத்திருங்கள் (பிலிப்பியர் 1:1).

7) **கர்த்தருக்குள்** எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்

(பிலிப். 1:4)

புதிய ஏற்பாடுக் காலத்தில் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசம் குறித்தும் கிறித்தவ வாழ்க்கை நடைமுறை குறித்தும் பல்வேறு சீடர்கள் (அப்போஸ்தலர்கள்) புதிய முறையில் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்ததுவும் அவற்றின் அடிப்படையில் கோட்பாடுகள் மொழிபெயர்க்கப்பட்டமையும் இவற்றிற்கான காரணங்களுக்காக இருக்கலாம்.

'சிலுவையிலறையுண்ணப்படுதல்' என்பது மரபுத் தொடர்போல அமைகிறது. இயேசுவைப் போலவே அவரைப் பின்பற்றுபவர்களும் பாடுகளை அனுபவித்தல், உலகப் பற்றைத் துறத்தில் போன்ற பொருட்களை இதினின்று பெற்றுக் கொள்வது உடனடியாக நடைபெறாது; சற்றுத் தாமதமாகவே அமையும். அதே போல **'கிறிஸ்துவுக்குள்'** எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் என்ற அமைப்பில் 'கிறிஸ்துவுக்குள்' என எழுதுவதும் கிறித்தவர் அல்லாதவர்களுக்குப் பொருள் புலப்பாட்டில் சற்று இடர் தருவதுவே. **கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இருக்கும் நெருக்கமான உறவை** இத்தகைய தொடர்ப் பயன்பாடு புலப்படுத்துகிறது என்பது உடனடியாக விளங்காத ஒன்றே. "**அவருக்குள்** நாம் வாழ்வதால் நாம் சாத்தானின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோம். **அவருக்குள்** வாழ்வதால் - அவரது பிரசன்னம் நம்முள் இருப்பதால் நாம் துன்பத்திலும் இன்பம் காண முடிகிறது....... கிறிஸ்துவுக்குள் நாம் வாழும்போதுதான் கர்த்தருக்குள் நாம் மரிக்க முடியும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்"[12] என்று மோசஸ் மைக்கேல் பாரடே தரும் விளக்கம் கிறிஸ்தவர்களுக்கு மிக எளிதாய்ப் பொருள் புரியும். ஆனால் பொதுவான கருத்துப் பரிமாற்றத்தின்படி, பொருள் விளங்குதல் என்பது சற்றுத் தாமதமாகும்.

1.14. திரும்பத் திரும்ப வரும் சொற்கள்

திரும்பத் திரும்பச் சொற்கள் பயின்று வருமாறு அமைப்பது தமிழ் இலக்கியங்களில் காணப்படும் ஓர் உத்தி எனலாம். சில கருத்துக்களை வலியுறுத்த குறிப்பிட்ட சொற்களை மீண்டும் மீண்டும் பயின்று வருமாறு செய்தால் கருத்துச் செறிவு கிடைக்கும். இம்முறை வசன நடையைக் கொண்ட விவிலியத்திலும் காணப்படுகிறது. இத்தகைய 'பயின்று வரல்' என்னும் அமைப்பு பின்வரும் இருநிலைகளில் அமையலாம்.

1) குறிப்பிட்ட சொல் திரும்பத் திரும்பத் தொடர்ந்து வரும் வசனங்களில் பயின்று வருவது
2) ஒரே வாய்பாட்டுச் சொல் தொடர்ந்து வரும் வசனங்களில் பயின்று வருவது

இயேசுவின் மலைப்பிரசங்கத்தில் எதிரிலிருப்போரைத் தன்னை நோக்கி ஈர்ப்பதற்கு இத்தகைய பயின்றுவரும் உத்தி பயன்படுத்தப்படுகிறது.

> *ஆவியில் **எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்;** பரலோக ராஜ்யம் அவர்களுடையது. **துயரப்படு கிறவர்கள் பாக்கியவான்கள்** அவர்கள் ஆறுதலடை வார்கள். **சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;** அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். **நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள்** பாக்கிய வான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். இரக்க **முள்ளவர்கள் பாக்கியவான்கள்;** அவர்கள் இரக்கம் பெறுவார்கள். இருதயத்தில் **சுத்த முள்ளவர்கள் பாக்கியவான்கள்;** அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். **சமாதானம் பண்ணு கிறவர்கள் பாக்கியவான்கள்;** அவர்கள் தேவனுடைய புத்திரர்கள் என எண்ணப்படுவார்கள். **நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கிய வான்கள்;** பரலோக ராஜ்யம் அவர்களுடையது.*
>
> (மத். 5: 3-10)

இங்கு, 'பாக்கியவான்கள்' என்ற சொல் மீண்டும் மீண்டும் இடம்பெறுகிறது. வினையாலணையும் பெயர் வடிவம்

தொடர்ந்து ஒரே வாய்பாட்டு வடிவம் தொடர்ந்து வருமுகமாக இடம்பெறுதலைக் காணலாம். இத்தகைய அமைப்பு ஒரு கவிநயத்தை இவ்வசன நடைக்கு அளிக்கிறது எனலாம்.

இயேசுவின் நற்போதனைகளில் 'நான் சொல்வது உண்மைதான்' என்ற வலியுறுத்தல் கருதி இடம்பெறும் '**மெய்யாகவே சொல்லுகிறேன்,** என்ற அமைப்பில் 'மெய்யாகவே' என்ற சொல் திரும்பத்திரும்பப் பல வசனங்களில் இடம்பெறுகிறது. இது போலவே பலவிடங்களில் **உங்களுக்குச்** சொல்லுகிறேன் என்று கேட்போரை முன்னிலைப்படுத்தும் முன்னிலைச் சொல்லாகிய வேற்றுமை உருபு ஏற்கத் திரிந்த வடிவமும் திரும்பத்திரும்ப இடம்பெறுகிறது.

> வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் அதில் ஒரு சிறு எழுத்தாகிலும் ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று **மெய்யாகவே உங்களுக்குச்** சொல்லுகிறேன்
>
> *(மத். 5: 18)*

> நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் **கொள்பவன்** நியாயத்தீர்ப்புக்கு **ஏதுவாயிருப்பான்** தன் சகோதரனை வீணனென்று **சொல்லுகிறவன்** ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு **ஏதுவாயிருப்பான்** மூடனே என்று **சொல்லுகிறவன்** எரி நரகத்துக்கு **ஏதுவாயிருப்பான்**
>
> *(மத். 5: 22)*

இவ்வசனத்தில் வினையாலணையும் பெயர்த்தொடரும் ஏதுவாயிருப்பான் என்ற வினைமுற்றும் திரும்பத்திரும்ப இடம் பெறுகின்றன. கேட்பவனின் மனத்தில் கருத்தைப் பதியவைக்க இம்முறை உதவுகிறது.

> இதேபோல
> **நீயோ** தர்மஞ்செய்யும் போது....
> **நீயோ** ஜெபம் பண்ணும்போது....
> **நீயோ** உபவாசிக்கும்போது...
>
> *(மத். 6: 3, 6, 17)*

இன்னின்னவாறு செயல்படு என்ற பொருளில் ஒரே மாதிரியான தொடரமைப்பு திரும்பத்திரும்ப இடம்பெறும்போது செய்திகள் மனதில் பதிவதுடன் ஒரு கவித்துவமும் செய்தி சொல்லும் முறைக்குக் கிடைக்கிறது.

> *உங்களை ஏற்றுக் கொள்கிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான். என்னை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான்*
>
> *(மத். 10: 40)*

இத்தகைய அமைப்பு கருத்து இயைபைத் தந்து வசனநடைக்கு ஒருவித கவித்துவத்தைத் தருகிறது.

முடிவுகள்

பெயர்ச்சொற்கள் தனித்தும் 'ஆனவர்', 'ஆகிய' போன்ற சொற்களைச் சேர்த்துக் கொள்வதால் விரிந்தும் அமைக்கப் படுகின்றன. பெயர்ச்சொற்களை விரித்து விளக்கிச் சொல்வது கருதி இத்தகைய முறை கையாளப்பட்டிருக்கிறது எனலாம். வடசொற்கலப்பு, சீர்திருத்தச் சபையினர் பின்பற்றும் இவ் விவிலியத்தில் சற்று அதிகமாகவே உள்ளது. மொழிபெயர்க்கப் பட்ட காலத்தில் மதிப்புக் கருதி இச்சொற்கள் பயன்படுத்தப் பட்டிருந்திருக்கக் கூடும். பொதுமொழிபெயர்ப்புத் திருவிவிலியம் இச்சொற்களைத் தமிழ்ப்படுத்தியுள்ளமை சிறப்பாக உள்ளது. இது 'கிறித்துவச் செய்தி சார்ந்த உள்ளடக்கம்' என்று இனங்காட்ட கிறித்தவ மரபுச் சொற்கள் பெரிதும் உதவுகின்றன. சுட்டுச் சொற்கள், சொல்லவரும் கருத்தின் முக்கியத்துவத்தைப் புரிய வைப்பதுடன் செய்தியைக் காட்சிப்படுத்தவும் உதவுகின்றன. பேச்சுவழக்குச் சொற்கள் கவனமாகப் பெரிதும் தவிர்க்கப்பட்டுள்ளன. 'பண்ணு', இரு, 'மாட்டு' ஆகிய துணை வினைகள் சேர்த்து எழுதுதல் மொழிநடையைப் பேச்சுச் சாயலுக்குக் கொண்டு வருகிறது. ஆனால் இதுவும் குறைவே. எதிர்மறைச் சொற்கள், எதிர்மறைப் பெயரெச்சங்கள், முன்னொட்டு, சில துணைவினைகள் போன்றன எதிர்மறைப் பொருளை உணர்த்த உதவுகின்றன. முரண்சொற்களை இயல்பாகவே கலந்து எழுதும் முறை அதிகம் காணப்படுகிறது. முரண் சொற்கள் எதிர்ப்பதமாகிய சொல்லைச் சேர்த்துச் சொல்லிக் கருத்தை எளிதில் விளங்க வைக்கின்றன. அடுக்குச்

சொற்களின் பயன்பாடு அருகிக் காணப்படுகிறது. ஒலிக்குறிப்புச் சொற்களுள் குறிப்பாக, 'ஐயோ' என்ற சொல் கடவுளுக்கு எதிராக நடக்கின்றவர்களுக்கு விளையப் போகும் அவலத்தைச் சுட்ட இரக்கப் பொருளில் கையாளப்படுகிறது. வேற்றுமை உருபுகள் மயங்கியும் ஒரே உருபு வேறு பொருளிலோ அல்லது இருமுறையோ அமைந்தும் வருவது குறிப்பிட்ட காலத்திற்குள் மொழிபெயர்க்க வேண்டும் என்று வேகமாகச் செயல்படுவதனால் இருக்கலாமோ அல்லது தமிழ் மொழி மரபைக் கவனிக்காமல் விட்டுவிடுவதனால் இருக்கலாமோ என்று எண்ண இடமளிக்கிறது. தகுந்த சொற்கள் தகுந்த இடத்தில் இடம்பெறுவது சொல்லவரும் கருத்தை உள்ளபடியே புலப்படுத்துகிறது. கடினச் சொற் பயன்பாடு சாதாரண வாசகனுக்குப் பொருள் தெரிவிப்பில் இடர்விளைவித்துப் பொருள் புரிதலைச் சற்றுத் தாமதப்படுத்துகிறது. இத்தகைய இடங்களில் சூழலைக் கருத்தில் கொண்டு பொருள் விளங்க வேண்டியிருக்கிறது. திரும்பத் திரும்ப வரும் சொற்கள் உரைநடைக்குக் கவித்துவத்தைத் தருவதுடன் கருத்தை எளிதில் புலப்படுத்தவும் உதவுகின்றன.

குறிப்புகள்

1. *இ. சுந்தரமூர்த்தி, "நடையின் வகைகள்",* **தமிழாய்வு - மு. வரதராசன் நினைவு மலர்**, *ப. 87.*
2. *மு. வரதராசன்,* **இலக்கியத்திறன்**, *ப. 238.*
3. J. Warburg, Appropriate Choice, Quoted by David Lodge, Language of Fiction, p. 61.
4. Richard M Eastman, Style, p.6.
5. *ஜெ. நீதிவாணன்,* **நடையியல்**, *ப. 148.*
6. *மேலது, ப. 46.*
7. **திருவிவிலியம் பொது மொழிபெயர்ப்பு, புதிய ஏற்பாடு**, *பக். 3-4.*
8. *மேலது, ப. 4.*
9. *ஜவஹர் சாமுவேல்,* **பரிசுத்த ஆவியானவரை அறிந்து கொள்ளுங்கள்**, *ப. 7.*

10. Harold A. Buetow, **God Still Speaks; Listen! Homily Reflections for Sundays and Holy Days Cycle A,** p. 7.

11. *சபாபதி குலேந்திரன்,* **தமிழ் வேதாகம வரலாறு,** *த. எஸ்தர் நான்ஸி பியூலாவின் தமிழில் விவிலிய மொழிபெயர்ப்புக்கள் ஓர் ஒப்பாய்வு என்ற நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது, ப. 266.*

12. மோசஸ் மைக்கேல் பாரடே, **சிலுவை வழிச் சிந்தனைகள்,** *ப. 41.*

2. தொடரமைப்பு

சென்ற இயலில் குறிப்பிட்ட சொல்லாட்சி முறையின் விளைவாகச் சொற்கள் தொடர்ந்து அமையும் போது விவிலியத்தில் காணப்படும் தொடரமைப்புகளை இவ்வியல் ஆராய்கிறது. விவிலியத்தில் தொடரமைப்புகளுக்குக் குறிப்பிட்ட ஓர் இடம் உள்ளது என்று கூறுமளவிற்குச் சில சொற்றொடர் அமைப்புகள் குறிப்பிடத்தக்கனவாய் அதிகம் இடம் பெறுகின்ற முறையினைக் காணலாம். சொற்கள் கூற்று நிகழ்த்துபவரின் மனநெகிழ்ச்சியின் தன்மையினைப் புலப்படுத்துவது போலவே ஒருவர் கையாளும் சொற்றொடர் அமைப்புகளும் அப்பேச்சு நிகழ்ச்சி அல்லது அப்படைப்பு சிறப்பதற்குப் பெரிதும் துணை செய்கின்றன எனலாம். சொற்றொடர் அமைப்புக்களைச் சரிவரப் பயன்படுத்தாதனாலேயே பேசுபவர் என்ன சொல்ல வருகின்றார் என்று விளங்காமல் போக இடமுண்டு. மாறாக, சரியாகப் பயன்படுத்துவதனால் எளிதில் பொருளை விளங்க வைக்க மட்டுமின்றி, பேச்சைக் கவனிப்பதற்கு ஆர்வமூட்டவும் வகையுண்டு.

விவிலியத்தில் கையாளப்படும்சொற்றொடர்களைப் பின்வருமாறு பிரித்துக் காட்டலாம்.

1. தனி வாக்கியங்கள் (Simple sentences)
2. தகவல் பொருள் தொடர்கள் (Reportive sentences)
3. எதிர்மறை வாக்கியங்கள் (Negative sentences)
4. அனுமதி வாக்கியங்கள் (Permissive sentences)
5. எச்சத் தொடர்கள் (Participle form)
6. பெயர்த்தொடர்கள் (Nominative sentences)
7. கடப்பாட்டு வாக்கியங்கள் (Conditional sentences)
8. தொடர் இணைப்பு உருபன்களால் அமையும் தொடர்கள் (Hypotactic sentences)
9. ஒப்புமைத் தொடர்கள் (Comparative sentences)
10. விளித் தொடர்கள் (Vocative sentences)

11. வினாத்தொடர்கள் (Interrogative sentences)
12. கலவை வாக்கியங்கள் (Complex sentences)
13. செயப்பாட்டு வினைத் தொடர்கள் (Passive sentences)
14. அதிகார அறிவிப்புத் தொடர் (Proclamative sentences)
15. ஆணைத் தொடர் (Authoritative sentences)
16. வியங்கோள் தொடர் (Optative sentences)

2.1. தனிவாக்கியங்கள்

தனிவாக்கியங்களாய் அமையும் தொடர்கள் எளிய தொடர்களாய் அமைவன; பொருளைத் தெரிவிப்பதில் எவ்விதக் குழப்பமும் இல்லாமல் தெளிவாக விளக்கும் ஆற்றலுடையன இத்தகைய தொடர்கள்.

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

(மத். 5:7)

கேளுங்கள்; அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப் படும். தேடுங்கள்; அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள்; அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.

(மத். 7:7)

கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு; அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்.

(சங். 55:22)

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, கர்த்தரை நம்புங்கள்; அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குச் கேடகமுமாயிருக்கிறார்.

(சங். 115:11)

என் கருவை உம்முடைய கண்கள் கண்டது.

(சங். 139: 16)

நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்.

(ரோமா. 12:12)

2.2. தகவல் பொருள் தொடர்கள்

'ஆம்' என்னும் சொல் தொடரின் இறுதியில் அமைந்து பல்வேறு பொருள்களைத் தருகிறது. இவ்வமைப்பையும் சிறுபான்மை காண முடிகிறது.

> ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப் பிரமாணங்களும் தீர்க்க தரிசனங்களுமாம்.
>
> (மத். 7:12)

நீ உன்னிடத்தில் அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக (மத். 22: 39) என்ற இரண்டாம் கற்பனையை ஒத்த செய்தியைச் சொல்லும் போது 'ஆம்' என்ற சொல்லை இணைத்துத் திட்டவட்டமாகத் தகவலைத் தெரிவிக்கும் போக்கு மேற்சுட்டிய வசனத்தில் கையாளப்பட்டுள்ளது.

2.3. எதிர்மறைத் தொடர்கள்

எதிர்மறையாகக் கருத்துகளைப் பரிமாற இத்தொடர்கள் உதவுகின்றன.

> என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான் என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான் ....ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை.
>
> (மத். 12:30, 31)

> இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் கைகழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது.
>
> (மத். 15:20)

'இல்லை' போன்ற சொல்லைச் சேர்ப்பது, உடன்பாட்டுச் சொல்லை 'ஆ' என்ற எதிர்மறை உருபனைச் சேர்த்து எதிர்மறைச் சொல்லாக்குவது போன்ற முறைகள் கையாளப்படுகின்றன.

> அதற்கு இயேசு உங்கள் அவிசுவாசத்தினாலேதான். கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம் போம்;

உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று மெய்யாவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

(மத்: 17:20)

உங்களை அறியேன். (மத்: 25:12)

நோவா பேழையிலிருந்து தன்மக்களுடனும் சகல ஜீவராசிகளுடனும் புறப்பட்டு வந்து பலிபீடம் கட்டித் தேவனுக்குப் பலியிட்ட பின்னர் நிகழும் சம்பவம் பின்வருமாறு:

சுகந்த வாசனையைக் கர்த்தர் முகந்தார். அப்பொழுது கர்த்தர்: இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கி பொல்லாததாயிருக்கிறது; நான் இப்பொழுது செய்தது போல இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை..........

(ஆதி. 8:21)

உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்; உன்னோடே யுத்தம் பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் இல்பொருளாவார்கள்.

(ஏசாயா 41:12)

இச்சான்றுகளில் 'இல்லை', 'இல்லாமல்', 'ஆ', 'ஏ' என்ற எதிர்மறைப் பொருள் தரும் உருபன், 'அ' என்ற முன்னொட்டு, எதிர்மறைப் பெயரெச்சங்கள் முதலியவற்றின் வழி எதிர்மறைப் பொருள் உணர்த்தப்படுகிறது. விவிலியம் சமயப் போதனை நூலாக இருப்பதால் பெரும்பாலும் எதிர்மறைத் தொடர் அமைப்புகள் குறைக்கப்பட்டு உடன்பாட்டுப் போக்கிலேயே சொல்லி மக்களை ஈர்க்கும் முறை காணப்படுகிறது.

2.4. அனுமதி வாக்கியங்கள்

ஏவல் பொருளாகவும் இல்லாமல் வியங்கோள் பொருளாகவும் இல்லாமல் அனுமதிப் பொருளைத் தரும் தொடர்கள் இயேசுவின் கூற்றிலும் சுவிசேஷப் பணியாளர்கள் கூற்றிலும் இடம் பெறுகின்றன.

உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு ஊழியக்காரனா யிருக்கக் கடவன்.

(மத். 21:27)

உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்கா ரனாயிருக்கக் கடவன். (மத். 23:11)

கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன். (மத். 13:9)

இவ்வமைப்பு 'இரு' என்றோ 'இருப்பாயாக' என்றோ அல்லது 'கேள்' என்றோ 'கேட்பானாக' என்றோ முதலான பொருள் தருவதைவிடவும் 'இருக்கட்டும்' 'கேட்கட்டும்' என்ற பொருளைத் தருகிறது. முன்னிலையில் 'இருக்கக் கடவாய்', 'கேட்கக் கடவாய்' என்று பணிந்து சொல்வது போல அமையும் இவ்வமைப்பு படர்க்கையில் சொல்லப்படும் போது ஆணையாகச் சொல்வது போலத் தோன்றினாலும் அதன் பொருள் அனுமதிக்கும் தொடராகவே அமைகிறது.

2.5. எச்சத் தொடர்கள்

ஒருவர் மேற்கொள்ளும் பல்வேறு வினைகளின் தொடர்ச்சியைக் காட்டுவதற்கு வினையெச்சத் தொடர்கள் பயன்படும்.

*பின்பு இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி **நடந்து** ஜெப ஆலயங்களில் **உபதேசித்து** ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் **பிரசங்கித்து** ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் **நீக்கி** அவர்களைச் சொஸ்தமாக்கினார்.*

(மத். 9:35)

'நடந்து', 'உபதேசித்து', 'பிரசங்கித்து', 'நீக்கி' ஆகிய வினையெச்சங்கள் தொடர்ந்து இடம்பெற்று நிகழ்ச்சியின் தொடர்ச்சியை விளக்குகின்றன.

*நீ தேவனுக்கு ஸ்தோத்திர **பலியிட்டு** உன்னதமான வருக்கு உன் பொருத்தனைகளைச் **செலுத்தி** ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன் நீ என்னை மகிமைப் படுத்துவாய்.*

(சங். 50: 14-15)

கர்த்தரைக் கூப்பிடுவதற்குமுன் செய்ய வேண்டிய செயல்களை இவ்வினையெச்சத் தொடர் விளக்குகிறது.

நீ புசித்து திருப்தியாகி, நல்ல வீடுகளைக் கட்டி அவைகளில் குடியிருக்கும்போதும், உன் ஆடு மாடுகள் திரட்சியாகி, உனக்கு வெள்ளியும் பொன்னும் பெருகி, உனக்கு உண்டானவை யெல்லாம் வர்த்திக்கும்போதும், உன் இருதயம் மேட்டிமையடையாமலும் உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினவரும், உன்னுடைய பின்நாட்களில் உனக்கு நன்மை செய்யும் பொருட்டு உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைச் சோதித்து, கொள்ளி வாய்ச் சர்ப்பங்களும் தேள்களும் தண்ணீரில்லாத வறட்சியுமுள்ள பயங்கரமான பெரிய வனாந்தர வழியாய் உன்னை அழைத்து வந்தவரும் உனக்காகப் பாறையான கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப் பண்ணினவரும், உன் பிதாக்கள் அறியாத மன்னாவினால் வனாந்தரத்திலே உன்னைப் போஷித்து வந்தவருமான உன் தேவனாகிய கர்த்தரை நீ மறவாமலும் என் சாமர்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்துத் தந்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கை யாயிருந்து உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக.

(உபா. 8: 12-18)

இச்சான்றில் தேவனுடைய செயல்கள் மற்றும் இஸ்ரேல் மக்களின் செயல்கள் தொடர்ந்து வரும் வினையெச்சங்களால் சுட்டப்படுகின்றன.

எச்சத் தொடர்களுள் வினையெச்சத் தொடர்கள் அதிகம் அமைந்து வருவதைக் காண முடிகிறது. ஒருவரது செயலின் தொடர்ச்சியைக் குறிக்க (Sequence of action) இத்தொடரமைப்பு பயன்படுத்தப்படுகிறது.

அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து அவளை அவமானப்படுத்த மனதில்லாமல் இரகசியமாய் அவளைத் தள்ளிவிட மனதாயிருந்தான்.

(மத். 1:19)

இஸ்ரவேல் மக்களைத் தேவன் எகிப்திலிருந்து வழி நடத்திக் கூட்டி வந்தபோது அவர் செய்த அதிசயங்கள் அனைத்தும் விளக்கியும் ஆனாலும் அவர்கள் மேலும் கடவுளை நம்புவதில் குறைபாடுள்ளவர்களாய் இருந்ததையும் தேவன் அதனால் அவர்கள் மேல் கோபம் கொண்டதையும் விளக்குகிறது சங்கிதம் 78. அதில் அமையும் ஒரு பகுதி வினையெச்சத் தொடருக்குச் சான்றாய் அமையும்.

> *அவர்கள் பயப்படாதபடிக்கு அவர்களைப் பத்திரமாய் வழிநடத்தினார். அவர்கள் சத்துருக்களைக் கடல் மூடிப் போட்டது. அவர்களைத் தமது பரிசுத்த ஸ்தலத்தின் எல்லை வரைக்கும் தமது வலதுகரம் சம்பாதித்த இந்தப் பர்வத மட்டுக்கும்* **அழைத்துக் கொண்டு வந்து**, *அவர்கள் முகத்திற்கு முன்பாக ஜாதிகளை* **துரத்திவிட்டு** *தேசத்தை* **நூல்போட்டுப் பங்கிட்டு** *அவர்களுடைய கூடாரங்களில் இஸ்ரவேலின் கோத்திரங்களைக் குடியேற்றினார். ஆனாலும் அவர்கள் உன்னதமான தேவனைப்* **பரீட்சை பார்த்து**, *அவருக்குக்* **கோபம்மூட்டி**, *அவருடைய சாட்சிகளைக்* **கைகொள்ளாமற்போய்**, *தங்கள் பிதாக்களைப் போல* **வழிவிலகி**, **துரோகம் பண்ணி**, *மோசம் போக்கும் வில்லைப் போல்* **துவண்டு**, *தங்கள் மேடைகளினால் அவருக்குக்* **கோபம் மூட்டி**, *தங்கள் விக்கிரகங்களினால்* **எரிச்சல் ஊட்டினார்கள்**. *தேவன் அதைக்* **கேட்டு**, **உக்கிரமாகி**, *இஸ்ரவேலை மிகவும்* **வெறுத்து**, *தாம் மனுஷருக்குள்ளே போட்ட கூடாரமாகிய சீலோவிலுள்ள வாசஸ்தலத்தை விட்டு* **விலகி**, *தமது பலத்தைச் சிறையிருப்புக்கும் தமது மகிமையைச் சத்துருவின் கைக்கும் ஒப்புக்* **கொடுத்து**, *தமது ஜனத்தைப் பட்டயத்துக்கு* **இரையாக்கி**, *தமது சுதந்தரத்தின் மேல் கோபங் கொண்டார்.*
>
> *(சங். 78: 54-62)*

இவ்வசனங்களில் இஸ்ரவேல் மக்கள் தம் செயல்களையும் தேவனின் பதில் செய்கைகளையும் தொடர்ந்து வரும் வினை யெச்சங்கள் புலப்படுத்துகின்றன.

*அதிசயங்களைச் **செய்கிற தேவன்** நீரே* (சங். 77:14)

என்பது போன்ற பெயரெச்சத் தொடர்களும் உள்ளன.

2.6. பெயர்த்தொடர்

ஒருவரை அல்லது ஒன்றனை விளக்கிக் காட்டும் பெயர்த் தொடர் சிற்சிலவிடங்களில் அமைகின்றன. இத்தகையவை அடைமொழித் தொடராகவோ வினையாலணையும் பெயராகவோ அமைகின்றன. ஏசாயா தீர்க்கதரிசி வரப்போகும் கிறிஸ்து பற்றி உரைப்பவை பின்வருமாறு:

> நமக்கு ஒரு பாலகன் பிறந்தான்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும். **அவர் நாமம் அதிசயமானவர் ஆலோசனைக் கர்த்தா. வல்லமையுள்ளதேவன், நித்தியபிதா, சமாதானப்பிரபு** என்னப்படும்.
>
> (ஏசாயா. 9:6)

> இதுவும் சேனைகளின் கர்த்தராலே உண்டாகிறது. அவர் ஆலோசனையில் **ஆச்சரியமானவர்** செயலில் **மகத்துவமானவர்**
>
> (ஏசாயா. 28:29)

> ....கர்த்தர் நீதி **செய்கிற தேவன்**; அவருக்குக் **காத்திருக்கிற** அனைவரும் பாக்கியவான்கள்
>
> (ஏசாயா. 30:18)

என்பது பெயரெச்சத்தொடராய் அமைகிறது.

> பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை **நடத்துகிற** உன் **தேவனாகிய** கர்த்தர் நானே
>
> (ஏசாயா. 48:17)

இறைவனின் ஆற்றலை - குறிப்பாக மனிதனைப் பாதுகாக்கும் ஆற்றலை இவ்வடைமொழிகள் புலப்படுத்துகின்றன.

2.7. கடப்பாட்டு வாக்கியங்கள்

'இது இப்படி என்றால்', 'இன்னதாக ஆகுக' என்று ஒரு விதிப்பினை (கடப்பாட்டினை) உள்ளடக்கிய தொடர்கள் உள்ளன. இதனை அ) காரணம் - விளைவு ஆ) ஊகம் - விளைவு இ) ஊகம் - முடியாதவை என்று வகைப்படுத்துவர். [1]

சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்.

(மத். 4:3)

நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால் இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்.

(மத். 4:9)

வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

(மத். 5:20)

'இப்படியானால் இப்படி செய்' 'இப்படியானால் இப்படி ஆவீர்' என்ற அமைப்பில் இத்தகைய தொடர்கள் அமைவதால் கூறவரும் கருத்து வலுப்பெறுகிறது.

2.8. தொடர் இணைப்பு உருபன்களால் அமையும் தொடர்கள்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாக்கியங்களை இணைப்பதற்குப் பல உருபன்கள் பயன்படுகின்றன. இவ்வாறு அமையும் தொடர்கள் இணைப்புத் தொடர் (Hypotactic Sentences) எனப்படும். தொடர் இணைப்பு உருபனாகப் பெரிதும் பயன்படுவது 'உம்' ஆகும். விவிலியத்திலும் 'உம்' என்ற இணைப்பு உருபனைப் பயன்படுத்தி எழுதப்படும் தொடர்கள் அதிகமாக உள்ளன. வேகமான மொழிபெயர்ப்பில் குறிப்பாக அதிகப் பகுதிகள் மொழிபெயர்க்கப்பட வேண்டிய சூழலில் இத்தகைய 'உம்' என்ற உருபனை இணைத்து எழுதும் முறை எளிதாக மொழிபெயர்ப்பாளருக்குக் கை கொடுக்கிறது எனலாம். 'அன்றியும்', 'ஏ', 'ஓ', 'உம்', 'உடனே', 'ஆவது', 'அது', 'ஆகையால்', 'அந்த', 'ஆன', 'ஆகிய', 'அப்படி' முதலியனவும் தொடர் இணைப்பு உருபன்களாகப் பயன்படுகின்றன.

உன் தேவனாகிய கர்த்தர் உன்னை நல்ல தேசத்திலே பிரவேசிக்கப் பண்ணுகிறார். அது பள்ளத்தாக்குகளும் மலைகளிலிருந்து புறப்படுகிற ஆறுகளும் ஊற்றுகளும் ஏரிகளுமுள்ள தேசம். அது கோதுமையும்

வாற்கோதுமையும் திராட்சச் செடிகளும் அத்தி மரங்களும் மாதளஞ்செடிகளுமுள்ள தேசம். அது ஒலிவ மரங்களும் எண்ணெயும் தேனுமுள்ள தேசம். அது தாழ்ச்சியில்லாமல் அப்பம் புசிக்கத்தக்கதும் என்றும் உனக்குக் குறைவுபடாததுமான தேசம்; அது கல்லுகள் இரும்பாயிருக்கிறதும் செம்பு வெட்டி யெடுக்கத்தக்க மலைகளுமுள்ளதுமான தேசம்; ஆகையால் நீ புசித்துத் திருப்தியடைந்திருக்கையில் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த அந்த நல்ல தேசத்துக்காக அவரை ஸ்தோத்திரிக்கக் கடவாய்.

(உபா. 8: 7-10)

தொடர்களைத் தொடர்ந்திணைக்க *'உம்', 'அது', 'ஆகையால்', 'அந்த'*, ஆகியன பயன்படுகின்றன.

அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப் போனான்.

(மத். 4:11)

'ஆன' என்ற இணைப்பு உருபன் இணைந்து பெயர் விளக்கம் பெற்றுத் தொடர் உருவாக்கம் பெற்றுள்ளது.

கடற்கரையருகிலும் யோர்தானுக்கு அப்புறத்திலு முள்ள செபுலோன் நாடும் நப்தலி நாடும் ஆகிய புறஜாதியாருடைய கலிலேயாவிலே......

(மத். 4:14)

இத்தொடரமைப்பில் 'உம்', 'ஆகிய' 'ஏ' ஆகியன தொடர் இணைப்பு உருபன்களாகச் செயல்பட்டுள்ளன.

எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும் கொலைபாதகங்களும் விபசாரங் களும் வேசித்தனங்களும் களவுகளும் பொய்ச் சாட்சிகளும் தூஷணங்களும் புறப்பட்டு வரும்.

(மத். 15:19)

இங்கு 'உம்' இணைப்பு உருபனாகச் செயல்படுகிறது.

இயேசுவின் சுகமளிக்கும் சம்பவங்களிலும் சீடர்களைத் தெரிந்தெடுத்தல் போன்ற முக்கியச் சம்பவங்களிலும் ஒரு

தொடருக்கும் அடுத்த தொடருக்கும் இடையே 'உடனே' என்ற சொல் இணைந்து செயலின் விரைவினை விளக்குவதைக் காணலாம். இவ்விணைப்பின் காரணமாக இயேசு தேவகுமாரன் என்பதும் எதிரிலிருப்போர் சாதாரணமானவர்கள் என்பதும் விளக்கம் பெறுகின்றன.

> இயேசு கலிலேயாக் கடற்கரையோரமாய் நடந்து போகையில் மீன்பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும் அவன் சகோதரன் அந்திரேயாவும் கடலில் வலை போட்டுக் கொண்டிருக்கிறபோது அவர்களைக் கண்டு: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்.

(மத். 4:18 - 20)

> இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு எனக்குச் சித்தமுண்டு சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சொஸ்தமானான்

(மத். 8:3)

> அவர் அவள் கையைத் தொட்டவுடனே ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று

(மத். 8:15)

> திமிர்வாதக்காரனை நோக்கி நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு உன் வீட்டுக்குப் போ என்றார். உடனே அவன் எழுந்து தன் வீட்டுக்குப் போனான்.

(மத். 9: 6,7)

> அந்தச் சிறுபெண்ணின் கையைப் பிடித்தார். உடனே அவள் எழுந்திருந்தாள்

(மத். 9:25)

> சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.

(மத். 5:12)

இவ்விறுதி வசனத்தில் 'அப்படித்தானே துன்பப்படுத்தினார்கள்' என்ற பொருளைக் குறிப்பிடும் நோக்கில் 'தான்', 'ஏ' என்ற இரு இடைச்சொற்களுக்குப் பதில் 'ஏ' என்ற சொல்லையே இருமுறை பயன்படுத்தியும் 'உம்' என்ற இடைச்சொல்லை ஒரு முறை பயன்படுத்தியும் வலியுறுத்தற் பொருளைத் தெரிவித்திருப்பதைக் காண முடிகிறது.

'உம்', 'ஏ', 'அப்படி' ஆகியன தொடரிணைப்பான்களாகப் பயன்படுகின்றன.

> எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக் கொடாமலும் நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும் நீ சிறைச் சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து.
>
> *(மத். 5:25)*

இவ்வசனத்தில் 'உம்' தொடர் இணைப்பானாகச் செயல்படுகிறது.

> என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரை யாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளை யாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ அவன் நூறத்தனையாய் அடைந்து நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்
>
> *(மத். 19:29)*

இச்சான்றில் 'ஆவது' என்ற சொல் தொடர்களை இணைக்கிறது. ஆபிரகாமைக் கடவுள் சோதிக்கும்படி அவன் மகன் ஈசாக்கைப் பலியிடும்படி கேட்கிறார். அவன் ஒப்புக் கொண்டு அதன்படியே செய்யப் போகும் போது அவன் பக்தியைப் பாராட்டித் தடை செய்கிறார். ஆபிரகாம் ஓர் ஆட்டுக்கடாவைப் பின்னர் அவ்விடத்தில் பலியிட்டு அவ்விடத்துக்கு 'யெகோவாயீரே' என்று பெயரிடுகிறான். அப்போது கர்த்தருடைய தூதன் அவன் ஏககுதன் என்று பாராமல் தன் மகனைப் பலியிடத் துணிந்ததைக் கர்த்தர் சொல்லுகிறதாகச் சொல்வதில் ஒரு பகுதி பின்வருமாறு:

> நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும்

கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன் என்றும்............................ கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

(ஆதி. 22:17-18)

இங்கு 'ஏ', 'உம்' ஆகிய இடைச்சொற்கள் பயன்பட்டுள்ளன.

கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடியசாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர்

(சங். 103: 8)

'உம்' தொடரிணைப்பாகச் செயல்படுகிறது.

'ஏ' என்ற இடைச்சொல் தேற்றப் பொருளில் பல இடங்களில் வருவதைக் காணலாம். 'ஏ' தொடரை இணைப்பதற்குப் பயன்படுவதை விட, தேற்றப் பொருளை உணர்த்தி ஒரு கருத்தை வலியுறுத்தப் பயன்படுத்தப்படுகிறது.

இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக; அவரே அதிசயங்களைச் செய்கிறார்.

(சங். 72: 18)

தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது.

(சங். 62:1)

'ஓ' என்ற இடைச்சொல் தொடரை இணைப்பதற்குப் பயன்படுகிறது என்று சொல்ல முடியாவிட்டாலும் வலியுறுத்தற் பொருளைத் தர குறிப்பாகத் தொடரில் ஒரு நபரை முக்கியத்துவப் படுத்த இடம் பெறுகிறது.

நானோ சிறுமையும் எளிமையுமானவன்; தேவனே என்னிடத்தில் தீவிரமாய் வாரும்; நீரே என் துணையும் என்னை விடுவிக்கிறவருமானவர். கர்த்தாவே தாமதியாதேயும்.

(சங். 70:5)

நானோ எப்பொழுதும் நம்பிக்கை கொண்டிருந்து மேன்மேலும் உம்மைத் துதிப்பேன்.

(சங். 71:74)

எனக்கோ தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்.

(சங். 73:28)

அவரோ அவர்களை அழிக்காமல் இரக்கமுள்ளவராய் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்தார்.

(சங். 78:38)

விவிலியத்தில் தொடர்களை இணைக்க 'உம்' என்ற இடைச்சொல் அதிகமாகப் பயன்படுகிறது. இவ்வமைப்பில் அமையும் தொடர்கள் ஏராளமாய் உள்ளன. அதற்கடுத்த நிலையில் 'ஓ' என்ற இடைச்சொல் பயன்படுகிறது. மொழிபெயர்ப்பாளர்களின் கரத்தில் உடனடியாக இருப்பன (readily available) என்று சொல்லக் கூடியனவாக இவ்வமைப்புக்கள் மொழிபெயர்ப்பாளர்களுக்குக் கை கொடுப்பதால் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2.9. ஒப்புமைத் தொடர்கள்

போல், போல, போலே, போன்று, போன்ற, ஆக, நிகர், அன்ன, அனைய, ஒக்க என்பன போன்ற உவம உருபுகளைப் பயன்படுத்திச் சில கருத்துகள் விளக்கப்படுமானால் அவற்றை ஒப்புமைத் தொடர்கள் அல்லது உவமைத் தொடர்கள் என்று குறிப்பிடுகிறோம். இவ்வுவம உருபுகள் இல்லாமலும் உவமிக்கும் முறை காணப்படுகிறது.

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். உப்பானது சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும் மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.

(மத். 5:13)

இங்கு மக்களுக்கு உவமானமாக உப்பு சொல்லப்படுகிறது. உவம உருபு இல்லை. உப்பின் சாரமும் மனிதன் பெற்றிருக்க வேண்டிய தன்மைகளும் ஒப்புமைப்படுத்தப்படுகின்றன. இதுபோலவே வெளிச்சம் மக்களுக்கு உவமானமாகச் சொல்லப்படுவது

நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்.

(மத். 5:14)

என்ற வசனத்தில் அமைகிறது.

உவமானம்	உவமேயம்
மலைமேல் உள்ள பட்டணம்	வெளிச்சமுள்ள (நற்கிரியை யுள்ள) மனிதன்
ஏற்றப்பட்டுள்ள விளக்கு வைக்கப்பட்ட விளக்குத் தண்டு	

என்ற செய்திகளும் (மத். 5:14-16) இத்தகையனவே.

ஆகையால் நீ தர்மஞ் செய்யும் போது மனுஷராற் புகழப்படுவதற்கு மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வது போல உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே ..... உன் வலது கை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது.

(மத். 6: 2,3)

இங்கு 'போல' என்ற உவமஉருபு வெளிப்படையாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

யாக்கோபு தன் சகோதரன் ஏசாவுடன் ஏற்பட்ட சில மன வேறுபாடுகளின் காரணமாகத் தன் மாமன் வீட்டிற்குப் போய் இருந்து பல வருடங்கள் உழைத்து மனைவி மக்களுடன் திரும்பவும் தன் ஊருக்கு வரும்போது ஏசா குறித்த அச்ச வுணர்வுடன் அவனுக்குப் பொருட்களைப் பரிசாக முதலில் கொடுத்தனுப்ப அவன் அஞ்சியது போலன்றி ஏசா எதிர்கொண்டு வந்து அவனைக் கட்டித் தழுவுகிறான். அப்போது யாக்கோபுவின் மகிழ்ச்சியான மனநிலை தகுந்த உவமை மூலம் சொல்லப்படுகிறது.

..............நீர் என்மேல் பிரியமானீர். நான் உம்முடைய முகத்தைக் கண்டது தேவனுடைய முகத்தைக் கண்டது போல இருக்கிறது.

(ஆதி. 33: 10)

இத்தொடர் பொருத்தமான உவமையாகவும் 'போல' என்ற உவம உருபுடனும் அமைந்துள்ளது.

வரவிருக்கும் மேசியா மக்களால் படப்போகும் பாடுகள் குறித்துக் கூறும் ஏசாயா தீர்க்கதரிசி தரும் உவமை பின்வருமாறு:

நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழி தப்பித் திரிந்து அவனவன் தன்தன் வழியிலே போனோம்,

> கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப் பண்ணினார். அவர் நெருக்கப் பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. **அடிக்கப் படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப் போலவும் தன்னை மயிர் கத்திரிக்கிற வனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும்** அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.
>
> (ஏசாயா. 53: 6-7)

> இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது
>
> (I. கொரி. 13:13)

என்று ஒப்பிடும்போது பெரியது என்ற சொல் மட்டுமின்றி அதனை வலியுறுத்த 'ஏ' என்ற இடைச்சொல்லும் பயன்படுகிறது.

2.10. விளித்தொடர்கள்

படர்க்கையில் சொல்வதை விடவும் முன்னிலைப்படுத்தி விளித்துச் சொல்வது கேட்போரிடம் கருத்தை எளிதில் சேர்க்கும். கேட்போரை அடிக்கடி விளிப்பது அவரைத் தன் பேச்சைக் கேட்கச் செய்யுமாறு செய்யும். இயேசுவின் போதனைகளில் இதனைக் காண முடிகிறது. இயேசுவின் நற்போதனைகளில் மக்களை விளிக்கிறார். பரிசேயர் சதுசேயர் ஆகியோரையும் விளித்துப் பேசுகிறார். பெரும்பாலும் அவர்களைப் படர்க்கையில் குறிப்பிடும் முறையும் உண்டு. யோவான் பிரசங்கம் நிகழ்த்தும் போது பின்வரும் வசனம் அமைகிறது.

> பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை அவன் கண்டு **விரியன் பாம்புக் குட்டிகளே!** வருங் கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகை காட்டினவன் யார்?
>
> (மத். 3:7)

என்ற இவ்வசனம் மக்கள் இறைவனை நெருங்காத அலட்சியம் குறித்து யோவானின் கோபத்தை வெளிப்படுத்துகிறது.

விரியன் பாம்புக் குட்டிகளே! *நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்?*

(மத். 12:34)

சர்ப்பங்களே! விரியன்பாம்புக்குட்டிகளே!

(மத். 23:33)

மாயக்காரனே! *முன்பு உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்.*

(மத். 7:5)

மாயக்காரரே..................

(மத். 15:7)

மாயக்காரராகிய ***வேதபாரகரே! பரிசேயரே!***

(மத். 23: 13, 14, 15, 23, 25, 27, 29)

அக்கிரமச் செய்கைக் காரரே! *என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.*

(மத். 7:23)

குருடனான ***பரிசேயனே!*** *(மத் 23:26)*

குருடரான ***வழிகாட்டிகளே*** *(மத் 23: 16, 24)*

மதிகேடரே, *குருடரே!* *(மத் 23: 17, 19)*

என்று பக்தியற்றோர் விளிக்கப்படுகின்றனர்.

அற்ப விசுவாசிகளே! *(மத். 8:26) (மத். 16:8)*

என்று இயேசு தன் சீடர்களைக் கடிந்து கொள்கிறார்.

அற்ப விசுவாசியே *(மத். 14:31)*

வணங்காக் கழுத்துள்ளவர்களே *(அப். 7:51)*

வெள்ளையடிக்கப்பட்ட சுவரே *(அப். 23:3)*

போன்றவை அனைத்தும் விசுவாசமில்லாதவர்கள், மரபு என்ற சடங்குக்கு முக்கியத்துவம் கொடுத்து மனிதநேயம் இழப்போர், மனந்திரும்பாதோர் முதலியவர்களை விளிக்கப் பயன்படும் சொற்கள்.

நகரங்களை விளித்துப் பேசும் முறை

கோராசினே	(மத். 11:21)
பெத்சாயிதாவே	(")
கப்பர்நகூமே	(மத் 11:23)
எருசலேமே எருசலேமே	(மத். 23:37)

இயேசு மக்களை அன்புடன் விளிக்கும் சொற்கள் பின்வருவன

மகனே, திடன் கொள். உன்பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது.	(மத். 9:2)
மகளே,	(மத். 9:22)
வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்**களே!**	(மத். 11:28)
ஸ்திரீயே	(மத். 15:28)

மக்கள் மற்றும் சீடர்கள் இயேசுபிரானை விளிக்கும் தொடர்கள்

ஆண்டவரே!	(மத். 8:2, 8, 21, 25, 9:28)
தாவிதீன் குமாரனே!	(மத். 9:27. மத். 15:22)
கர்த்தாவே!	(சங். 69:13)

விளித்தொடர்களில் 'ஏ' என்ற உருபைப் பயன்படுத்தி விளிக்கும் பொதுவான முறை காணப்படுகிறது.

2.11 வினாத்தொடர்

எதிரிலிருப்போரிடம் கேள்வி கேட்டுக் கருத்தை மனதில் பதியவைப்பது ஒரு சிறந்த முறையாகக் கருதப்படுவதால் விவிலிய வசன நடையில் வினாத்தொடரும் காணப்படுகிறது.

> உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால் **உங்களுக்குப் பலன் என்ன?** ஆயக்காரரும் அப்படியே **செய்கிறார்கள் அல்லவா?** உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால் நீங்கள் **விசேஷித்துச் செய்கிறது என்ன?** ஆயக்காரரும் அப்படிச் **செய்கிறார்கள் அல்லவா?** ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்.

(மத். 5:46-48)

தொடர்ந்து வரும் வினாத்தொடர் கேட்போரின் மனத்தில் தத்தம் செயல் குறித்துச் சிந்தனையைத் தூண்ட உதவுகின்றது.

தொடர்ந்து வரும் வினாத் தொடரமைப்பு கூட்டமாய்த் திரளும் மக்களிடத்தில் செய்தியின் உண்மையை - முக்கியத் துவத்தைப் புலப்படுத்திச் சிந்தனையைத் தூண்டி மனதில் தெளிவை ஏற்படுத்தும் என்பதற்குப் பின்வரும் பகுதி சான்று.

> .... தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது. ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும் என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப் படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும் உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் **அல்லவா?** ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள். அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை, அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டு கிறார். அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் **அல்லவா?** கவலைப்படுகிற தினாலே உங்களில் எவன் தான் சரீர அளவோடு ஒரு முழத்தைக் **கூட்டுவான்?** உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிற**தென்ன?** காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை நூற்கிறதுமில்லை என்றாலும் சாலமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லு கிறேன். அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால் உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக **நிச்சயமல்லவா?**
>
> *(மத். 6:24-30)*

இந்த நீண்ட பகுதியில் தொடர்ந்து வரும் வினாக்கள் மனிதனின் அன்றாடத் தேவைகள் குறித்த கவலையை நீக்குவனவாய் - கவலை

வேண்டாம் என்று தெரிவிப்பனவாய் - உறுதிப்படுத்துவனவாய் அமைகின்றன.

> *ஏனென்றால் கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான்...*
> *உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக்* **கொடுப்பானா?** *மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக்* **கொடுப்பானா?** *ஆகையால் பொல்லா தவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவை களைக் கொடுப்பது அதிக* **நிச்சயமல்லவா?**
>
> *(மத். 7:8-11)*

இங்கு வினாத்தொடர் அடுக்கி வரும்போது கூறவரும் பொருளை வலுப்படுத்துவதைக் காணலாம்.

> *கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார். நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன* **செய்வான்?**
>
> *(சங். 118:6)*

வினாத்தொடர் இங்கு மனிதனின் கடவுள் மீதான பக்தியின் உறுதியை அதாவது சொல்லவரும் கருத்தினை உறுதிப்படுத்த உதவுகிறது.

> *ஸ்திரியானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை* **மறப்பாளோ?** *அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை. இதோ என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன். உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது.*
>
> *(ஏசாயா. 49: 15-16)*

என்ற வினாவிற்குப் பதிலளித்துச் சொல்லும் வினா-விடை முறையும் உண்டு.

> *மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால்*

*அவனுக்கு லாபம் **என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?***

(மத். 16:26)

இவ்வாறு வினாத்தொடர்கள் கேட்போனின் மனதில் 'ஆணியறைந்தாற் போன்று' கருத்தைப் பதிக்க உதவுகின்றன.

2.12. கலவை வாக்கியங்கள்

ஒரு முற்றுப் பெற்ற தொடரும் ஒரு முற்றுப்பெறாத தொடரும் இயைந்து வரும் கலவை வாக்கியம் சில இடைச்சொற்களைக் கொண்டு அமைந்து வருகிறது.

என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான் என்றார்.

(மத். 11:6)

நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்.

(சங். 138:7)

தேவனே நீர் துன்மார்க்கனை அழித்தீரானால் நலமாயிருக்கும்.

(சங். 139:19)

ஆ, என்ஜனம் எனக்குச் செவிகொடுத்து என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்.

(சங். 81:13)

வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே நீங்கள் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள்.

(சங். 115:15)

இத்தகைய கலவை வாக்கியங்கள் இரண்டு தொடரின் செயற்பாடு களை ஒரே நேரத்தில் விளக்கிவிடுகின்றன. எனவே இத்தொடர் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

2.13. செயப்பாட்டு வினைத் தொடர்கள்

இத்தகைய தொடரமைப்பு குறைவாகவே காணப் படுகிறது.

*அவர்கள் போனபின்பு கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் **காணப்பட்டு:***

> ஏரோது பிள்ளையைக் கொலை செய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய் நான் உனக்குச் சொல்லும் வரைக்கும் அங்கே இரு என்றான்.
>
> (மத். 2:13)

இச்சான்றில் 'தோன்றி' என்ற வினையெச்சத்திற்குப் பதிலாகக் **காணப்பட்டு** என்ற அமைப்பு இடம் பெறுகிறது. செயப்பாட்டு வினையில் தொடங்கிச் செய்வினையில் முடிவது போன்ற ஒரு தோற்றத்தை இத்தகைய அமைப்பு மேலோட்டமாகப் பார்த்தால் தந்து விடுகிறது.

> அப்பொழுது ஏரோது தான் சாஸ்திரிகளால் **வஞ்சிக்கப்பட்டதைக்** கண்டு மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின் படியே, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலை செய்தான்.
>
> (மத். 2:16)

'வஞ்சித்த செயல்' என்ற பெயரெச்சம் 'வஞ்சிக்கப்பட்ட செயல்' என்ற நிலைக்கு மாறி 'வஞ்சிக்கப்பட்டது' என்று மாற்றம் பெறுகிறது. தனி செயப்பாட்டுத் தொடராக இல்லாமல் கலவை அமைப்பில் இணைந்த தொடராகவே இடம் பெறுகிறது.

2.14. அதிகார அறிவிப்புத் தொடர்

தேவகுமாரன் மானுட வடிவில் வந்து நற்செய்தியைப் பறைசாற்றினார்; கேட்க மனதுள்ளவர்கள் அதனைக் கேட்டுப் பற்றிக் கொண்டு மனந்திரும்ப வேண்டும் என்பது கிறித்தவ மத நம்பிக்கை. இன்றும் இந்த நோக்கிலேயே கிறித்தவ நற்செய்தி உலகமெங்கும் கிறித்தவர்களால் போதிக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்து இவ்வுலக மக்களுக்குப் போதிக்கும் செய்திகளில் ஓர் அதிகாரத் தன்மை தெளிவாக அமைந்துள்ளது. 'இதுவே உண்மை' என்பதை அத்தகைய தொடர்கள் வெளிக்காட்டி நிற்கின்றன.

> நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில்

அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று; உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால் அதைப் பிடுங்கி எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும் உன் அவயங்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமா யிருக்கும்.

(மத். 5: 28, 29)

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம் ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்யையும் திருப்பிக் கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென் றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால் அவனோடு இரண்டு மைல் தூரம் போ.

(மத். 5: 39-41)

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசிர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்.

(மத். 5:44, 45)

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப் படும்.

(மத். 6:33)

.... நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்.

(மத். 9:13)

என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே ரட்சிக்கப்படுவான்.

(மத். 10:22)

இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்.

(மத். 28:20)

முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப் படுவன்.

(மத். 24:13)

நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்.

(மத். 18: 3-4)

அதற்கு இயேசு நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.

(யோவான் 14:6)

அதற்கு அவர் என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என்பலம் பூரணமாய் விளங்கும் என்றார்.

(II. கொரி 12:9)

இத்தொடர்களிலும் அதிகார அறிவிப்புத் தொனி தொடரின் தொனியமைப்பில் புலப்பட்டாலும் 'ஏ' என்ற இடைச்சொல்லே அதிகம் இடம் பெற்று 'இதுதான் உண்மை' என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது.

2.15. ஆணைத்தொடர்

முன்னிற்பவரை ஏவுதல் குறித்த தொடர்கள் ஏவல் தொடர்களின் பாற்படும். அதுவே ஆணையாகக் கட்டளை யாகவோ உத்தரவாகவோ சொல்லப்படுமானால் அவற்றைக் கட்டளைத் தொடர் அல்லது ஆணைத் தொடர் எனலாம்.

அப்பொழுது இயேசு: **அப்பாலே போ சாத்தானே;** உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.

(மத். 4:10)

இங்கு இயேசுவின் அதிகாரமான ஆணையை இத்தொடர் விளக்குகிறது.

தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று.

(ஆதி. 1:3)

இவ்விதமாகவே ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் தேவன் ஆணையிட உலகம் படைக்கப்பட்டமை விவரிக்கப்படு கிறது. இத்தகைய ஆணைத்தொடர் கூற்று நிகழ்த்துவோருக்கும் செய்திக்கும் உள்ள தொடர்பை - கடவுளின் வல்லமையைப் புலப்படுத்துகிறது.

2.16. வியங்கோள் தொடர்

வாழ்த்தல், வேண்டல், விதித்தல், வைதல் போன்ற பொருளில் இடம் பெறும் தொடர்களுள் 'வேண்டல்' என்ற பொருளில் அமையும் தொடர் இயேசுவிடம் சுகம் வேண்டும் பிணியாளிகள் கூற்றில் அமைவதைக் காண முடிகிறது.

அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து **ஆண்டவரே! உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்** என்றான்.

(மத். 8:2)

என்பது சான்று.

பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி உன்மனைவி சாராயை இனி சாராய் என்று **அழையா திருப்பாயாக!** சாராள் என்பது அவருக்குப் பேராயிருக்கும்

(ஆதி. 17:11)

என்றும் அவளுக்கு ஒரு குமாரனைத் தருவேன் என்றும் கூறுகிறார். ஆபிரகாம் நூறு வயதான தனக்குப் பிள்ளை பிறக்குமோ என்று நகைத்துவிட்டுக் கர்த்தரிடம் தான் சாராளின் அடிமைப் பெண் ஆகார் மூலம் பெற்ற இஸ்மவேலை ஆசிர்வதிக்கும்படி கேட்கிறான்.

இஸ்ரவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக!

(ஆதி. 17:18)

இவ்விரு சான்றுகளில் முறையே விதித்தல், வேண்டல் பொருட்கள் காணப்படுகின்றன.

சங்கீத புத்தகத்தில் கூற்று நிகழ்த்துபவர் தனக்கு நேரிடும் பகைகளை முறியடிக்க வேண்டுமாய் இறைவனைக் கேட்பதும் தன்னை ஆசீர்வதிக்க வேண்டுமாயும் பாதுகாக்க வேண்டுமாயும் கேட்பதும் திரும்பத் திரும்ப இடம்பெறும் செய்திகள் ஆவன. எனவே தன் பகைவன் இப்படி 'ஆவானாகுக' என்று வைதல் பொருளில் பல வசனங்களைக் காணலாம்.

உம்முடைய உக்கிரத்தை அவர்கள் மேல் ஊற்றும் உம்முடைய கோபாக்கினி அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக

(சங். 69:24)

தேவனே என்னை விடுவியும் கர்த்தாவே, எனக்குச் சகாயஞ் செய்யத்தீவிரியும்

(சங். 70:1)

'உம்மைத் தேடுகிற யாவரும் உம்மில் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக; உமது இரட்சிப்பில் பிரியப்படுகிறவர்கள் தேவனுக்கு மகிமையுண்டா வதாக என்று எப்போதும் சொல்வார்களாக

(சங். 70:4)

போன்றவை முறையே வேண்டல், வாழ்த்தல் என்ற பொருளில் அமைகின்ற வியங்கோள் தொடர்கள்.

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும் படிக்கு என் கண்களைத் திறந்தருளும்

(சங். 119:18)

என்பது வேண்டல் பொருளில் அமையும் வசனம். இதே போன்ற அமைப்பில் உள்ளவை பின்வரும் வசனங்கள்.

கர்த்தாவே! பொல்லாத மனுஷனுக்கு என்னைத் தப்புவியும்

(சங். 140:1)

கர்த்தாவே! உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன் என்னிடத்திற்கு வரத் தீவிரியும்

(சங். 141:1)

விதித்தல், வேண்டல் ஆகிய பொருளில் அமையும் தொடரமைப்பு, கூற்று நிகழ்த்துவோர் முறையே இறைவன் மக்கள் என்பதைப் புலப்படுத்துகிறது.

முடிவுகள்

விவிலியத் தமிழில் அமையும் கருத்துப் பரிமாற்றத்தில் கருத்துக்கும் (செய்திக்கும்) கூற்று நிகழ்த்துபவருக்கும் கேட்போருக்கும் உள்ள தொடர்பினைக் கையாளப்பட்டிருக்கும் மொழி அமைப்பு புலப்படுத்துகிறது. தனிவாக்கியங்களாகிய எளிய வாக்கியங்கள் கேட்போரைக் கருத்தில் கொண்டு மிகவும் எளிமைப்படுத்தப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன. பக்தி என்ற உள்ளடக்கத்திற்கு எதிரான கருத்துகளும் இறைவன் என்ற அதிவல்லமைக்கு எதிரான செயற்பாடுகளும் எதிர்மறைத் தொடர்கள் வழிப் புலப்படுத்தப்படுகின்றன. ஆனாலும் இவ்வமைப்பு குறைவாகவும் உடன்பாட்டுப் பொருளில் சொல்லி மக்களை ஈர்க்கும் அமைப்பு அதிகமாகவும் அமையும் முறையைக் காண முடிகிறது. எச்சத்தொடர்கள் ஒருவரது செயலை - செயலின் தொடர்ச்சியைப் புலப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன. இறைவனது செயலெனில் 'அருளும்' மனிதரது செயலெனில் 'தவறுகளும்' இம்முறையில் சுட்டப்படுவதற்கான சான்றுகள் உள்ளன. பெயர்த்தொடர்கள் இறைவனை - இறைவனின் ஆற்றலைப் புலப்படுத்த அடைமொழித் தொடர்களாகச் சங்கீதப் புத்தகத்தில் அதிகம் இடம்பெறுகின்றன. இவ்வகையில் மனிதனைக் காக்கும் ஆற்றல் அடைமொழியாக அதிகமாகச் சுட்டப்படுவது பக்திசார்ந்த உள்ளடக்கத்தின் விளைவே ஆகும்.

மொழிபெயர்ப்பில் பல்வேறு தொடர்களை இணைக்க வேண்டிய கட்டாயமிருப்பதால் விவிலிய வசனநடையில் 'உம்' என்ற தொடர்பு இணைப்பு உருபனால் அமையும் தொடர்கள் அதிகமாக இடம்பெறுகின்றன. 'ஏ', 'ஓ', 'உடனே' 'ஆகையால்' 'அன்றியும்' 'அது' 'ஆவது' 'அந்த' 'ஆன' 'ஆகிய' 'அப்படி' போன்ற சொற்களும் இவ்வகையில் தொடர்களை இணைக்கப் பயன்படுகின்றன. ஒப்புமைத் தொடர்களும் 'இறைவன்', மனிதன் ஆகியோர் தன்மைகளை உவமித்துச் சொல்லப் பெரிதும் உதவுகின்றன. வசன நடையில் கேட்போரைத் தம்பக்கம் ஈர்க்கப் பெரிதும் உதவும் மற்றொரு தொடர் விளித்தொடர் ஆகும். வசைமொழிகளால் பரிசேயர், வேதபாரகர், மனந்திரும்பாத மக்கள்

போன்றோரும், அன்பாகப் பிற மக்களும் விளிக்கப்படுவது பொருத்தமான சொற்பயன்பாட்டிற்குச் சான்றாகவும் அமைகிறது. தொடர்ந்து பல விளித்தொடர்கள் அடுத்தடுத்துக் கேட்போரின் மனத்தில் தாக்கத்தை ஏற்படுத்திக் கூறவரும் கருத்தினைப் பதிவிக்கின்றன. அதிகார அறிவிப்புத் தொடரும் ஆணைத் தொடரும் 'போதனைப் பணி'யில் ஈடுபடுவோரின் அதிகாரத் தொனியை அறிவித்துக் கீழிருப்போரை வியப்பிற்கும் பாதிப்பிற்கும் உட்படுத்துகின்றன. வியங்கோள் தொடரமைப்பில் 'வேண்டல்' என்ற பொருட்டொடர் பக்தனையும் 'விதித்தல்' என்னும் பொருட்டொடர் இறைவனையும் கூற்று நிகழ்த்துவோராக இனங்காட்டுகின்றன.

மேற்குறிப்பிட்ட தொடர்களுடன் ஒப்பிடும்போது தகவல் பொருள் தொடர், அனுமதி வாக்கியம், பெயரெச்சத் தொடர், கட்டுப்பாட்டு வாக்கியம், கலவை வாக்கியம், செயப்பாட்டு வாக்கியம் போன்றவை குறைவாகவே காணப்படுகின்றன.

குறிப்பு

1. S. Pit Corder, **An Intermediate English Practice Book**, pp. 91-92.

3. உத்திகளும் மொழி அமைப்பும்

விவிலியத்தில் சொற்கள் பல வகைகளில் அமைந்தும் தொடர்களை உருவாக்கியும் மக்களிடம் கருத்தை எடுத்துரைப்பதைச் சென்ற இயல்களில் கண்டோம். விவிலியத் தமிழில் செய்தியை விளக்குவதற்கெனவே பல உத்திகள் கையாளப் படுகின்றன. அவற்றை இவ்வியல் விளக்குகிறது. இவ்வுத்திகள் ஏற்கெனவே விவிலியத்தில் அடங்கும் நூல்களை எழுதியுள்ள ஆசிரியர்களின் படைப்பாக்கத்திறனுக்குச் சான்றுகளாவன. இருப்பினும் இவ்வுத்திகளைத் திறம்படத் தமிழில் சரியாகப் புலப்படுத்தியுள்ள பெருமை மொழிபெயர்ப்பாளர்களையே சாரும்.

சில உத்திகளின் அடிப்படையில் செய்திகளை விளக்கினால் மக்கள் மனத்தில் அச்செய்திகள் நீங்கா இடம் பெறும். அவ்வுத்திகள் ஒரு படைப்பின் தலையாய உத்திகளாகக் கருதப்படத்தக்கவை. இவ்வகையில் விவிலியத்தில் பரவலாகக் காணப்படும் உத்திகள் பின்வருமாறு:

1. குறியீடு
2. ஒப்பீடு
3. பின்னோக்கு
4. மறைத்துச் சொல்லல்
5. உருவகம்
6. உரையாடல்
7. கதை கூறல் அல்லது உவமைக்கதைகளைச் சொல்லி விளக்குதல்
8. விளக்க நடையும் விவரிப்பு நடையும்
9. வருணனை
10. முன்குறிப்பு
11. நிலைமாற்றம்

3.1. குறியீடு

குறியீடுகளைப் பற்றிய அறிவியலாகிய குறியீட்டியல் (Semiotics) ஆய்வுமுறை ஆரம்ப காலத்தில் மொழியை ஆராய்வதற்குச் சசூர் என்ற மொழியியல் அறிஞரால் 1974இல் தொடங்கப்பட்டது. ஒரு குறியீடு என்பது ஒரு பருப்பொருளைக் குறிப்பானாகக் கொண்டிருக்கும். அப்பருப்பொருள் (object) நேரடியாக ஒரு பொருளை உணர்த்தக்கூடியதாய் இருக்கலாம்.

ஆனால் மறைமுகமாக ஒரு குறிப்புப் பொருளை உணர்த்தும். இக்குறிப்புப் பொருளே ஆழ்ந்த மறைபொருளாகும். குறியீடுகள் ஒரு குறிப்பிட்ட செய்தியின் ஆழத்தில் உள்ள ஆழ்பொருளை வாசகன் அறிந்து கொள்ள வழிவகுப்பனவாய் அமைகின்றன.

குறியீடு = குறிப்பான் + குறிப்புப்பொருள்
(Sign) (Signifier) (Signified)

என்றும்



என்றும் விளக்கிக் காட்டலாம்.

சான்று

இருகுழந்தைகள் நடப்பது போன்ற = சாலை ஓரப்படம் (குறியீடு)	குழந்தைகள் நடக்கும் படம் (குறிப்பான்)	+ அருகில் பள்ளிக் கூடம் இருக்கிறது; எனவே குழந்தைகள் அதிகமாகச் சாலையைக் கடக்கும் இடம் இது; எனவே வாகன ஓட்டுநர்கள் மெதுவாகச் செல்லவும் என்ற குறிப்பு (குறிப்புப் பொருள்)

மேலோட்டமாகப் பார்த்தால் இப்படம் குழந்தைகள் இருவர் நடத்தல் என்ற பொருளை மட்டுமே தரும். ஆனால் சாலை விதிமுறைகள் பற்றிய அறிவுடையோர்க்கு அதில் உள்ள ஆழ்பொருளைப் படம் புலப்படுத்தும்.

குறியீடுகள் பொதுவாகச் சம்பவங்களைக் குறித்து நிற்காமல் பொருளையே (things) குறித்து நிற்கும்.

விவிலியத்தில் குறியீட்டின் மூலம் பொருள் புலப்படுத்தும் முறை அதிகமாகக் காணப்படுகிறது.

மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்
(மத். 3:8)

யோவானின் இப்பிரசங்கத்தில் 'கனி' என்பது குறியீடாக அமைகிறது. மனிதவாழ்க்கை அறம்சார்ந்த வாழ்க்கையாக இல்லாதபோது கடவுள் தண்டிப்பார்; குறிப்பாக மனிதன் தனது தவறுகளைக் குறித்து வருந்தி இறைவனிடம் பாவமன்னிப்புப் பெற்றுவிட்ட உறுதியைக் கொண்டிருந்து மேலும் தவறுகள் செய்யாமல் இறைவனுக்கென்றே தன்னை அர்ப்பணித்து வாழ்தல் என்ற பொருளை 'மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனி' என்ற இச்சொல் புலப்படுத்துகிறது. இப்பொருளில் 'ஆவியின் கனி' என்ற சொல்லையும் கிறித்தவர்கள் பயன்படுத்துகின்றனர். இவ்வடிப் படையில் அமையும் குறியீடுகளும் குறிப்புப் பொருளும் பின்வருமாறு:

குறிப்பான்	குறிப்புப்பொருள்	
1. கோடரி	- நியாயத்தீர்ப்பு	
மரம்	- மனிதன்	
மரத்தின் வேர்	- மனித மனம்	
நல்லகனி கொடாமரம்	- மனந்திரும்பாத மனிதன்	(மத். 3:10)
வெட்டப்படுதல்	- நியாயத்தீர்ப்புக்குட்படுத்தல்	
அக்கினி	- நரகம்	
நல்லகனி	- பயனுள்ள வாழ்வு (மனந்திரும்புதல்)	
2. தூற்றுக்கட்டை	- நியாயத்தீர்ப்பு	
களம்	- உலகம்	
விளக்குதல்	- நியாயத்தீர்ப்புக்குட்படுதல்	
கோதுமை	- மனந்திரும்பிய மனிதன்	(மத். 3:11)
களஞ்சியம்	- மோட்சம்	
பதர்	- மனந்திரும்பாத மனிதன்	
அவியாத அக்கினி	- நரகம்	
அவர்	- இயேசு	

> இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. ஆகையால் நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்.
>
> (மத். 3:10)

யோவான் ஸ்நானகனால் குறிப்பிடப்படும் இந்த வசனம் மீண்டும் இயேசுவின் கூற்றிலும் குறிப்பிடப்படுகிறது. (மத். 7:19).

> தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது

கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்
(மத். 3:12)

3. இடுக்கமான வாசல் மோட்ச வழி
விசாலமான வாசல் நரக வழி

இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாய் இருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்
(மத். 7: 13, 14)

பொதுவாகவே உலக ஆசைகள், சிற்றின்பங்கள் முதலியவற்றிற்கு ஆட்படாமல் இவ்வுலகில் இறைவனை மட்டுமே எப்பொழுதும் நினைத்து வாழ்ந்து இறைவனை அடைதல் என்பது சாதாரண மனிதனுக்கு ஓர் அரிய செயலே என்றும் ஆனாலும் அத்தகைய வாழ்க்கையே சிறந்தது; மனிதன் தேர்ந்தெடுக்க வேண்டியது; பின்பற்ற வேண்டியது என்று எல்லா மதங்களும் போதிக்கின்றன. எனவேதான் உலகக் கேடுகளிலே அதிகமாக ஈடுபடுதல் ஒருவனை அழிவிற்குக் கொண்டு போய்விடும் என்றும் பிரசங்கிக்கின்றனர். இக் கருத்தையே கிறித்துவமதம் 'இடுக்கமான நல்வாசல்' 'விசாலமான கேட்டின் வாசல்' என்று குறியீடாகச் சொல்லிப் புலப்படுத்துகிறது.

4. பிணியாளி - ஆயக்காரர், பாவிகள்
சுகமுள்ளவர் - பரிசேயர்
வைத்தியன் - இயேசு
(மத். 9: 10 – 12)

இயேசுவின் சீடர்களிடம் பரிசேயர்கள் இயேசு ஆயக்காரரோடும் பாவிகளோடும் சேர்ந்து அமர்ந்து உணவு உண்பதைப் பற்றிக் குற்றப்படுத்திக் கேள்வி எழுப்பும்போது மேற் குறிப்பிட்ட குறியீட்டைப் பயன்படுத்தி இயேசு பதிலளிக்கிறார்.

இயேசு அதைக் கேட்டு பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டிய தில்லை. பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக் கொள்ளுங்கள். நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்
(மத். 9: 12-13)

என்பவை சான்று. இதுபோலவே யோவானின் சீடர்கள் தங்களைப் போலவும் பரிசேயரைப் போலவுமன்றி இயேசுவின் சீடர்கள் உபவாசிக்காமல் இருப்பது குறித்து இயேசுவிடம் கேட்கின்றனர். அப்போது இயேசு குறியீடாகப் பதிலிறுக்கிறார்.

(மத். 9: 14-17)

5. மணவாளன்	- இயேசு
மணவாளன் உடனிருத்தல்	- இயேசு சீடர்களுடன் வாழ்தல்
மணவாளன் எடுபடுதல்	- இயேசுவின் இறப்பு
உபவாசம்	- இயேசுவின் சீடர்கள் தம்மை வருத்திக் கொள்வர்

மேலும் உபவாசிப்பதற்கு விளக்கமாக - அதாவது இயேசு உயிரோடு சீடர்களோடு வாழும் காலத்து உபவாசிப்பது சிறந்ததன்று என்பதற்குப் பின்வரும் குறியீடுகள் சுட்டப்படுகின்றன.

6. கோடித்துண்டு	மகிழ்ச்சி (மணவாளனாகிய இயேசு தம்முடன் இருத்தல்)
பழைய வஸ்திரம்	மரபுப்படி பின்பற்றப்படும் துயரமான **உபவாசம்**
கோடித்துண்டைப் பழைய வஸ்திரத் துடன் இணைத்தல்	துயர உபவாசம் + மகிழ்ச்சி என்று வாழ்தல்
வஸ்திரத்தை இணைத்த துண்டு அதிகமாய்க் கிழித்தல், பீறிப்போடுதல்	உபவாச வாழ்க்கை சிதைத்தல்
7. புதுதிராட்ச ரசம்	மகிழ்ச்சி (மணவாளனாகிய இயேசு தம்முடன் இருத்தல்)
பழந்துருத்தி	மரபுப்படி பின்பற்றப்படும் துயரமான உபவாசம்
புதுதிராட்ச ரசத்தைப் பழந்துருத்தியில் வார்த்து வைத்தல்	துயர உபவாசம் + மகிழ்ச்சி என்று வாழ்க்கை அமைதல்
இரசம் சிந்துதல், துருத்தி கெட்டுப் போதல்	உபவாச வாழ்க்கை சிதைத்தல்
புதுரசத்தைப் புதுத் துருத்திகளில் வார்த்து வைத்தல்	மணவாளனாகிய இயேசுவுடன் வாழும் மகிழ்ச்சியை உபவாசமற்ற மகிழ்ச்சியான வாழ்க்கையுடன் அனுபவித்தல் (இதுவே சரி)

இவ்வாறு ஒன்றுடன் ஒன்று இயைந்து வரும் இக்குறியீடுகள் சங்க இலக்கிய உள்ளுறை உவமையை ஒத்தனவாக அமைகின்றன.

8. மேய்ப்பனில்லாத ஆடுகள்	ஆன்மீகவழியில் வழிநடத்த ஆள் இல்லாத மக்கள்
மேய்ப்பன்	இறைவன்
9. அறுப்பு	மக்களை ஆன்மீக நெறிக்குட் படுத்துதல்
அறுவடை	மனந்திரும்பி நல்வழிப்பட்ட மக்களைத் தெரிதல்
வேலையாட்கள்	மக்களை ஆன்மீக நெறிக்குட் படுத்த உதவும் நபர்கள்
எஜமான் அறுப்புக்கு வேலையாட்களை அனுப்புதல்	தேவன் உதவும் நபர்களை நியமித்தல்

தன் சமயப் போதனையின்போது திரளான ஜனங்களை இயேசு பார்க்கிறார்.

> அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால் அவர்கள்மேல் மனதுருகி தம்முடைய சீஷர்களை நோக்கி அறுப்பு மிகுதி வேலையாட் களோ கொஞ்சம்; ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள்
>
> (மத். 9: 36-38)

என்பவை சான்று. கிறிஸ்து சொன்ன நெறிகளுக்குட்பட்டு வாழும் கிறித்துவ ஆன்மீகப் பாதை நோக்கி மக்களைத் திருப்புதல் 'அறுவடை' என்றும் 'அறுப்பு' என்றும் தொடர்ந்து கிறித்துவ நடைமுறையில் பயன்படுத்தப்படுகிறது. இக்குறியீடு வழக்கில் தக்க வைக்கப்பட்ட குறியீடாக அமைகிறது. மேற்குறிப்பிட்ட பொருளிலன்றி வேறு இடங்களிலும் இவ்வொப்புமை சுட்டப் படுகிறது. மனிதனின் அன்றாட வாழ்வில் அவனது செயல்களின் அடிப்படையில் விளையும் பயன்கள்கூட அவனது நன்மை, தீமை சார்ந்த அணுகு முறைகளின்படியே செல்லும் என்பதுவும், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் (கலாத். 6:7) என்று சுட்டப்படுகிறது.

10. காணாமல் போன ஆடு - இஸ்ரவேல் வீட்டார் (இறைவனுக்கு மனதால் கீழ்ப்படியாதவர்கள்)

தனது பன்னிரு சீடர்களுக்கும் சுவிசேஷிக்கிற மற்றும் சுகமாக்குகிற அதிகாரங் கொடுத்து அனுப்பும்போது காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்;

பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள் (மத். 10: 1-8) என்கிறார். தனக்குக் கீழ்ப்படியாத மக்களை இவ்வாறு குறிப்பிட்டுச் சொல்கிறார். தனது சீடர்களை மக்கள் மத்தியிலே அனுப்பும்போது இயேசு அவர்களையும் மக்களையும் உவமித்தல் பின்வருமாறு:

11.	ஆடுகள்	- சீடர்கள் (நற்செய்தியைப் பிரசங்கிப்பவர்கள்)
	ஓநாய்கள்	- மக்கள்

ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல இதோ நான் உங்களை அனுப்புகிறேன். ஆகையால் சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப் போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள் (மத். 10: 16)

என்பது வசனம். மனித மனங்கள் கபடம் நிறைந்தவை என்பதை வலியுறுத்தவே இவ்வாறு குறிப்பிடுகிறார்.

12.	விதை	- வசனம்
	கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன்	- வசனம் தனக்குள் நிலைக்காத மனிதன்
	முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன்	- உலகக் கவலை, ஐசுவரிய மயக்கம் முதலியனவற்றால் நெருக்கப்படும் மனிதன்
	நல்ல நிலங்களில்	- பயன் தரும் மனிதன் விதைக்கப்பட்டவன்

(மத். 13:19 - 20)

13.	பயிர்	- மனிதர்கள்
	களை	- கெட்டவர்கள்
	கோதுமை	- நியாயத்தீர்ப்பில் வெற்றி பெறும் நல்ல மனிதன்

(மத்.13: 24-30)

14.	நிலம்	- உலகம்
	நல்லவிதை	- ராஜ்யத்தின் புத்திரர்
	களைகள்	- பொல்லாங்கனுடைய புத்திரர்
	நல்ல விதையை விதைக்கிறவர்	- மனுஷகுமாரன்
	களைகளை விதைக்கிறவன்	- பிசாசு (சத்துரு)
	அறுப்பு	- உலகத்தின் முடிவு
	அறுக்கிறவர்	- தேவதூதர்கள்

(மத். 14: 37-43)

என்று இயேசுவே தமது சீடர்களுக்கு விளக்கிச் சொல்லும் பகுதியாக இக்குறியீடு அமைகிறது.

15.	பரமபிதா நடாத நாற்று குருடருக்கு வழி காட்டுகிற குருடர்	- பரிசேயர் பரிசேயர்கள் (மத். 15: 13, 14)
16.	புளித்த மா	- பரிசேயர், சதுசேயர் முதலியவர்களது உபதேசம் (மத். 16: 11-12)

புளித்த மா எப்படி தன்னுடன் சேர்ந்த பிற மாவையும் புளித்த தாக்குமோ அது போன்றதே இவர்களது உபதேசமும்; எனவே எச்சரிக்கையாயிருங்கள் என்று சீடர்களிடம் குறிப்பிடுகிறார் இயேசு.

17.	காணாமல் போன ஆடு	- வழி தவறும் மனிதன்
	ஆட்டைத் தேடும் எஜமான்	- இறைவன்
	காணாமல் போன ஆடு கிடைத்தவுடன் சந்தோஷப்படுபவர்	- வழி தவறும் மனிதன் திருந்தித் தம்மை ஏற்றுக் கொண்டபின் மகிழும் இறைவன் (மத். 18: 12-13)
18.	போஜன, பான பாத்திரம்	- மாயக்கார வேதபாரகர்
	வெளிப்புறத்தைச் சுத்தப் படுத்துதல்	- வெளித்தோற்றத்தில் இறை மக்கள் போல இருத்தல்
	உட்புறம் அழுக்கு	- மனதில் அசுத்தமானவர்கள். கொள்ளை, அநீதி போன்ற செயல்களை இவர்கள் மேற்கொள்ளல் (மத். 22: 25)
19.	வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை	- மாயக்கார பரிசேயர்
	வெளியில் சுத்தமான கல்லறை	- வெளித்தோற்றத்தில் இறை மக்களைப் போல இருத்தல்
	கல்லறையின் உள்ளே நாற்றம்	- மனதில் அழுக்கு, கபடம் உள்ளவர்களாய் இருத்தல் (மத். 23: 26-27)
20.	வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்	- வேதபாரகர், பரிசேயர் முதலியவர்களால் ஒதுக்கப்பட்டவரும் தேவகுமாரன் என்று ஏற்றுக் கொள்ளப்படாதவருமான மனுஷகுமாரன்
	அக்கல் மூலைக்குத் தலைக்கல் ஆதல்	- தேவகுமாரன் தேவராஜ்யத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்தவர்; அடிப்படை ஆதல்.

	இவ்வாறு மூலைக்கல் ஆவது	- தேவ சித்தம்
	இக்கல்லின் மேல் விழுந்தவன் நொறுங்கிப் போதல்	- தேவகுமாரன் மனந்திரும்பாத மாயக்கார பரிசேயர் போன்-றோரை அழிப்பார்
		(மத். 21: 42, 44)

என்பது இயேசுவே தம்மைக் குறித்துக் குறிப்பிடும் குறியீடு.

21.	தேவாலயம்	- இறைமகன் இயேசு
	தேவாலயம் இடிக்கப் படும்	- நடைபெறப்போகும் இயேசுவின் பாடுகளும் மரணமும்
		(மத். 24: 2)
22.	எஜமான் வருதல்	- மனுஷகுமாரன் மகிமை பொருந்தினவராய் வருதல்
	எஜமான் நியமித்த பணியைச் செய்யும் ஊழியக்காரன்	- நீதிமான்
	எஜமான் நியமித்த பணியைச் செய்யாத ஊழியக்காரன்	- பாவி
	நல்ல ஊழியக்காரன் எஜமானின் ஆஸ்திகளுக்கு மேலும் பொறுப்புடை-யவன் ஆக்கப்படல்.	- நீதிமான் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் பிரவேசித்தல்
	கெட்ட ஊழியக்காரன் தண்டிக்கப்படல்	- பாவி எரி நரகத்தில் தள்ளப்படுதல்
		(மத். 24: 45-51)
23.	அப்பம்	- இயேசுவின் சரீரம்
	திராட்சை ரசம்	- இயேசுவின் ரத்தம்
	புசித்தலும் குடித்தலும்	- பாவமன்னிப்புப் பெறுதலும் இயேசுவை நினைவு கூர்ந்து அவருடைய பாடுகளில் மனிதனும் மனிதனுடன் அவரும் ஐக்கியம் கொள்ளுதலும் (மத். 26: 26-28)
24.	மேய்ப்பனை வெட்டுதல்	- இயேசுவின் பாடுகளும் மரணமும்
	ஆடுகள் சிதறடிக்கப்படும்	- இயேசுவின் சீடர்களும் மக்களும் சிதறியோடுதல் (மத். 26: 31)
25.	மேய்ப்பன்	- கர்த்தர்
	ஆடு	- சங்கீத ஆசிரியர் (பொது மக்களுள் ஒருவர்)

புல்லுள்ள இடம் அமர்ந்த தண்ணீர்	- வாழ்வின் எல்லாவித நல் வாய்ப்புகள்
நீதியின் பாதை	- வாழ்வில் நல்வழியில் கடவுள் மக்களை நடத்துதல்
மரண இருள்	- வாழ்வின் அபாயம்
கோல், தடி (ஆட்டினை மேய்க்க உதவுவன)	- கர்த்தரின் வசனங்கள், மனிதனை ஆறுதல்படுத்துவன (தேவன் அளிக்கும் பாதுகாப்பு)
பாத்திரம்	- உலக வாழ்க்கையும், ஆன்மீக வாழ்க்கையும்
நிரம்பி வழிதல்	உலக வாழ்வும், ஆன்மீக வாழ்வும் சிறப்புப் பெற்றிருத்தல்.

(சங். 23)

மேற்குறிப்பிட்ட குறியீடு பொருந்திய சங்கீதம் எல்லா மனிதனின் வாழ்வோடும் பொருத்திப் பார்த்துக் கொள்ளக்கூடிய ஒரு சிறந்த சங்கீதம் ஆகும். பொதுவாக மனிதர்கள் எல்லோருமே தத்தம் வாழ்வு எல்லா நலனும் நிறைந்ததாக அமைய வேண்டும் என்று எதிர்பார்ப்பது மனித இயல்பாக அமைந்திருக்கிறது. தத்தம் குறைகளை, குற்றங்களை எண்ணிப்பார்ப்பதை விடவும் தம் வாழ்வு சிறப்பதையே எண்ணிப் பார்க்கின்றனர். இவ்வகையில் மனித குற்றங்கள் எவற்றையும் சுட்டாமல் **மனித தேவைகளைச் சந்திக்கும் இயேசு** என்னுடன் இருக்கிறார் என்று பேசும் இச்சங்கீதம் அனைவருக்கும் பிடித்ததாகவே அமைகிறது. "மனித வாழ்க்கையில் தேவைகளை ஏற்படுத்தியவர் ஆண்டவர். அவரே அந்தத் தேவைகளைத் திருப்திப்படுத்தத் தேவையானவைகளையும் நமக்களிக்கிறார். தேவைப்படுவது உணவோ, நட்போ, ஓய்வோ, சமாதானமோ எதுவாயிருந்தாலும் அவர் அதை அளிப்பார், நாம் கலங்கி நிற்கும்போது அவர் இவ்விதமாய் பதிலளிக்கிறார். அவருக்கு நம்மை அர்ப்பணம் செய்வது கடமை. ஆடுகள் மேய்ப்பனைச் சார்ந்திருப்பது போல நீ உன்னையும் உன் தேவைகளையும் ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு"[1] என்ற தியோடர் வில்லியம்ஸின் இச்சங்கீதம் பற்றிய கருத்து ஒப்புநோக்கத்தக்கது.

26. கோட்டை	- கடவுள் (கர்த்தர்)
வேடனுடைய கண்ணி பாழாக்கும் கொள்ளை நோய், இரவுப் பயங்கரம், பகலில் பறக்கும் அம்பு	- வாழ்வின் அபாயங்கள்
சிங்கம், விரியன் பாம்பு பாலசிங்கம்	- தீயசக்தி (சாத்தான்)

பக்தன் சிங்கம், விரியன் பாம்பு, பாலசிங்கம் முதலியவற்றை மிதித்தல்	- இறையருளால் சாத்தானை வெல்லுதல்

(சங். 93)

91ஆம் சங்கீதமும் முழுக்கமுழுக்க இறைவனையே நம்பி வாழும் மாந்தர்களுக்கு அவரால் வரும் பாதுகாப்பைப் பற்றிப் பேசுகிறது. மேற்குறிப்பிட்ட குறியீடுகள் இச்செய்தியை மனத்தில் தக்கவைப் பனவாய் இருப்பதால் எல்லோரும் விரும்பும் சங்கீதமாக இது அமைகிறது.

27.	கோவிலின் அஸ்திபாரம்	- இயேசு
	அதன் மேல் கட்டப்படும் பொன், வெள்ளி, கல், மரம், புல், வைக்கோல்	- மனிதன் வாழும் நீதிக்குட்பட்ட கிறித்தவ வாழ்க்கை
	அக்கினி	- கட்டிடத்தைப் பரிசோதிக்கும் அக்கினி போல கடவுள் தரும் சோதனைகள்
	வெந்து போகாதிருத்தல்	- கிறித்துவ வாழ்வின் வெற்றி
	சிறப்பாகக் கட்டியதற்குக் கூலி	- இரட்சிப்பு (அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போன்றது)
	கட்டப்பட்ட கட்டிட மாகிய ஆலயம்	- மனிதன்

(I கொரி. 3: 11-17)

இக்குறியீட்டின் வழி மனிதன் ஓர் ஆலயமாகிறான்.

28. நித்திய கன்மலை - கர்த்தராகிய யெகோவா (ஏசாயா. 26: 4)

29.	குயவன்	- இறைவன்
	களிமண்	- மக்கள்
	வனையப்பட்ட பொருள்	- தேவசித்தப்படி வாழ்க்கை தரப்பட்ட மக்கள்
	வனையப்பட்ட பொருள் குயவனைத் தனக்குச் சமமாக எண்ண முடியுமோ?	- மக்கள் இறைவனைத் தமக்குச் சமமாக எண்ண முடியுமோ?
	வனையப்பட்ட பொருள் குயவனுக்குப் புத்தி இல்லை எனலாமோ?	- மக்கள் இறைவனுக்குப் புத்தி இல்லை எனலாமோ?

(ஏசாயா. 29:16)

30.	தத்தளிப்பின் பாத்திரம்	- எருசலேம் மக்கள் அடைந்த இன்னல்கள்
	நீக்கிப் போடுதல்	- தேவன் இன்னல்களை நீக்குதல்

உக்கிரத்தினுடைய பாத்திரத்தின் வண்டல்கள்	- தேவகோபம்
வண்டல்களை இனி குடிப்பதில்லை	- இனி உன் மேல் கோபம் கொள்ள மாட்டேன்

(ஏசாயா. 51:22)

மேலே சுட்டப்பட்டுள்ள 30 குறியீடுகளுள் பிணியாளி - வைத்தியன் குறியீடு ஒரு முறையும் மேய்ப்பன் - ஆடுகள் என்ற குறியீடு 4 முறையும் முறையே இறைவனையும் மனிதனையும் இறைவனின் இரட்சிப்பையும் குறிக்க திரும்பத் திரும்ப இடம் பெறுகின்றன. சுவிசேஷம், நியாயத்தீர்ப்பு தொடர்பான குறியீடுகள், (நிலம், விதைத்தல், பயிர்செய்தல், அறுவடை) என்பனவாக 6 முறை இடம்பெறுகின்றன. எஜமான் - நல்ல ஊழியக்காரன், கெட்ட ஊழியக்காரன் குறியீடும் நியாயத் தீர்ப்பு பற்றியதாக அமைகிறது. பாம்பு, வலுசர்ப்பம் இவற்றிலிருந்து மனிதன் காக்கப்படுதல் குறிப்பாக, சாத்தானைக் குறிப்பதும் இயேசு இரட்சிப்பதும் பற்றியதுமாகிறது.

இயேசு-மனிதன் உறவு நிலையைக் குறிக்க அஸ்திவாரம் - கட்டடம் பற்றிய குறியீடு இடம்பெறுகிறது. இயேசு-சீடர்கள் உறவும் உபவாசமிருத்தலும் பற்றி 3 குறியீடுகள் அமைகின்றன. மக்களுக்கும் சீடர்களுக்கும் உள்ள உறவு ஓநாய்-ஆடு குறியீட்டால் குறிக்கப்படுகிறது. பரிசேயர் பண்புநலன்களைக் குறிக்க குருடர், புளித்தமா, பானபாத்திரம், கல்லறை முதலியன அமைகின்றன. மேய்ப்பன் வெட்டப்படுதல் - ஆடுகள் சிதறுதல் இயேசு - சீடர் மற்றும் மக்கள் நிலைகளோடு ஒப்பிடப்படுகிறது. இயேசுவின் பண்புகளைக் குறிப்பிட் மூலைக்கல், தேவாலயம், கன்மலை, அப்பமும் ரசமும் முதலியன அமைகின்றன. இறைவனின் சித்தப்படிதான் மனிதவாழ்வு அமையும் என்பதற்குத் தரப் பட்டுள்ள குயவன்-களிமண் குறியீடு மிகவும் பொருத்தமான குறி யீடாக அமைகிறது. கடவுளின் சிட்சை பாத்திரம்-வண்டல் என்ற குறியீட்டால் சுட்டப்படுகிறது. மோட்சமும் நரகமும் முறையே குறுகின, விரிவான வாசல் குறியீடுகளால் குறிக்கப்படுகின்றன.

3.2. ஒப்பீடு

ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டு எழுதும் அமைப்பு சற்று மாறுபட்ட சுவையை நல்கும்.

இருவேறு நபர்களை அல்லது செயல்களை ஒப்பிடும் போது இரண்டன் பரிணாமமும் நன்கு விளங்கும். இயேசுவின் போதனைகளில் இவ்வாறு ஒப்பிட்டு விளக்கிச் சொல்லும்

பாங்கினைப் பரவலாகக் காணமுடிகிறது. நியாயப்பிரமாணம் குறித்து அவர் பேசும்போது,

> *ஆகையால் இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதான தொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷனுக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லோரும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்*
>
> *(மத். 5:19)*

இங்கு நியாயப் பிரமாணங்களைக் கைக்கொள்பவன், கைக்கொள்ளாதவன் இருவரும் ஒப்பிடப்படுகின்றனர். அவர்கள் மோட்சத்தில் பெறும் இடமும் ஒப்பிடப்படுகிறது.

> *நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? இதோ உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்வதெப்படி?*
>
> *(மத். 7: 3, 4)*

இவ்வசனங்களில் 'உத்திரம்', 'துரும்பு' ஆகியன குற்ற அளவுகளையும் தன் குற்றத்தைச் சிறியதாகவும் அடுத்தவன் குற்றத்தைப் பெரியதாகவும் ஆக்கிப் பார்க்கும் மனிதப் பண்பையும் தெளிவாக எடுத்துரைக்கிறது.

பிதாவின் சித்தத்தின்படி செய்து பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று இறுதிநாள்வரை கடவுளுக்கெனத் தன்னை அர்ப்பணித்து வாழும் வாழ்க்கையை வாழ்பவன் (நல்ல கனி கொடுப்பவன்) எத்தகையவன்; அப்படி வாழாதவன் எத்தகையவன்? என்பதை இயேசுவே உவமையாக உவமித்துச் சொல்லும்போது முறையே கன்மலையின் மேல் கட்டிய வீட்டிற்கும் மணலின் மேல் கட்டிய வீட்டிற்கும் ஒப்பிடுகிறார் (மத். 7: 24-27). பெருமழை சொரிந்து பெருவெள்ளம் வரும்போது முன்னது நிலைத்து நிற்கும். பின்னது அழிந்து போகும்.

நூற்றுக்கு அதிபதி இயேசுவிடம் தன் வீட்டு வேலைக்காரனை - திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப் படுபவனைச் சுகமாக்க வேண்டும்போது தான் வருவதாகவும் சுகமாக்குவதாகவும் இயேசு குறிப்பிடுகிறார். அப்பொழுது நூற்றுக்கு அதிபதி நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; நான் உமது அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவன்;

ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும்; அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்று தன்னைத் தாழ்த்தி வேண்டுகிறான். அப்போது இயேசு குறிப்பிடுவது பின்வருமாறு அமைகிறது.

> இயேசு இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின் செல்லுகிறவர்களை நோக்கி: இஸ்ரவேலருக் குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
>
> (மத். 8:10)

இவ்வொப்பீடு 'விசுவாசம்' என்ற பண்பு மக்களிடம் உள்ள அளவினை ஒப்பிடுகிறது.

தன் சீடர்களுக்குச் சுகமாக்கும் அதிகாரம் அளித்து அவர்களை அனுப்பும்போது மக்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தன்மைகளை எண்ணிப்பார்த்து உங்கள் உடம்பை அழிக்க வல்ல மக்களுக்குப் பயப்படாதேயுங்கள். மாறாக நியாயந்தீர்க்கும் கடவுளுக்கே பயப்படுங்கள் என்கிறார். இங்கு இருவர்தம் தன்மைகள் ஒப்பிடப்படுகின்றன.

> ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல் சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்கவல்லவருக்கே பயப்படுங்கள்
>
> (மத். 10: 28)

மக்கள் எத்தகைய கொடிய மனதுடையவர்கள் என்பதையே இங்கே சித்திரிக்கிறார். இதைத் தொடர்ந்து எல்லாம் தேவ சித்தத்தின்படி நடக்கும்; சிட்டுக்குருவிகள் பிடிக்கப்படுவதும் விற்கப்படுவதும் கூட தேவ சித்தமே. உங்கள் தலைமயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு உங்கள் வாழ்க்கை இறைவனால் எப்போதும் திட்டமிட்டுக் கொண்டு செலுத்தப் படும்; முன்கூட்டியே உங்கள் வார்த்தை தீர்மானிக்கப் பட்டிருக்கிறது என்று கூறிவிட்டு

> ஆதலால் பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலக் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர் களாயிருக்கிறீர்கள்
>
> (மத். 10: 31)

என்று ஒப்பிடுகிறார். யோவான் உலகில் வந்தபோது அவரை ஒரு மாதிரியாகவும் இயேசு உலகில் வந்தபோது அவரை ஒரு

மாதிரியாகவும் மக்கள் விமர்சித்தனர்; விமர்சிக்கின்றனர். இவர்கள் எப்படியாயினும் குறை கண்டுபிடிப்பவர்களே என்று கூறவரும் இயேசு மக்களைப் பின்வருமாறு ஒப்பிடுகிறார்.

> இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பிடுவேன்? சந்தை வெளிகளில் உட்கார்ந்து தங்கள் தோழரைப் பார்த்து உங்களுக்காகக் குழல் ஊதினோம்; நீங்கள் கூத்தாடவில்லை; உங்களுக்காகப் புலம்பினோம், நீங்கள் மாரடிக்கவில்லை என்று குறைசொல்லுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறது.
>
> *(மத். 11:17-18)*

ஓய்வு நாட்களில் தகுந்த காரணத்துடன் எதைச் செய்தாலும் சரியே; கட்டாயமாக அன்று தேவாலயத்தில் ஓய்ந்து அமர்ந்திருக்கத் தான் வேண்டும் என்றில்லை என்று பரிசேயர்களுடன் வாதிடும் இயேசு தன்னைத் தேவாலயத்துடன் ஒப்பிடுகிறார். ஓய்வு நாளில் பசி காரணமாகக் கதிர் கொய்து தின்னும் தன்னுடைய சீஷர்கள் இருக்குமிடத்தில் இறைவனான தான்தான் கூடவே இருக்கிறேனே; அவர்கள் தேவாலயத்தில் ஓய்ந்து கிடக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை என்பதைக் குறிப்பாக வலியுறுத்தும் வகையில்

> தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார் என்று உங்களுக்கு சொல்லுகிறேன்
>
> *(மத். 12: 6)*

என்று ஒப்பிட்டுக் குறிப்பிடுகிறார். இதே போலப் பிறிதோரிடத்திலும் சாலமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார் (மத். 12:42) என்று ஒப்பிடுகிறார். பரிசேயர் இவனும் பிசாசுகளைச் சாத்தானின் அதிகாரத்தினால் (பெயெல்செபூல்) துரத்துகிறானே தவிர வேறெந்த அதிகாரத்திலுமில்லை என்று இயேசு பிணியாளிகளினின்று பிசாசைத் துரத்துவது குறித்துப் பேசுகின்றனர். அப்போது தங்களுக்குள் இவ்வாறு கருத்து வேறுபடுகிறார்களே இம்மக்கள்; என்று வருந்தி இவ்வாறு பிரியும் மக்களைத் தமக்குள் தாமே ஒற்றுமையின்றிப் பிரிகின்ற ராஜ்யம், பட்டணம், வீடு முதலானவற்றோடு ஒப்பிடுகிறார் (மத். 12:25).

இயேசு தனது சீடர்கள் 'சீடத்துவம்' பொருந்தியவர்களாய் ஆன்மீக ஞானம் தேடி வந்திருப்பதனால் அவர்கள் தன்மைகளையும் பொதுமக்கள் அப்படிப்பட்ட வேட்கையில்லாதவர்களாய் இருப்பதனால் அவர்கள் தன்மைகளையும் ஒப்பிட்டுப் பேசுகிறார்.

> ஏசாயா தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது காதாரக் கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக் கண்டும்

அறியாதிருப்பீர்கள்; இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும் காதுகளினால் கேளாமலும் இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும் நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும் படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது. காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக் கொண்டார்கள் என்பதே; உங்கள் கண்கள் காண்கிற தினாலும் உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்.

(மத். 13: 14-16)

மனுஷகுமாரன் மகிமை பொருந்தினவராய்த் திரும்ப வரும்போது நீதிமான்களும் பாவிகளும் பிரிக்கப்படுவது

மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல

(மத். 25: 32)

நிகழும் என்று குறிப்பிடுகிறார். உயிர்த்தெழுந்த இயேசுவின் கல்லறை வாசலில் உட்கார்ந்திருந்த தேவதூதன் தோற்றமும் அவனைப் பார்த்துப் பிறர் பயந்ததும்

அவனுடைய ரூபம் மின்னல் போலவும் அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போல வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள்

(மத். 28: 3, 4)

என்று உவமித்து ஒப்பிடப்படுகிறது.

கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போல் இருப்பார்கள்

(சங். 125: 1)

நீதிமான் பனையைப் போல் செழித்து லீபனோனிலுள்ள கேதுருவைப் போல் வளர்வான்

(சங். 92: 12)

போன்ற வசனங்கள் முறையே மனிதனின் தேவன் மீதான நம்பிக்கையின் திட்டவட்டம், அதனால் அவன் பெறும் வாழ்வுவளம் முதலியவற்றை உவமை மூலம் வெளிப்படுத்துகிறது.

மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்; பிரபுக்களை நம்புவதைப்

பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.

(சங். 118: 8-9)

இங்கு எது நலம்? என்பதற்கு இரண்டு விதமான நம்பிக்கைகள் ஒப்பிடப்பட்டு 'ஏ' என்ற இடைச்சொற் பயன்பாட்டின் மூலம் முடிவும் சொல்லப்படுவதைக் காணலாம்.

சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளா யிராதேயுங்கள். துர்க்குணத்திலே குழந்தைகளாயும் புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்.

(I கொரி. 14:20)

இவ்வொப்பீடு இரண்டு பண்புகளை வேறுபடுத்துவதைக் காணலாம்.

நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை. கலக்கமடைந்தும் மனமுறிவடைகிற தில்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிற தில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை.

(I. கொரி. 4: 8, 9)

இவ்வசனங்கள் ஒப்பீடு போலத் தெரியாவிட்டாலும் இரு நிலைகளை ஒப்பிடுகின்றன என்பது தெளிவு.

உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்டோம் என்று தோமாவிடம் சீடர்கள் சொல்ல, அதற்கு அவன் அவரை நேரில் கண்டு சிலுவையிலே அவர்பெற்ற காயங்களைக் கண்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்று கூறுகிறான். அதன் பின்னர் எட்டு நாட்கள் கழித்து இயேசுவே அவர்கள் இருக்குமிடத்து நடுவிலே வந்து நின்று உங்களுக்குச் சமாதானம் என்று கூறுகிறார். தோமாவிடம் 'அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு' என்று கூறிவிட்டு மேலும்,

..... தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.

(யோவான் 20: 29)

இங்கே விசுவாசிகளின் தன்மைகளும் விசுவாசத்திலே காணப்படும் வேறுபாடுகளும் அவ்வத்தன்மைகளின் பயனும் ஒப்பிடப்படுகின்றன.

இங்கே சுட்டப்பட்ட 17 ஒப்பீடுகளுள் 7, பண்புகள் குறித்தன. அவை பக்தியுடனான மனம் (4 முறை), குழந்தைகள் போன்ற நற்பண்பு போன்றவை, குறை கூறும் பண்பு (2 முறை) முதலியனவாகும். இறைவன் சித்தப்படி நடப்பதால் அமையும் நற்பயன்கள் குறித்தவை 4 ஒப்பீடுகள். கடவுளை நம்புதல் நலம்

என்பது குறித்து ஓர் ஒப்பீடு அமைந்துள்ளது. வாழ்க்கை தேவசித்தத்தின் படிதான் அமையும் என்பதற்கு ஓர் ஒப்பீடு அமைகிறது. நியாயத்தீர்ப்பு நாளில் மனிதர்களைப் பிரிப்பது பற்றி ஓர் ஒப்பீடு அமைகிறது. இறைவன் பற்றி இரண்டும் தேவதூதன் பற்றி ஓர் ஒப்பீடும் அமைகின்றன.

3.3. பின்னோக்கு

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசிகள் பின் வருவனவற்றைத் தீர்க்கதரிசனங்களாகக் கண்டறிந்து உரைக் கின்றனர். இச்செய்திகளைப் பழைய ஏற்பாடு எடுத்துரைக்கிறது. இவை தவிர முன்னோர்களுக்கு ஏற்கெனவே சில செய்திகள் வழி வழியாகச் சொல்லப்பட்டு வந்திருக்கின்றன. 'மரபு' போல இவை அமைகின்றன. மேலும் நியாயப் பிரமாணங்களாக ஏற்கெனவே மக்களுக்குச் சில செய்திகள் சொல்லப்பட்டு வந்திருக்கின்றன. **இத்தகைய தீர்க்கதரிசனங்கள், பூர்வாங்க மக்களுக்கு உரைக்கப் பட்டவை, நியாயப் பிரமாணச் செய்திகள்** முதலியன மீண்டும் ஒரு முறை தேவையானவிடங்களில் நினைவுகூரப்பட்டு மேற் கோள்கள் போலச் சுட்டப்படுதல் ஓர் உத்தியாக அமைகிறது. தீர்க்க தரிசனங்கள் நிறைவேறியதன் உண்மையை உணர்த்துமிடத்தும் பழைய கருத்துகளை, சட்டங்களை மக்களுக்கு நினைவுபடுத்த வேண்டியும் இவ்வுத்தி பயன்படுகிறது. பழமையோடு - வரலாற்றோடு இணைத்துப் பார்த்துக் கொள்ளுதல் உண்மையானதும் விவேக மானதுமான உயர்வுக்கு வழிகாட்டும் என்பதையே இவ்வுத்திப் பயன்பாடு உணர்த்துகிறது.

> கொலை செய்யாதிருப்பாயாக என்பதும் கொலை செய்கிறவன் நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும் **பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று** கேள்விப்பட்டிருக்கிறீர்கள்
>
> (மத். 5: 21)

> அன்றியும் பொய்யாணையிடாமல் உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்து வாயாக என்று **பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்ட தென்று** கேள்விப்பட்டிருக்கிறீர்கள்
>
> (மத். 5:33)

பிசாசு பிடித்திருந்த அநேகரை இயேசுவினிடத்தில் கொண்டு வர, அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி அவர்களைச் சுகப்படுத்துகிறார். இச்சம்பவம் தீர்க்கதரிசனத்தோடு சேர்த்து எண்ணி விளக்கப்படுகிறது.

> அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று

ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. (மத். 8:17)

முன்பு நடந்த ஒரு சம்பவத்தை இயேசுவே சுட்டும் ஒரு பகுதி இவ்வுத்தியின் பாற்படும். உம்மை நம்ப வேண்டுமானால் எங்களுக்கு ஓர் அடையாளத்தைக் காட்டும் என்று வேதபாரகர், பரிசேயர் கேட்கும்போது வருந்தி யோனா தீர்க்கதரிசியின் வாழ்வில் நடந்த சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்.

.... ஆனாலும் **யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி** வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல மனுஷ குமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார் (மத். 12: 39-40)

என்று முன்பு நடந்ததையும் இனி நடைபெறப்போவதையும் குறிப்பிடுவதைக் காணலாம். ஏசாயா தீர்க்கதரிசி மக்கள் இறைவனை உணராமல் இருக்கும் தன்மைகள் குறித்துச் சொன்னவை (மத். 13: 14-16) இயேசுவினால் சுட்டப்படுகின்றன. இயேசு மக்களிடம் உவமைகளாகப் பேசுவது ஏன் என்ற வினாவிற்கு அவர் இவ்வாறு உவமைகளாகப் பேசுவார் என ஏற்கெனவே தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டிருக்கிறது என்பது விளக்கப்படுகிறது.

என் வாயை உவமைகளினால் திறப்பேன். உலகத் தோற்ற முதல் மறைபொருளானவைகளை வெளிப் படுத்துவேன் என்று **தீர்க்கதரிசியால் உரைக்கப் பட்டது** நிறைவேறும்படி இப்படி நடந்தது (மத். 14: 35)

வேதபாரகரும் பரிசேயரும் தன்னிடம் மனதளவில் நெருங்கவில்லை என்பது குறித்து வருந்தும் இயேசு இவர்களது இந்நிலை ஏற்கெனவே ஏசாயாவினால் உரைக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடுகிறார்.

மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று **ஏசாயா தீர்க்கதரிசி** நன்றாய்ச் **சொல்லி இருக்கிறான்** என்றார் (மத். 15:9)

மோசேயும் எலியா தீர்க்கதரிசியும் இயேசுவோடு பேசிக் கொண்டிருப்பதாக இயேசு மறுரூபமான காட்சி சித்திரிக்கப் படுகிறது. இக்காட்சி ஒரு தரிசனமாகச் சீடர்கள் சிலருக்குக்

காட்டப்படுகிறது. அப்பொழுது எலியா தீர்க்கதரிசியின் இனிமேலான வரவு குறித்து வேதபாரகர் சொல்வதை இயேசுவிடம் சீடர்கள் கேட்கிறார்கள். அப்போது இயேசு,

> ஆனாலும் எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்கிறேன்
>
> (மத். 17: 12)

என்று விளக்குகிறார்.

இயேசுவைக் காட்டிக் கொடுத்தசீடன் யூதாஸ் பின்னர் தன் செயலுக்கு வருந்தி நான்று கொண்டு சாகிறான். இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்கு அவன் பெற்ற 30 வெள்ளிக் காசுகள்மூலம் பிரதான ஆசாரியர்களால் அந்நியரை அடக்கம்பண்ண நிலம் வாங்கப்படுகிறது. அந்த நிலம் 'இரத்த நிலம்' என்னப்படுகிறது. இச்சம்பவத்தைத் தீர்க்கதரிசி ஏற்கெனவே உரைத்ததாக,

> இஸ்ரவேல் புத்திரரால் மதிக்கப்பட்டவருக்குக் கிரயமாகிய முப்பது வெள்ளிக் காசை அவர்கள் எடுத்து கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று
>
> (மத். 27:10)

என்று சுட்டப்படுகிறது. இது போலவே இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின் அவருடைய உடையைச் சீட்டுப் போட்டுப் போர்ச்சேவகர்கள் பகிர்ந்து கொள்கிறார்கள்.

> என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு என் உடையின் பேரில் சீட்டுப் போட்டார்கள் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும் படி இப்படி நடந்தது
>
> (மத். 27:35)

என்று இதுபோல் அமைவன இவ்வுத்திக்குச் சான்றாக அமைகின்றன. இவ்வாறு வரலாற்றுச் செய்திகளைப் பின்னோக்கிப் பார்த்துச் சுட்டுவது பேசிக் கொண்டிருக்கும் செய்திக்கு மேலும் அரண் சேர்த்து அச்செய்திக்குக் கூடுதல் மதிப்பளிப்பதாய் அமைகிறது.

3.4. மறைத்துச் சொல்லல்

சீர்திருத்தச் சபையினர் பயன்படுத்தும் விவிலிய மொழி பெயர்ப்பில் சில வசனங்கள் பொருட்புலப்பாட்டில் சிறந்து விளங்கவில்லை. பொருள் உடனே புலப்படாமல் வாசகன் நின்று நிதானித்து யோசிக்க வேண்டியிருப்பதும் அதன் பின்னர் பொருள் தெளிவுறுவதும் அல்லது தெளிவுறாமையும் ஆகிய நிலைகளுக்கான

காரணங்கள் சிந்தித்தற்குரியன. மொழிபெயர்ப்பாளர்களின் கவனக்குறைவு, விவிலியச் செய்தியே மறைத்துச் சொல்லப் பட்டிருத்தல், சொற் கடினம், தொடரமைப்பில் குழப்பம் போன்றவற்றைக் காரணங்களாகக் குறிப்பிடலாம். சமயச் செய்தி என்பதால் அதற்கேயுரிய தோரணையில் சொல்லும்போது புரிந்தும் புரியாமலும் புலப்படுத்துதல் ஒருவேளை கூறுவோனுடைய உத்தியாக அல்லது அந்தக் கால நெறிமுறையாக இருந்திருக்கலாம். இவ்வகையில் மறைத்துச் சொல்லும் வசனங்கள் அல்லது பொருட் குழப்பத் தொடர்கள் மற்றும் பொருட்டெளிவு சிறிதேயுடைய வசனங்கள் முதலியவற்றிற்குச் சான்றுகளாகச் சிலவற்றை சுட்டலாம்.

காணிக்கையைச் செலுத்த வரும் நீ உன் சகோதரனிடம் மனக்குறை இருந்தால் அதைத் தீர்த்துவிட்டுப் பின் வந்து காணிக்கை செலுத்து; நியாயாதிபதி, சேவகன், சிறை முதலிய நிலைகளில் நீ ஆட்படாதிருக்க வேண்டுமானால் உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே நல்மனம் பொருந்து; என்ற வசனங்களின் அடுத்த வசனம்

> பொருந்தாவிட்டால், நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்பட மாட்டாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்
>
> *(மத். 5: 26)*

என்று அமைவது, பொருள் பிற வசனங்களைப் போல உடனே புரிவதில்லை. இவ்வசனத்தைப் பொது மொழிபெயர்ப்பு,

> கடைசிக் காசு வரை திருப்பிச் செலுத்தாமல் அங்கிருந்து வெளியேற மாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்
>
> *(மத். 5: 26)*

என்று குறிப்பிடுகிறது.

எதிர்கால உணவு, உடை குறித்துக் கவலைப்படாதீர்கள், எல்லாவற்றையும் தேவன் தருவார்; நீங்கள் செய்ய வேண்டியது தேவனுடைய ராஜ்யத்தையும் நீதியையும் தேடுதல் மட்டுமே. அப்படியானால் இவையெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும் என்ற கருத்திற்கு அடுத்த வசனம் கருத்துச் சிக்கல் இல்லையெனினும் கருத்துத் தெளிவில் சற்று குறையுடையதாகவே அமைகிறது.

> ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள். நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின்பாடு போதும்
>
> *(மத். 6:34)*

இவ்வசனம் பொதுமொழிபெயர்ப்பில் பின்வருமாறு அமைந்து பொருளைத் துல்லியமாய்த் தருகிறது.

> ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதீர்கள். ஏனெனில் **நாளையக் கவலையைப் போக்க நாளை வழி பிறக்கும்.** அந்தந்த நாளுக்கு அன்றன்றுள்ள தொல்லையே போதும்.
> (மத். 6:34)

இயேசுவின் சீடரில் ஒருவன் அவரிடம் தான் போய் தன் தகப்பனை அடக்கம் பண்ண உத்தரவு கேட்கிறான்.

> அதற்கு இயேசு: **மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்க பண்ணட்டும்,** நீ என்னைப் பின்பற்றி வா என்றார்
> (மத். 8: 22)

என்ற பதில் சாதாரண வாசகனுக்கு உடனடியாகப் பொருள் புலப்பாட்டில் குறைபாடுடையதாகவே அமைகிறது.

பொது மொழிபெயர்ப்பு,

> இயேசு அவரைப் பார்த்து, "நீர் என்னைப் பின்பற்றி வாரும். **இறந்தோரைப் பற்றிக் கவலை வேண்டாம். அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள்"** என்றார்
> (மத். 8:22)

என்று எவ்விதப் பொருட்சிக்கலும் இன்றி விளக்குவதைக் காணலாம்.

தனது சீடர்களுக்குச் சுகமளிக்கும் அதிகாரத்தை அளித்து அவர்களை இயேசு அனுப்புகின்றபொழுது அவர்கள் தங்கள் செலவுகளின் போது தங்களுக்கென எதையும் சேமித்து வைத்துக் கொள்ளக் கூடாது என்று அறிவுறுத்துகிறார்.

> வழிக்காகப் பையையாவது, இரண்டு அங்கிகளை யாவது பாதரட்சைகளையாவது தடியையாவது தேடி வைக்க வேண்டாம்; **வேலையாள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்**
> (மத். 10: 10)

என்ற வசனத்தின் இறுதிப்பகுதி சொல்லவரும் கருத்தை இன்னும் எளிதாகச் சொல்லியிருக்கலாம். 'வேலை செய்கிறவனுக்கும் உணவு இறைவனால் தரப்படும்' என்பதே அப்பகுதியின் பொருள்.

> பயணத்திற்காகப் பையையோ, இரண்டு அங்கிகளோ, மிதியடிகளோ, கைத்தடியோ எடுத்துக் கொண்டு போக வேண்டாம், ஏனெனில் **வேலையாள் தம் உணவுக்கு உரிமை உடையவரே**
> (மத். 10: 10)

என்பது பொது மொழிபெயர்ப்பு வாசகம். பொருளைச் சரியாகத் தெளிவிப்பதாய் இம்மொழிபெயர்ப்பு அமைகிறது.

நியாயத் தீர்ப்பு நாளிலே நான் என்னை யார் யார் பூமியிலே மனிதர் முன் அறிக்கை பண்ணுகிறார்களோ அவர்களைப் பிதாவினிடத்தில் அறிக்கை பண்ணுவேன்; மறுதலிப்பவர்களை நானும் அங்கு மறுதலிப்பேன் என்ற வசனத்திற்கு அடுத்த வசனம் மக்கள் மத்தியில் பிரிவினைகளை உண்டாக்கவே வந்தேன் என்ற பொருளில் அமைகிறது.

> பூமியின் மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள். சமாதானத்தையல்ல பட்டயத்தையே அனுப்ப வந்தேன். எப்படியெனில் மகனுக்கும் தகப்பனுக்கும் மகளுக்கும் தாய்க்கும் மருமகளுக்கும் மாமிக்கும் **பிரிவினையுண்டாக்க வந்தேன்**
>
> *(மத். 10:34-35)*

என்பவை முந்திய வசனங்களோடு சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டுமா அல்லது அடுத்து வரும் "ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே" என்ற வசனத்தோடு சேர்த்து பொருள் கொள்ள வேண்டுமா என்பதில் குழப்பம் நேரிடுகிறது. இறைவன் மேல் பற்று வேண்டும்; அவரைக் குறித்துப் பிறரிடம் கூறவேண்டும்; இறைவனைவிட குடும்ப உறுப்பினர்கள் மீது பற்றுக் கொள்வது தவறு, என்னைப் பின்பற்றுவதால் வீட்டில் உள்ளவர்களால் பகைக்கப்படுவீர்கள் என்ற கருத்துகள் முன்னிறுத்தப் படுகின்றன என்பது ஆழ்ந்து கவனித்தால் பொருள் விளங்கும். ஆனாலும் உடனே பொருள் விளங்குமாறு தெளிவில்லை.

> யோவான்ஸ்நானன் கால முதல் இதுவரைக்கும் பரலோக ராஜ்யம் **பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்**
>
> *(மத். 11:12)*

என்ற வசனத்தில் 'பலவந்தம்' என்ற சொல்லாட்சி முழுக்க முழுக்கப் பொருட்குழப்பத்தை விளைவிக்கிறது. பொது மொழிபெயர்ப்பு விவிலியம் தரும் **வசனமும் கூடுதல் விளக்கமும்** குழப்பத்தைப் போக்குகின்றன.

> திருமுழுக்கு யோவானின் காலமுதல் இந்நாள் வரையிலும் **விண்ணரசு வன்மையாகத் தாக்கப் படுகிறது; தாக்குகின்றவர்கள் அதை கைப்பற்றிக் கொள்கின்றனர்**
>
> *(மத். 11:12)*

என்று மொழிபெயர்த்துவிட்டு அடிக்குறிப்பில் "திருமுழுக்கு யோவானின் காலமுதல் இந்நாள் வரை **விண்ணரசு வல்லமையாகச் செயலாற்றி வருகிறது. ஆர்வமுள்ளோர் அதைக் கைப்பற்றுகின்றனர்"** எனவும் இவ்வசனத்தை மொழி பெயர்க்கலாம்[2] என்று கூடுதல் விளக்கம் தரப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பட்டணங்களில் மனந்திரும்பாத மக்கள் நிறைந்திருப்பதைக் கண்டு வருந்தும் இயேசு அப்பட்டணங் களைச் சபிக்கிறார். அதனையடுத்து அமையும் மூன்று வசனங்கள் பிற பகுதிகளைப் போல் எளிமையானவை அல்ல.

> அந்த சமயத்திலே இயேசு சொன்னது: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம் பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான். குமாரனும் குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர வேறொருவனும் பிதாவை அறியான்
>
> (மத். 11:25-27)

இவ்வசனங்களுக்குத் 'தந்தையும் மகனும்' என்று தலைப்பிட்டுக் குறிப்பிடுகிறது பொது மொழிபெயர்ப்புத் திருவிவிலியம். இவ்வாறு தலைப்பிடுவதனால் 'இது தனிப்பகுதி' என்று பிரித்துத் தெளிவுறுத்த முயலுகிறது.

தன்னை உணராது விரோதிக்கும் பரிசேயர்களைக் குறித்து இயேசு வருந்தும்போது,

> என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக் கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்
>
> (மத். 12: 30)

என்று குறிப்பிடுகிறார்.

> என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார், **என்னோடு இணைந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவர்** அவர்களைச் சிதறச் செய்கிறார்
>
> (மத். 12:30)

என்ற பொதுமொழிபெயர்ப்பு வசனம் அமைந்து பொருள் தெளிவுடையதாகிறது.

இயேசு சுட்டும் உவமைக் கதைகளைத் தொடர்ந்து அக்கதைகள் உரைக்கும் நீதிக்கருத்துகளாகச் சுட்டப்படுபவை இவ்வகையில் சற்றுத் தெளிவு குறைவுடையனவாய் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

> உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும் பரிபூரணமும் அடைவான்; இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்
>
> *(மத். 13: 12)*

என்ற பகுதியில் உள்ளவன், இல்லாதவன் என்பதற்கு முன்னர் 'ஆத்மதாகம்' அல்லது 'ஆன்மீக வேட்கை' போன்ற சொற்களைப் போட்டுப் பொருள் கொண்டால் பொருள் தெளிவாகும். இதே வசனத்தின் கருத்து மீண்டும் *மத். 25: 29* இல் பிறிதொரு கதையின் நீதியாகச் சுட்டப்படுகிறது.

மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தியவராய்த் தம்முடைய தூதர்களோடு வருவார்; அப்பொழுது அவனவன் கிரியைக்குத் தக்கதாகப் பலனளிப்பார் என்று இயேசு குறிப்பிட்டு விட்டு அதன் பின்னர்,

> இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசி பார்ப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்
>
> *(மத். 16: 28)*

என்று பேசுமிடம் பொருள் தெளிவில்லாததாய் அமைகிறது.

> நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இங்கே இருப்பவருள் சிலர் மானிட மகனது ஆட்சி வருவதைக் காண்பதற்கு முன் சாகமாட்டார் என்றார்
>
> *(மத். 16: 28)*

இவ்வசனம் பொதுமொழிபெயர்ப்பில் அமைகிறது.

இயேசு மறுரூபமான சம்பவம் மரபு போல 'மறுரூபம்' என்ற சொல்லாலேயே குறிப்பிடப்படுகிறது. இச்சொல்லாட்சி சாதாரண மக்களுக்கு எந்த அளவிற்குப் புரியும் என்பது அய்யமே. இருந்தாலும் இவ்வசனத்தில் அடுத்து வரும் உவமைகள் அவர் தோற்றத்தை விளக்குவதால் இச்சொல்லே போதும் என்று கருதி இவ்வாறு பயன்படுத்தியிருந்திருக்கலாம்.

> அவர்களுக்கு முன்பாக **மறுரூபமானார்.** அவர் முகம் சூரியனைப் போலப் பிரகாசித்தது. அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப் போல் வெண்மையாயிற்று.
>
> *(மத். 17: 2)*

பொது மொழிபெயர்ப்பில்

> அங்கே அவர்கள் முன் அவர் தோற்றம் மாறினார் அவரது முகம் கதிரவனைப் போல ஒளிர்ந்தது. அவருடைய ஆடைகள் ஒளிபோன்று வெண்மையாயின
>
> (மத். 17:2)

என்று குறிப்பிடப்படுகிறது. இயேசு தன்னிடம் எப்போதும் கேள்வி கேட்கும் பரிசேயர்களிடம் ஒரு கேள்வி கேட்கிறார். கிறிஸ்து யார்? என்பது அவர் எழுப்பும் கேள்வி. அவர்கள் 'தாவீதின் குமாரன்' என்கிறார்கள். அப்படி இருக்க தாவீது கிறிஸ்துவை என் ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறாரே எப்படி என்று கேட்க அவர்களுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. தாவீது சொன்னதாக இயேசு கூறும் பகுதி தெளிவில்லாததாகத் தமிழ் மொழிபெயர்ப்பில் அமைகிறது.

> நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லி யிருக்கிறானே. தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி? என்றார்
>
> (மத். 22: 44-45)

சற்று நிதானித்து இவ்வசனத்திற்குப் பொருளைப் புரிந்து கொண் டாலும் பொருள்புரிதல் தாமதமாகவே நிகழ்கிறது என்ற குறைபாடு உள்ளது. பெரும்பாலும் தொடரமைப்புக்களால் பொருள் புரியாமையும் கருத்துக்குழப்பமும் ஏற்படுகின்றன. சிறுபான்மை சொல்லாட்சி காரணமாக இச்சிக்கல் ஏற்படுகிறது. மொழி பெயர்ப்பில் ஏற்பட்ட கவனக்குறைவே காரணமாக இருக்கக்கூடும்.

3.5. உருவகம்

> உவமை அணியில் உபமான உபமேயங்கள் வேறு வேறானவை என்ற எண்ணம் அகல்வதில்லை. உருவகத்தில் இரண்டும் ஒன்றே என்ற அபேத உணர்ச்சி தலையெடுக்கிறது. எனவே உவமையின் செறிவார்ந்த வடிவமே உருவகம் எனலாம்.[3]

உவமஉருபு இல்லாமல் உருவகமாகவே சொல்லும் முறை விவிலியத்திலும் உண்டு. மதி போன்ற முகம், மதிமுகம் என்று ஆகி 'முகமதி' என்று குறிப்பிடப்படுவது போலத் தெளிவாக இல்லையெனினும் சில விளக்கங்களை உருவகமாக எண்ணிப் பார்க்க இடமுள்ளது.

> இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான் அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். **தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது.**
>
> *(மத். 6: 24)*

அதைப் போல என்ற விளக்கம் வசனத்தில் இல்லை. தேவன் மீதான பற்று, உலகப் பொருள் மீதான பற்று இரண்டும் இரண்டு எஜமான்களாகவும் இரண்டன் மீதுமான ஆசை ஊழியம் அல்லது எஜமான் சேவையாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதும்போது இவ்வுலகில் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கும்படி தேவனுடைய வல்லமையில் பலப்படுவதுடன் ஒரு சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ளவும் வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல; துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு என்று கூறி எனவே நாம் அணிந்து கொள்ள வேண்டிய ஆயுதங்கள் இன்னின்ன என்று ஒரு பட்டியல் தருகிறார். இத்தகைய உலகப் போராட்டத்தில் ஈடுபடும் மனிதன் ஓர் ஆயுதம் தரித்த வீரனாகவே உருவகப்படுத்தப்படுகிறான். தீங்குநாளிலே மேற்குறிப்பிட்ட எதிரிகளை எதிர்க்கவும் சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர் களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

> **சத்தியம்** என்னும் **கச்சையை** உங்கள் அரையில் கட்டினவர்களாகவும் **நீதி** என்னும் **மார்க் கவசத்தைத்** தரித்தவர்களாகவும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய **ஆயத்தம்** என்னும் **பாத ரட்சையைக்** கால்களிலே தொடுத்தவர்களாயும் பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை யெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய் எல்லா வற்றிற்கும் மேலாக **விசுவாசமென்னும் கேடகத்தைப்** பிடித்துக் கொண்டவர்களாகவும் நில்லுங்கள். **இரட்சணியமென்னும் தலைச் சீராவையும் தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும்** எடுத்துக் கொள்ளுங்கள்.
>
> *(எபேசியர் 6: 14-17)*

உரைநடையில் உருவகம் கவிதையைப் போலத் தெளிவாக அமைவதில்லை. எனவே இவ்வசன நடையிலும் தெளிவாக அமையவில்லை.

3.6. உரையாடல்

மத்தேயு சுவிசேஷத்தில் பல பகுதிகள் உரையாடல் உத்தியை உள்ளடக்கியவை. வெறும் வசனநடையில் படர்க்கையில் எழுதுவது போல இல்லாமல் சிற்சிலவிடங்களில் உரையாட லாகவும் மொழிநடை அமைகிறது. சான்றாக ஓய்வு நாளில் பயிர்கொய்யும் சீடர்கள் குறித்துப் பரிசேயர்கள் இயேசுவோடு உரையாடும் இடம் (மத். 12: 1-5) குறிப்பிடத்தக்கது.

மத். 19 ஆம் அதிகாரம் 16 முதல் 24 வசனங்கள் வரை உள்ள பகுதி செல்வந்தன் ஒருவன் இயேசுவிடம் தான் நித்திய ஜீவனை அடைய வழி கேட்பதும் அவர் எல்லாச் செல்வத்தையும் விற்று, தரித்திரருக்குக் கொடுத்துவிட்டு, தம்மைப் பின்பற்றி வரச் சொல்வதும் ஆகும். இப்பகுதியில் உரையாடல் தெளிவாக அமைகிறது. வாசகர்களை எளிதில் இப்பகுதி சென்று சேர்வதற்குச் சுட்டப்பட்டிருக்கும் உரையாடல் முறை ஒரு காரணமாகிறது. உரையாடல் மிகவும் எளிமையாகவும் தகுந்த ஓர் உவமையோடும் அமைந்திருப்பது கேட்போரை ஈர்ப்பதாக அமைகிறது.

3.7. கதை கூறல் அல்லது உவமைக் கதைகளைச் சொல்லி விளக்குதல்

கதை கூறி விளக்கும் ஓர் உத்தி இயேசுவின் போதனைகளில் காணப்படுகிறது. இவ்வுத்தியை 'உவமித்தல்' என்று சொல்லு மளவிற்கு இவை உவமைக் கதைகளாகச் சுட்டப்படுகின்றன. இயேசுவின் சீடர்களே ஏன் மக்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்கிறார்கள். அதற்கு இயேசு மறுமொழியாகக் கூறும் பொதுமொழிபெயர்ப்புத் திருவிவிலியப் பகுதி பின்வருமாறு.

> விண்ணரசின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது. அவர்களுக்கோ கொடுத்து வைக்கவில்லை. உள்ளவருக்குக் கொடுக்கப் படும். அவர் நிறைவாகப் பெறுவார். மாறாக இல்லாதவரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும். அவர்கள் கண்டும் காண்பதில்லை. கேட்டும் கேட்பதில்லை; புரிந்து கொள்வதுமில்லை. இதனால்தான் நான் அவர்களோடு உவமைகள் வாயிலாகப் பேசுகிறேன்.
>
> (மத். 13: 11-13)

மத்தேயு நூலில் பரலோக ராஜ்யம் பற்றிய உவமைகள் கதைகளாகச் சுட்டப்படுகின்றன.

	பரலோகம்	விளக்கம்*
1.	தன் நிலத்தில் நல்ல விதையை விதைக்கிற மனுஷன் (மனுஷ குமாரனாகிய இயேசு)	சத்துரு களைகளை ஊடே வளர்ப்பான். அக்களைகளை உடனடியாகப் பிடுங்கினால் நல்ல பயிரையும் பிடுங்கி விட வாய்ப்பாக அமைந்துவிடக் கூடும். எனவே நியாயத்தீர்ப்பு நாளில் நல்லவையும் பதரும் பிரிக்கப்பட்டுக் கோதுமை களஞ்சியத்திலும் பதர் அக்கினியிலும் சேர்க்கப்படும். (மத். 13: 24-30)
2.	கடுகு விதை	சிறிதாயிருந்தும் பெரிய மரமாகிப் பறவைகள் அதன் கிளைகளில் வந்தடையத் தக்கதாகும். (மத். 14: 31-32)
3.	புளித்த மா	சிறிது புளித்த மா எப்படி அதனுடன் சேர்க்கப்படுகிற மூன்று படி மாவையும் புளித்த மாவாக மாற்றுமோ அது போல பரலோக ராஜ்யமும் தன்னை வந்தடைந்தவர்களை மாற்றும். (மத். 13: 33)
4.	நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷம்	மனுஷன் தனக்கு உண்டான எல்லா வற்றையும் விற்று இப்பொக்கிஷத்தைக் கைக்கொள்ளுகிறான். (மத். 13: 44)
5.	நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரி	வியாபாரி விலையுயர்ந்த ஒரு முத்துக் காகத் தனக்கு உண்டான எல்லா வற்றையும் விற்று அம்முத்தைக் கொள்ளுகிறான். (மத். 13:46)
6.	கடலில் சகலவித மீன் களையும் வாரிக் கொள்ளும் மீன்வலை	இழுக்கப்பட்ட மீன்களுள் நல்ல வைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு ஆகாதவை எறியப்படும். தேவ தூதர்கள் உலகத்தின் முடிவிலே நீதிமான்களிடமிருந்து பொல்லா தவர்களைப் பிரித்து அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள். (மத். 13: 47-50)

---

* விளக்கம் என்ற இப்பகுதியில் தொடர்ந்து வரிசையாக அமையும் விளக்கங்கள் நூலாசிரியின் சொந்த நடையில் விவிலியக் கருத்தின் அடிப்படையில் எழுதப்பட்டனவே தவிர விவிலிய வசனங்கள் அல்ல.

7.	தன் ஊழியரிடத்தில் கணக்குப் பார்க்கும் ராஜா	கடன்பட்ட ஊழியன் கடனைக்கட்ட காலம்கேட்டுத் தாழ விழுந்து வருந்த ராஜா அவனை மன்னித்து அவன் கடன்களையெல்லாம் கட்ட வேண்டாம் எனவிட்டுவிடுவார். இது போலவே மனந்திரும்புபவரை மோட்சம் அவரது பாவங்களை மன்னித்து ஏற்றுக் கொள்ளும். ராஜா ஊழியனை மன்னித்தது போல ஊழியனும் அவனுக்குக் கீழ் உள்ள தன் சகோதரர்கள் கடன்களை, தப்பிதங்களை மன்னிக்க வேண்டும். இல்லையெனில் மோட்சத்தில் ஊழியனுக்கு இடம் இல்லை. (மத். 18:23-35)
8.	வீட்டெஜமானாகிய ஒரு மனுஷன்	வேலைக்கு முந்தி வந்தவருக்கும் பிந்தி வந்தவருக்கும் ஒரே மாதிரியான கூலி தருபவர்; பாவமன்னிப்பைப் பெறுதல் என்பது முக்கியம்; எப்போது என்பது இல்லை. (மத். 20: 1-16)
9.	தன் மகனுக்குக் கலியாணம் செய்த ராஜா	வருந்தி, வலிய அழைக்கப்பட்ட விருந்தினர்களுள்ளும் அதற்குரிய தகுதியற்றோருக்கு விருந்தைத் தர மறுப்பவன் மோட்சத்திற்கு வருவதற் குரிய தகுதியை உருவாக்கிக் கொள் பவனே அங்குப் போக முடியும் (மத். 22:2-14)
10.	திராட்சத் தோட்டம்	தகப்பன் திராட்சத் தோட்டத்தில் வேலை செய்யப் போகும்படி, தன் இரண்டு மக்களைப் பணிக்கிறான். மூத்தவன் மாட்டேன் என்று சொல்லிவிட்டு, பின்னர் மனஸ்தாபப் பட்டுப் போகிறான். இளையவன் போகிறேன் என்று சொல்லிவிட்டுப் போகவில்லை. தேவனுடைய ராஜ்யத்திற்குச் செல்ல மனமில்லா திருந்தும் ஆயக்காரர்களும் வேசி களும் யோவானை விசுவாசித்த தினால் பிரவேசிக்கிறார்கள். இவர்கள் மூத்தமகனைப் போன்ற வர்கள். யோவானை விசுவாசிக் காமலும் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று மனஸ் தாபப்படாமலும் இருப்பவர்கள்

இளைய மகனைப் போன்றவர்கள். இவர்கள் பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் ஆவர்.

(மத். 21: 23-32)

11. திராட்சத் தோட்டம்

எஜமான் தன் திராட்சத் தோட்டத்தில் விளைச்சலுக்கான சகல வசதிகளையும் செய்து குத்தகைக்கு விட்டுவிட்டுப் புற தேசத்துக்குப் போகிறான். ஏற்ற காலத்தில் கனிகளை வாங்கிவர ஊழியக்காரரை அனுப்புகிறான். அவர்கள் அவனைக் கொல்கிறார்கள். மற்றொருவனை அனுப்ப அப்பொழுதும் இதுவே நிகழ்கிறது. இறுதியின் தன் குமாரனை அனுப்புகிறான். குமாரன் என்றும் பார்க்காமல் அவனையும் கொலை செய்கிறார்கள். எஜமான் தானே வந்து திராட்சத் தோட்ட குத்தகைக்காரரை அழித்து வேறே ஆட்களிடம் கொடுக்கிறான். இக் கதையின் செய்தியைப் பின்வருமாறு ஒப்பிட்டுக் காணலாம்.

திராட்சத் தோட்டம் - கடவுளின் ராஜ்யம்

குத்தகைக்காரர் - மக்கள்

கனிவிளையும் சூழல் - கடவுளை உணரத் தரப்பட்ட வாய்ப்புகள்

கனிதர மறுத்தல் - மக்கள் ஆன்மீக வாழ்வில் பயனற்றவர்களாக இருத்தல்

ஊழியர்களைக் கொலை செய்தல் - தீர்க்கதரிசிகளைக் கொல்லுதல்

குமாரனைக் கொல்லுதல் - இயேசு மனிதராக வந்தபோது அவரையும் தேவகுமாரன் என்றுணராமல் கொல்லுதல்

எஜமான் நேரில் வந்து அழித்தல் - மக்கள் நியாயத்தீர்ப்புக்கு உட்படுத்தப் படுவர் நியாயத் தீர்ப்பு நாளில்

தோட்டத்தை வேறு ஒருவருக்குத் தருதல் - நீதிமான்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசித்தல்

(மத். 21: 33-41)

12.	கலியாண வீடு	பரலோகம் ஒரு கலியாண வீட்டிற்கு ஒப்பாக இருக்கிறது. பின்வருமாறு ஒப்பிடலாம்.
		மணவாளன் - மனுஷகுமாரன்
		புத்தியுள்ள ஐந்து பெண்கள் (எண்ணெய், தீவட்டி எடுத்துக் கொண்டு போய் மணவாளனை எதிர் கொள்ள ஆயத்தமானவர்கள்)- இறைவன் எப்போது வருவார் என்று விழித்திருக்கும் மக்கள்.
		ஆயத்தமாயிருத்தல் - இறைவனது வரவை எதிர்கொண்டு காத்திருத்தல்.
		புத்தியற்ற ஐந்து பெண்கள் (எண்ணெய், தீவட்டிகளுடன் ஆயத்த மில்லாதவர்) - இறைவனது வரவை எதிர்கொண்டு காத்திருக்காதோர்.
		புத்தியுள்ள ஸ்திரீகள் மணவாள னோடே கலியாண வீட்டுக்குள் புகுதல் - பரலோக ராஜ்யம் புகுதல்.
		எண்ணெய் வாங்கப் போன புத்தி யில்லாத ஸ்திரீகள் கெஞ்சுதலும் கதவு திறக்கப்படாமையும் - அடை பட்ட மோட்சம் பிறகு யாருடைய பின்னான ஆயத்தத்திற்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டுத் திறக்கப்பட மாட்டாது. (மத். 25: 1-12)
13.	புற தேசத்துக்குப் பிர யாணமாய்ப் போகும் போது தன் ஆஸ்திகளை ஊழியக்காரரிடம் ஒப்புக் கொடுத்த எஜமான்	சிறிது காலம் நம் வயப்பட்டிருக்கிற வாய்ப்பான பரலோக ராஜ்யத்திற்கு ஆயத்தப்படும் வாய்ப்பு
	ஆஸ்தியைப் பெருக்கிய ஊழியர்கள்	பரலோக ராஜ்யத்திற்கு ஆயத்தப் பட்டவர்கள்.
	ஆஸ்தியைப் பெருக்காத ஊழியன்.	பரலோகத்திற்கு ஆயத்தப்படாதவன். (மத். 25: 14-29)

பிற கதைகள்

தேறின வேதபாரகன்: தன் பொக்கிஷத்திலிருந்து புதியது, பழையது முதலியவற்றை எடுத்துக் கொடுக்கிற வீட்டு எஜமான்	பரலோகம் பற்றிய செய்திகள் உபதேசிக்கப்பட்டு நன்கு கற்றுத் தேறினவன்; அவ்வெல்லாச் செய்தி-களையும் மக்களுக்கு வாரிவழங்குபவன் (மத். 13: 52)

இயேசு சுட்டும் இத்தகைய உவமைக்கதைகள் பலராலும் போற்றப்படுபவை. ஏனெனில் இவை கருத்துச் செறிவுடையனவாய் கிறித்தவ இறைக் கோட்பாடுகளை விளக்குவதுடன் சொல்லும் முறையிலும் சிறந்து மனத்தில் இக்கதைகளைத் தக்க வைக்கின்றன.

3.8. விளக்க நடையும் விவரிப்பு நடையும்

திருவிவிலியத்தில் விளக்க நடையையும் விவரிப்பு நடையையும் துல்லியமாகப் பகுத்தறிய முடியாது. ஏனெனில் இங்கு எல்லாமே விவரிப்பிற்குட்படுபவை. "படைப்பிலக்கியங்களில் ஒரு குறிப்பிட்ட பின்னணி அல்லது நிகழ்ச்சியைச் சித்திரிக்க இந்நடை (விளக்க நடை) பயன்படுகிறது. விவரிப்பு நடை தொடர் நிகழ்ச்சியைச் சித்திரிக்கப் பயன்படுகிறது. ஒரு நாவலின் கதையோட்டத்தைக் கூறப்பயன்படுவது இந்நடையே... இங்குக் கதை கூறல் நடைபெறுகிறது. குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி அல்லது பின்னணியை விளக்கிக் கொண்டிராமல் கதை யோட்டத்தை அல்லது கருத்தோட்டத்தை எடுத்துரைக்கிறது. படைப்பிலக்கியங்களில் கதை வேகமாக ஓடும்போது இந்நடையே கையாளப்படுகிறது. சிலருடைய நாவல்களைப் படிக்கும்போது இடையே சில பக்கங்களை ஒதுக்கிவிட்டுப் படித்தாலும் கதை தொடர்ச்சி அறுபடுவதில்லை. காரணம், அங்கு விளக்க நடை பயன்பட்டிருக்கும். சிலரது நாவல்களில் ஒரு பக்கத்தை ஒதுக்கி விட்டாலும் கதையைப் புரிந்துகொள்ள முடியாமற் போகலாம். காரணம் அங்கு விவரிப்பு நடை கையாளப்பட்டிருக்கும்"[4]

இவ்வடிப்படையில் பார்க்கும்போது விவிலியத்தில் சொல்லிக் கொண்டிருக்கும் செய்தியோடு தொடர்புடைய வசனங்கள் அனைத்தும் விவரிப்பு நடையில் அமைந்தவையாவன. அங்கு எல்லாமே தேவையான பகுதிகள்.

சான்று:

> *அவர் பிரதியுத்தரமாக: நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன். நிலம் உலகம்; நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர். களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர். அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு. அறுப்பு உலகத்தின் முடிவு. அறுக்கிறவர்கள் தேவதூதர்கள்.*
>
> *(மத். 13: 23-39)*

இங்கு எல்லாமே தேவையான விளக்கங்கள் அடங்கிய பகுதிகள். இவைபோல இல்லாமல் பழைய ஏற்பாட்டில் பரம்பரைப் பட்டியல் போன்ற பகுதிகளை விளக்க நடை சார்ந்தவையாகக்

கொள்ளலாம். ஒதுக்கிவிட்டு வாசிக்கக்கூடிய வாய்ப்பு உண்டு. இஸ்ரேல் மக்களின் பரம்பரைப் பட்டியல் போன்றவற்றை ஆய்வு நோக்கில் அணுகும் ஆய்வாளர் தேவை கருதி வரிக்கு வரி ஒன்றுவிடாமல் வாசித்துக் குறிப்பெடுக்கக் கூடும். ஆனால் மாறாகப் பொதுவான நிலையில் வாசிப்போர் ஒதுக்கிவிட்டு வாசிக்க வாய்ப்புண்டு.

3.9. வருணனை

வருணனை என்பது ஒரு நபரின் தோற்ற வருணனையாக அல்லது ஒரு சம்பவ வருணனையாக இருக்கலாம். மத்தேயு இயேசு நிகழ்த்திய இருபெரு அற்புதங்களைத் தெளிவாக விளக்குகிறார். இவ்விளக்கத்தில் எந்த விதமான பொருட் குழப்பமுமில்லை; கடினச் சொற்களுமில்லை.

வனாந்தரமான ஓரிடத்தில் இயேசுவிடம் திரளான ஜனங்கள் வந்து நோய்களையெல்லாம் குணமாக்கிக் கொள்கிறார்கள். அம்மக்களுக்குக் கொடுப்பதற்கு உணவு இல்லை. ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் மட்டுமே அவ்விடத்து இருக்க, அதைக் கொண்டு ஐயாயிரம் பேரைப் போஷிக்கிறார் இறைமகன் இயேசு. இச்சம்பவம் தெளிவாக வருணிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவ வருணனை விவரிப்பு நடைபோல முழுக்கமுழுக்கத் தேவையான பகுதியாக அமைகிறது.

> சாயங்காலமானபோது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து, இது வனாந்தரமான இடம், நேரமுமாயிற்று; ஜனங்கள் கிராமங்களுக்குப் போய்த் தங்களுக்குப் போஜன பதார்த்தங்களைக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிடவேண்டும் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி, 'நீங்களே அவர்களுக்குப் போஜனம் கொடுங்கள்' என்றார். அதற்கு அவர்கள் இங்கே எங்களிடத்தில் ஐந்து அப்பமும் இரண்டு மீன்களுமேயல்லாமல் வேறொன்றும் இல்லை என்றார்கள். அவைகளை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றார். அப்பொழுது அவர் ஜனங்களைப் புல்லின்மேல் பந்தியிருக்கக் கட்டளை யிட்டு அந்த ஐந்து அப்பங்களையும் அந்த இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணாந்து பார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப் பிட்டு சீஷர்களிடத்தில் கொடுத்தார். சீஷர்கள் ஜனங் களுக்குக் கொடுத்தார்கள். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடைநிறைய எடுத்தார்கள். ஸ்திரீகளும்

> பிள்ளைகளும் தவிர சாப்பிட்ட புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள். (மத். 14: 15-21)

இவ்வாறு படர்க்கையில் அமையும் இவ்வருணனை, நிகழ்ச்சியை உடனிருந்து பார்த்த நிச்சயத்தைத் தருவதாய், தெளிவாய்க் கூறவரும் கருத்தைப் புலப்படுத்துகிறது. இதே போலவே கலிலேயாக் கடலருகே ஒரு மலையில் இயேசு பலபேருக்குச் சுகமளித்த பின்னர் மூன்று நாட்களாகத் தம்முடன் தங்கிய அம்மக்கள் கூட்டத்திற்கு உணவளிக்கிறார். ஏழு அப்பங்கள் மற்றும் சில சிறு மீன்களைக் கொண்டு ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர நாலாயிரம் பேருக்குப் போஷிக்கிறார். மீதியான துணிக்கைகளை ஒரு கூடை நிறைய எடுக்கிறார்கள் (மத். 15: 32-38). இச்சம்பவமும் தெளிவாக வருணிக்கப்பட்டுள்ளது.

3.10. முன்குறிப்பு

இயேசு தான் சிலுவையில் அறையப்படப் போவது குறித்து முன்னமேயே குறிப்பாகப் பேசும் பகுதிகள், உலகில் பிற்காலத்து வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு நாட்கள் பற்றி இயேசு உரைக்கும் பகுதிகள் முதலியன இவ்வுத்தியின்பாற்படும்.

> யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்ததுபோல மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார் (மத். 12: 40)

என்பது தான் சிலுவையிலறையுண்டு பாடுபட்டு மரிக்கப் போவதை முன்னுரைக்கும் பகுதி.

மறுரூபமான இயேசு தன் சீடர்களுடன் பேசும்போது தான் பாடுபடப் போவதை விளக்குகிறார்.

> ஆனாலும் எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்: அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள். இவ்விதமாய் மனுஷகுமாரனும் அவர்களால் பாடுபடுவார். (மத். 17: 12)

மேலும் இயேசு கலிலேயாவிலே சஞ்சரிக்கும்போது,

> மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப் படுவார், அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள். அதிலும் மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் என்றார்
>
> (மத். 17: 22-23)

என்று தனது மீதான தேவ சித்தத்தைப் புலப்படுத்துகிறார்.

இதுபோலவே உலகத்தின் முடிவில் நீதிமான்களும் பொல்லாதவர்களும் தனித்தனியே பிரிக்கப்பட்டுப் பொல்லா தவர்கள் அக்கினிச் சூளையிலே போடப்படுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்ற வருகை குறித்த செய்தியும் சுட்டப்படுகிறது (மத். 13: 49-50).

இறுதி நாட்களில் நியாயத்தீர்ப்புக்கு முன்னர் உலகில் நிகழும் சம்பவங்களாக நானே கிறிஸ்து என்று சொல்லிப் பலர் வருதல், யுத்தங்கள் உலகில் நடத்தல், கலகம், பஞ்சம், கொள்ளை நோய், பூமியதிர்ச்சிகள், இயேசுவைப் பின்பற்றுவோர் கொலை செய்யப்படுதல், அத்தகையோரைப் பிறர் காட்டிக் கொடுத்தல், கள்ளத் தீர்க்கதரிசிகள் எழும்பி அநேகரை வஞ்சித்தல், அக்கிரமம் மிகுதியாதல், அன்பு தணிந்துபோதல் முதலியன சுட்டப்படு கின்றன (மத் 24: 4-12).

இத்தகைய வரவிருக்கும் சம்பவங்களைக் குறித்த முன் குறிப்புகள் சமயம் சார்ந்த உள்ளடக்கத்திற்குக் கூடுதல் மதிப்புச் சேர்க்கின்றன. ஏனெனில் இப்பகுதி வரவிருப்பதை உரைப்பதாய் அவ்வுள்ளடக்கத்தைப் பொறுத்து மனித மனத்தில் வியப்பையும், பிரமிப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்துகின்றன. விளைவாக, இது ‘புனித வேதம்’ என்ற மதிப்பை வாசகன் பெறுவதற்கு இவ்வுள்ளடக்கமும் இவ்வுத்தியும் வாய்ப்பாகின்றன.

3.11. நிலைமாற்றம்

“எண், பால், திணை முதலான இலக்கணக் கூறுகள் தமக்குரிய இயைபினைப் பெறாமல் மாறுபட்ட இயைபினைப் பெறும்பொழுது அங்கு நிலைமாற்றம் நிகழ்ந்திருக்கிறதெனலாம்”[5] என்பார் ஜெ. நீதிவாணன். உயர்திணையின் மேல் அஃறிணைப் பண்புகள் ஏற்றப்படுதல், பன்மைப் பெயர்கள் ஒருமை வினை கொண்டு முடிதல் முதலியன நிலைமாற்றத்தினுள் அடங்கும். இதுபோலவே அஃறிணையின் மேல் நிகழ்த்தும் ஒரு செயல் உயர்திணையின் மேல் நிகழ்த்தப்படும் ஒரு செயலைக் குறிக்க இடம்பெறுமானால் அதனையும் நிலைமாற்றம் எனலாம்.

> “என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப்
> பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்”
>
> (மத். 4: 19)

இங்கு மீன் பிடித்துக் கொண்டிருக்கும் சீமோன், அந்திரேயா ஆகியவர்களைப் பார்த்து உரை நிகழ்த்தப்படுகிறது. ‘மீனைப் பிடித்தல்’ என்ற செயல் அதைப்போலவே ‘மனுஷரைப் பிடித்தல்’ என்ற செயலுக்கு மாற்றம் பெறுகிறது.

முடிவுகள்

விவிலியத் தமிழில் தொடரமைப்பு முக்கியத்துவம் பெறுவது போலவே உத்திகளும் முக்கிய இடம் பெறுகின்றன. குறியீடு மூலம் விளக்குதல் ஒரு சிறந்த உத்தியாக அமைகிறது. ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பகுதி தவிரவும் விவிலியத்தில் இத்தகைய குறியீடுகளை ஆங்காங்கே காணலாம். ஒரு கருத்தை வேறுவகையில் நயம்படச் சொல்ல இவ்வுத்தி உதவுகிறது. மேய்ப்பன் - ஆடு என்ற குறியீடு தக்கவைக்கப்பட்ட குறியீடாகப் பயன்பாட்டில் அதிகம் அமைகிறது. குறியீட்டின்வழி 'இறைவனின் வழிநடத்தல்', 'மனிதனின் வினைக்கேற்ப நியாயத்தீர்ப்பில் தீர்ப்பு கிடைத்தல்' முதலிய இரண்டு செய்திகளும் திரும்பத்திரும்ப இடம்பெறுகின்றன. குறியீடும் ஒப்பீடும் உவமைக் கதைகளும் மிகவும் ஒத்த தன்மையுள்ள உத்திகளே. மனிதனின் பக்தி சார்ந்த பண்பு நிலைகளும், இறைவனைச் சார்வதால் வரும் பயன்களும் திரும்பத்திரும்ப அமையும் ஒப்பீடுகளாகின்றன. குறியீடும், ஒப்பீடும் எளிதில் பொருளைப் புலப்படுத்துகின்றன.

வரலாற்றுச் சம்பவங்கள், தீர்க்கதரிசனங்கள், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்ட உரைகள் முதலியவற்றைப் பின்னோக்கிப் பார்த்து, பின்னோக்கு என்ற வகையில் அவற்றைச் சேர்த்து எழுதுவதும் முன்குறிப்பு என்ற வகையில் வருவதை உரைப்பதும் 'சமய உள்ளடக்கம்' என்ற மதிப்பைத் தந்துவிடுகிறது. வாசிப்போர் மனதில் 'இது புனிதநூல்' என்ற உணர்வைத் தோற்றுவிக்கிறது.

மறைத்துச் சொல்லுதல் பொருள்புரிதலில் சிறிது குழப்பத்தை ஏற்படுத்துகிறது; இருந்தாலும் நின்று நிதானித்தால் பொருள் விளங்கிக் கொள்ளலாம். சொல்லாட்சி, தொடர் அமைப்பில் குழப்பம் முதலியன இதற்கான முக்கியக் காரணங்கள். பொது மொழிபெயர்ப்புத் திருவிவிலியம் எழுதப்பட்டுள்ள முறையால் இக்குழப்பத்தைத் தவிர்க்கிறது.

'கதை கூறல்' என்ற உத்தி உவமைக் கதைகளாக உவமையோடு ஒத்ததாய் அமைந்துள்ளது. பரலோக ராஜ்யத்திற்கு நிறைய உவமைக் கதைகள் சொல்லப்படுகின்றன. அத்தனையும் மனத்தில் தங்கும் வண்ணம் சொல்லப்பட்டுள்ளன. கதைச் சிறப்பாலும் சொல்லப்பட்டுள்ள முறையாலும் கேட்போரை ஈர்க்கின்றன.

உருவகம், உரையாடல், வருணனை, விளக்கநடை, விவரிப்பு நடை, நிலைமாற்றம் ஆகிய உத்திகளும் மேற் சுட்டப்பட்டவை கூடச் சேர்ந்து அமைந்து சொல்லும் முறைக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

குறிப்புகள்

1. தியோடர் வில்லியம்ஸ், செயல்படும் தேவன் முதலாம் பாகம், ப. 110.
2. திருவிவிலியம் பொது மொழிபெயர்ப்பு, புதிய ஏற்பாடு, ப. 23.
3. மா. இராமலிங்கம், புதிய உரைநடை, ப. 92.
4. ஜெ. நீதிவாணன், நடையியல், ப. 90.
5. மேலது, ப. 145.

4. கருத்தோட்டமும் மொழி அமைப்பும்

எந்த ஒரு படைப்பினையும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது அப்படைப்பின் முதலிலிருந்து இறுதிவரை அமையும் கருத்தோட்டம் எவ்வாறு அமைகிறது என ஆராய இடமுண்டு. ஒரு படைப்பின் கருத்தோட்டம் அல்லது கருத்து வளர்ச்சி அதன் ஒட்டுமொத்தக் கட்டமைப்பில் இன்றியமையாதது என்பதை இலக்கியத்தின் கட்டமைப்பு பற்றி ஆராயும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். வினிப்ரெட் நொவோட்னி, "கவிதையின் கட்டமைப்பினைக் கவிதையை முழுமையாக நினைத்துப் பார்த்தல், அதன் பகுதிகளை நினைத்துப் பார்த்தல் என்ற இருமுறைகளில் அணுகலாம்"[1] என்று விளக்குகிறார். லுபோமிர் டோலிஸெல் உரைநடைப் புனைகதை அமைப்பினைக் கணிக்கும்போது "அப்பகுதியின் கட்டமைப்பின் முக்கியத்தன்மை அப்பகுதியின் கூறுகள் அந்த நேரத் தொடர்ச்சியில் அமைந்திருக்கும் அமைப்பே"[2] என்று வளர்ச்சியினை, வரிசை அமைப்பினை விளக்குகிறார். இவ்வகையில் பார்த்தால் விவிலியம் வசன நடையில் அமைந்திருப்பதால் ஒவ்வொரு வசனமும் ஒரு தனிக்கருத்தை எடுத்துரைக்கும் கட்டாயத்திற்கு உள்ளாகிறது. இருந்தாலும் அவ்வசனங்களுக்குள்ளும் முன்பின் தொடர்பு இல்லாமல் இல்லை. ஒவ்வொரு அதிகாரத்துக்குள்ளும் ஓர் இயைபு இருக்கிறது. அவ்வியையைப் பொறுத்து வேண்டுமானால் ஓர் அதிகாரத்தையே சில பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளலாம்

விவிலியத்தில் ஓர் அதிகாரமோ அல்லது பல அதிகாரங்கள் அடங்கிய ஒரு நூல் முழுவதுமோ பலரால் விரும்பி வாசிக்கப்படுவதற்கும் பல பகுதிகள் அந்த அளவிற்கு விரும்பிப் படிக்கப்படாததற்கும் காரணங்கள் எவை என ஆராய்ந்தால் அதற்கு உள்ளடக்கமும் கருத்தோட்டமும் மொழி அமைப்பும் காரணங்களாக இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. விவிலியத்தின் கருத்தோட்ட வகைகளைப் பின்வருமாறு பிரித்துக் காண இடமுண்டு.

1. எளிமையான கருத்தோட்டமுடைய அமைப்பு
2. ஆர்வமூட்டும் கருத்தோட்டமுடைய அமைப்பு
3. எளிமையான கருத்தோட்டத்தினின்று மாறுபட்ட அமைப்பு

இம்மூவகைக் கருத்தோட்டத்திற்குப் பேசப்படும் கருத்தும் காரணமாக இருக்கலாம். சொல்லப்பட்டிருக்கும் முறையாகிய மொழி சார்ந்த கூறுகளும் காரணமாக இருக்கலாம்.

மேற்குறிப்பிட்ட அமைப்பில் இறை ஏவுதலால் பெற்றனவாகக் கிறித்தவர்களால் நம்பப்படும் திருமறை நூல்களின் கருத்தோட்டத்தைப் பிரிப்பதற்கு அவற்றின் உள்ளடக்கமும் உள்ளடக்கத்திற்கு இணையாக மொழி கையாளப்பட்டிருக்கும் பாங்கும் தவிர விவிலியத்தைப் படிப்போனின் விவிலிய அறிவும் முக்கியமான காரணங்களாக இருக்கக்கூடும். ஏனெனில் விவிலியத்தை அதுபற்றி அறியாத ஒரு பாமரனும் வாசிக்கலாம். திரும்பத் திரும்ப விவிலியத்தைப் படித்து வருகிற கிறித்தவனும் வாசிக்கலாம். எப்போதாவது விவிலியத்தை வாசிக்கிற கிறித்தவனும் வாசிக்கலாம். இருந்தாலும் சாதாரண வாசகனே இங்குக் கருத்தில் கொள்ளப்படுகிறான்.

4.1. எளிமையான கருத்தோட்டமுடைய அமைப்பு

ஓர் அதிகாரத்தை வாசிக்க ஆரம்பிக்கும்போது தங்கு தடையின்றி அவ்வதிகாரம் முழுவதும் வாசித்து முடிக்கும் வகையில் ஓர் அதிகாரம் அமைந்திருக்குமாயின் அப்பகுதி எளிமையான கருத்தோட்டமுடைய அமைப்பு எனலாம். இவ்வமைப்பில் சேர்க்கக் கூடிய பகுதிகளாகச் சங்கீதம், நீதி மொழிகள், பிரசங்கி, முதலிய நூல்களைக் குறிப்பிடலாம். மேலும் புதிய ஏற்பாட்டில் இயேசு பெருமான் மானுட வடிவில் வந்து இவ்வுலகில் வாழ்ந்ததைச் சித்திரிக்கும் பகுதியை உள்ளடக்கிய முதல் நான்கு நூல்களாகிய மத்தேயு, மார்க்கு, லூக்கா, யோவான் போன்றனவும் அடங்கும்.

சங்கீத புஸ்தகம் கடவுளைப் புகழ்தல், துதித்தல், அவருக்கு நன்றி செலுத்துதல், கடவுளை வழிபடுதல், நிலவுலகில் தனக்குத் தேவையான பாதுகாப்பு, மீட்பு, மன்னிப்பு முதலியவற்றை இறைவனிடம் வேண்டுதல் ஆகியவற்றை உள்ளடக்கியதால் மனித வாழ்க்கையோடு நேரடித் தொடர்புடையதாய் அமைகின்றது. நீதிமொழிகளின் புத்தகம் ஒழுக்கம், சமயம் குறித்த போதனைகளை எளிய சொற்களில் பழமொழிகள் கலந்து எடுத்துரைக்கிறது. பிரசங்கி மனித வாழ்வின் நிலையாமைத் தத்துவத்தை இறையியலோடு சேர்த்துக் காண்கிறது. இவ்வகையில் நீதி மொழிகள், பிரசங்கி ஆகிய நூல்களும் வாழ்வின் அங்கங் களாகின்றன. மத்தேயு முதலான நற்செய்தி நூல்கள் இறைமகன் இயேசுவின் போதனைகள், சுகமளிக்கும் செயல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதால் மிகவும் நேரடியாக மனித வாழ்க்கையோடு தொடர்புபடுகின்றன.

இப்புத்தகங்களில் சென்ற இயல்களில் சுட்டப்பட்ட சொல்லாட்சி முறை, தொடரமைப்பு முறை, உத்திகள் முதலியவை கவனமாகவும் பரவலாகவும் கையாளப்பட்டிருப்பதாலும் இவை எளிமையுடையனவாகி எப்போதும் வாசிக்கலாம் எனக் கருதப்படும் நூல்களாகின்றன. வாழ்க்கையோடு நேரடித் தொடர்பு என்ற உள்ளடக்கமும், கூறும் முறையில் எளிமை என்ற மொழிப்பயன்பாட்டு முறையும் ஒருங்கே அமைவதால் அடிக்கடி வாசிக்கப்படும் பகுதிகளாகவும், விரைவாக வாசிக்கப்படும் பகுதிகளாகவும், நூலின் தொடர்ச்சியில் கவனம் தேவை என்ற சிரமமின்றி எப்போது வேண்டுமானாலும் எந்தப் பகுதியும் வாசிக்கப்படலாம் என்ற பகுதிகளாகவும் அடிக்கடி ஆயர்களால் எடுத்தாளப்படும் வசனங்கள் அடங்கிய பகுதிகளாகவும் இந்நூல்கள் அமைகின்றன.

4.2. ஆர்வமூட்டும் கருத்தோட்டமுடைய அமைப்பு

ஒரு நூலை வாசிக்க ஆரம்பித்தால் அந்நூல் முழுவதும் சிறிது கால இடைவெளிக்குள்ளானாலும் வாசித்து முடித்துவிட வேண்டும் என்று ஆர்வமூட்டும் அமைப்புடைய பல நூல்கள் உள்ளன. இப்பகுதிகளில் சில முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் கதைகள் சொல்லப்படுவதுபோல நெடுகச் சொல்லப்பட்டிருக்கும். தேவனது ஆற்றலையும் மனித தோற்றத்தையும் இஸ்ரவேல் மக்கள் வரலாற்றையும் புலப்படுத்தும் **ஆதியாகமம்**, இஸ்ரவேல் மக்கள் அடிமை நிலையினின்று மீட்டெடுக்கப்பட்டு 40 ஆண்டுகள் வழி நடத்திச் செல்லப்படும் வரலாற்றை விவிரிக்கும் **யாத்திராகமம்** மற்றும் மோசேயின் பல்வேறு பணிகளை விவரிக்கும் **எண்ணாகமம்**, யோசுவா வாக்களிக்கப்பட்ட பூமிக்கு இஸ்ரவேல் மக்களை அழைத்துச் சென்று அம்மக்களுக்குப் பேருரை நிகழ்த்தி அவர்களை அங்குச் சேர்க்கும் **உபாகமம்**, ரூத் என்ற பெண்ணின் வாழ்க்கைப் புஸ்தகமான **ரூத்**, நியாயாதிபதிகளின் வரிசையில் இறுதியாக அமையும் சாமுவேல், எளிய நிலையிலிருந்து பேரரசாக உயர்த்தப்பட்ட தாவீது, தாவீது நிகழ்த்திய போர்கள், இஸ்ரவேலின் முதல் அரசர் சவுல் முதலானவர்களின் வாழ்க்கைச் சூழலை விவரிக்கும் **சாமுவேலின் புத்தகங்கள்**, பிறபகுதிகள் தவிர குறிப்பிடத்தக்கவையாகிய சாலமோன் எருசலேமில் கோவில் கட்டுதல், எலியா தீர்க்கதரிசியின் வாழ்க்கைச் சம்பவங்கள் முதலிய பகுதிகளடங்கிய **இராஜாக்கள் புஸ்தகப் பகுதிகள்**, ஒரு பெண் யூத மக்கள் பால் கொண்டிருந்த பேரன்பும் தம்மக்களுக்காகத் துணிவுடன் அவள் நிகழ்த்திய செயல்களை உள்ளடக்கிய **எஸ்தர் புத்தகம்**, நீதிமான் ஏன் தண்டிக்கப்படுகிறான் என்ற கேள்விக்கான வினா விடைகளை விவாதிக்கும் நூலான

யோபுவின் புத்தகம், நிலையான பக்தியைக் கொண்ட மக்களுக்கு இறைவன் சிறப்புச் செய்வார் என்பதை விளக்கும் **தானியேல் நூலின் முற்பகுதி**, நினிவே மக்களின் மனமாற்றத்தையும் கடவுள் மன்னிப்பையும் உள்ளடக்கிய **யோனாவின் புத்தகம்**, பவுலின் சுவிசேஷப் பணிகளைச் சித்திரிக்கும் **அப்போஸ்தலர் புத்தகம்**, கிறித்தவ வாழ்க்கை என்பது எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்துப் பவுல் **வெவ்வேறு சபையாருக்கு எழுதிய குறிப்புகள் அடங்கிய புத்தகங்கள்** மற்றும் **எஞ்சிய புதிய ஏற்பாட்டுப் பகுதி நூல்கள்** இவ்வகையில் அடங்கும். இந்நூல்களின் உள்ளடக்கம் அனைத்தும் **தேவனின் அதீத ஆற்றல், வரலாற்றுச் சம்பவங்கள், கடவுள் தெரிந்தெடுத்த மக்கள் வரலாறு, உண்மை பக்தர்களின் வாழ்க்கை வரலாறு, கிறித்தவ வாழ்க்கை நெறிமுறை சார்ந்த கோட்பாடுகள்** முதலிய செய்திகள் ஆவன. இவை கதைபோல சென்ற இயல்களில் சுட்டப்பட்ட மொழி அமைப்புகளை உள்ளடக்கிச் சொல்லப்பட்டிருப்பதால் மக்களுக்கு ஆர்வமூட்டுவனவாய் அமைந்து மீண்டும் மீண்டும் வாசிக்கப்படத் தக்கனவாய் அமைகின்றன. எனவேதான் ஆயர்களாலும் மீண்டும் மீண்டும் பேசப்படுவனவாயும் இப்பகுதிகள் அமைகின்றன. இங்கு உள்ளடக்கமும், மொழியும் முக்கியத்துவம் பெறுகின்றன.

4.3. எளிமையான கருத்தோட்டத்தினின்று மாறுபட்ட அமைப்பு

மேற்சுட்டப்பட்ட இரு அமைப்புகளில் குறிப்பிடப்பட்ட நூல்கள் தவிர பிற நூல்கள் பெரும்பாலும் பழங்கால மக்களின் வழிபாட்டுமுறை, ஆயர் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள், இஸ்ரேல் மக்களின் கணக்கெடுப்பு, இஸ்ரேல் மக்கள் வாழ்வு, இஸ்ரேல் மக்களின் அரசுரிமை வரலாறு, எருசலேமின் வீழ்ச்சி, போர்கள், பக்திப் பொருள் கொண்ட உன்னதப் பாடல்கள், தீர்க்கதரிசிகளின் காலத்தில் நடந்த சம்பவங்கள், மக்கள் அடிமைப்படுதல், மீண்டு வரல், மக்களின் பற்றுறுதி இன்மை, சிலை வழிபாடு, மீண்டும் பற்றுறுதி கொள்ளல், வழிதவறும் போது அவர்களுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கைகள் எருசலேம் பேரழிவு, மேசியா வருவார் என்ற எழுச்சியூட்டல் போன்றவற்றை விளக்குகின்றன. இவற்றுள் பழைய வரலாற்றுச் செய்திகள் கூறியது கூறலாகத் திரும்ப திரும்பப் பலரது நூல்களில் இடம்பெறும்போது படிக்கத் தூண்டுவனவாக அமையாமல் எளிய கருத்தோட்டம் அற்றனவாய் அமைந்துவிட வாய்ப்பாக அமைகின்றன. எனவே தெரிந்து கொள்ளப்பட்ட உள்ளடக்கங்கள் தேவையானவையே எனினும் முந்திய இரு அமைப்புகளில் போலவன்றி மிகவும் செறிவுபட கருத்து, சம்பவம் முதலியன பயின்று வரும்

முறையிலும் முன் சுட்டப்பட்ட மொழிக்கூறுகளில் அதிக கவனமின்றியும் சொல்லப்பட்டிருப்பதாலும் இத்தகைய கருத்தோட்டம் அமைந்துவிடுகிறது எனலாம்.

எவ்வாறாயினும் இம்மூன்று அமைப்புகளிலும் அமையும் சிறிது சிறிதான வேறுபாடுகளின் விளைவு படைப்பின் கருத்தோட்டத்தைப் பாதிக்கிறது; ஆய்வு மேற்கொள்வோர் மற்றும் குருத்துவப் பணியாளர்கள் போன்றோரால் ஒரு வேளை எல்லா நூல்களும் சமமாகவே அணுகப்பட்டுக் கருத்துகள் சேகரிக்கப்பட்டாலும் திருச்சபை மக்களின் கண்ணோட்டத்திலும் சாதாரண வாசகர்கள் கண்ணோட்டத்திலும் குறிப்பிட்ட நூல்கள் மட்டுமே திரும்பத்திரும்ப அணுகப்படுதலுக்கான காரணங்களில் அவற்றில் அமையும் கருத்தும் மொழியும் ஒரு சேர பாதிக்கும் கருத்தோட்டம் ஒன்று எனக் கருத இடமுண்டு.

இலண்டன் மாநகரில் காந்தியடிகள் இருந்தபோது, தான் பைபிள் வாசித்த அனுபவத்தைத் தன் சத்தியசோதனையில் எழுதுகிறார். "மான்செஸ்டரிலிருந்து வந்த ஓர் உத்தமமான கிறித்துவர்...... பைபிள் பிரதி ஒன்று வாங்கித் தந்தார். அதைப் படிக்க ஆரம்பித்தேன். ஆனால் பழைய ஏற்பாட்டைப் படித்துப் புரிந்து கொள்ள என்னால் இயலவில்லை. ஆதி ஆகமத்தையும் அதை யடுத்த அத்தியாயங்களையும் படிக்க ஆரம்பித்ததுமே எனக்குத் தூக்கம் வந்துவிடும். ஆனால் பைபிளைப் படித்திருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ள இயல வேண்டும் என்பதற்காகச் சிரமத்தோடேயே மற்றப் பகுதிகளையும் மேலெழுந்தவாரியாகப் படித்து முடித்தேன். அதில் எனக்குக் கொஞ்சமும் சிரத்தை ஏற்படவில்லை. எனக்கு அது விளங்கவும் இல்லை. எண்ணாகமம் என்ற பகுதியைப் படிப்பதற்கே எனக்கு வெறுப்பாக இருந்தது. ஆனால் புதிய ஏற்பாட்டைப் படித்தபோது எனக்கு முற்றும் மாறான உணர்ச்சி ஏற்பட்டது. முக்கியமாக மலைப் பிரசங்கம் நேரடியாகவே என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. அதைக் கீதையுடன் ஒப்பிட்டுப் பார்த்தேன். தீமைக்குப் பதிலாகத் தீமையைச் செய்யாதே என்று உங்களுக்குக் கூறுகிறேன். உன்னை வலது கன்னத்தில் யாராவது அறைந்தால் மற்றொரு கன்னத்தையும் திருப்பிக்காட்டு. எவனாவது உன் சட்டையை எடுத்துக் கொண்டு விட்டானாயின் உன் போர்வையையும் அவனுக்குக் கொடு என்பன போன்ற உபதேசங்கள் எனக்கு அளவு கடந்த ஆனந்தத்தை அளித்தன"[3] என்று காந்தி தான் பைபிள் வாசிக்கத் தொடங்கிய அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறார். பைபிளைப் பொறுத்த வரை காந்தியடிகள் வாசிக்கத் தொடங்கிய காலம் அவரது

இளவயதாய் இருந்திருக்கலாம்; வாசித்ததும் ஆங்கில விவிலியமாய் இருந்திருக்கும். மேலும் அவர் இவ்வகையில் ஓர் பாமர வாசகன்தான். எனவேதான் கிறித்தவ வாசகனுக்கு ஆர்வமூட்டும் பகுதியான எண்ணாகமம் காந்தியடிகளுக்கு வெறுப்பாக அமைகிறது. "எண்ணிக்கை என்னும் இத்திருநூல் இஸ்ரவேலரின் வரலாற்றில் அவர்கள் சீனாய் மலையை விட்டுப் புறப்பட்டு வாக்களிக்கப்பட்ட நாட்டின் கிழக்கு எல்லையை அடைந்தது வரை நாற்பது ஆண்டுகளாக நிகழ்ந்தவற்றின் தொகுப்பு ஆகும். சீனாய் மலையினின்று புறப்படும் முன்னும் யோர்தானுக்குக் கிழக்கே மோவாபில் ஒரு தலைமுறை கடந்தபின்னும் மோசே செய்த கணக்கெடுப்பின் காரணமாக இந்நூல் இப்பெயரைப் பெறுகிறது"[4] என்று எண்ணாகமத்தின் உள்ளடக்கத்தைப் பொது மொழிபெயர்ப்புத் திருவிவிலியம் சுட்டுகிறது. ஆழ்ந்த பற்றுறுதி மிக்க கிறித்தவ மக்கள் மற்றும் விவிலியத்தைத் திரும்பத் திரும்ப வாசித்திருக்கிற கிறித்தவ மக்களின் கணிப்பில் விவிலியத்தில் இடம்பெறும் எல்லா நூல்களுமே எளிய கருத்தோட்ட முடையனவாகவும் சிறப்பானவைகளாகவும் இருக்கலாம். அது அவர்களின் பயிற்சியின் விளைவு. ஆனால் பொதுவான சராசரி கிறித்துவ மக்கள் பெரும்பாலானோரின் அணுகுமுறை அடிப்படையிலும் பாமர வாசகனின் அடிப்படையிலும் விவிலியத் தமிழ் மொழி அமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது? அது எவ்வாறு கருத்தோட்டத்திற்கு உதவுகின்றது? என்று காணும்போது இவ்வியலில் சுட்டப்பட்டுள்ள மூன்று வகைக் கருத்தோட்டங்களைக் கண்டறிய முடிகிறது. காந்தியடிகளின் கருத்துப்படி, புதிய ஏற்பாட்டுப் பகுதி பற்றியும் குறிப்பாக (மத்தேயு நூலில் அமையும்) இயேசுவின் மலைப் பிரசங்கம் பற்றியும் சுட்டப்பட்டுள்ள கருத்துகள் இவ்வகைக் கருத்தோட்ட வகைப்பாட்டோடு ஒப்பு நோக்கத்தக்கனவாய் அமைகின்றன.

கடினமான சொற்கள், சொற்றொடர்கள், மறைத்துச் சொல்லும் உத்தி முதலிய அனைத்தும் பொருள் விளங்காத் தன்மைக்கும் எளிமையினின்றும் மாறுபட்ட கருத்தோட்டத் திற்கும் வழிவகுக்கின்றன. இச்சிக்கல்களைப் பொது மொழி பெயர்ப்புத் திருவிவிலியம் கடினச்சொற்களை எளிமைப்படுத்தி விளக்கி எழுதுதல், கடினமான பொருட்குழப்ப தொடர்களைப் பிரித்தும் விளக்கி எளிமைப்படுத்தி எழுதுதல், அதிகாரங்களின் உள்ளடக்கத்தினைப் பொருளடிப்படையில் பிரித்துக் கொண்டு பக்கத் தலைப்பிட்டு எழுதுதல், ஒவ்வோர் நூலின் முன்னும் அந்நூலின் செய்திகள் பற்றி முன்னுரை தருதல் போன்ற வழிமுறைகளைக் கையாண்டு நீக்கிவிடுகிறது. பொது மொழிபெயர்ப்புத் திருவிவிலியம் சொற்களை மாற்றிப்

பயன்படுத்தியிருப்பதில் பல குறைகள் உள்ளன என்று சுட்டுகிறார். மறைத்திரு பி.கே. ஜார்ஜ் சே.ச., அவர்கள். சான்றாக 'சமாதானம்' என்பதற்குப் பதில் அமைதி என்ற சொற்பயன்பாடு பொருந்தாததையும்[5] விசுவாசம் என்ற சொல்லுக்குப் பதில் நம்பிக்கை என்ற சொற்பயன்பாடு பொருந்தாததையும்[6] அவர் சுட்டுவதைக் குறிப்பிடலாம். திரு. பி.கே. ஜார்ஜ் அவர்கள் குறிப்பிடுவது போல சொற்பயன்பாட்டில் குறிப்பிட்ட மாற்றங்கள் இருப்பினும், கடினமான சொற்கள் இடம்பெறும் பகுதிகளில் விளக்கி எழுதிக் குறிப்பாக அத்தகைய இடங்களில் கருத்தோட்டம் சிறப்பதற்குப் பொது விவிலிய மொழிநடை பெரிதும் உதவுகிறது என்பதில் ஐயமில்லை.

குறிப்புகள்

1. Winiford Nowottny, **The Language Poets Use,** p. 74.
2. Lubomir Dolezel, **Literary Style : A Symposium,** p. 95.
3. *காந்தியடிகள், **சத்தியசோதனை,** ரா. வேங்கடராஜி, (மொ.பெ.), பக். 69-70.*
4. *பொது மொழிபெயர்ப்புத் திருவிவிலியம், பழைய ஏற்பாடு, ப. 196.*
5. *பி.கே. ஜார்ஜ், சே.ச.,* **பொதுவிவிலியத்தின் மறுபக்கம், ஒரு விமரிசனம்,** *பக். 45-46.*
6. *மேலது, பக். 55-59.*

ஆய்வு முடிவுகள்

சமயத்தைப் பரப்பும் நோக்கில் வந்த மேனாட்டுக் கிறித்தவப் பாதிரிமார்கள் முதலில் தமிழ்மொழியைக் கற்று, பின்னர் தமிழிலேயே தம் மதத்தைப் பரப்பினர். செய்யுள் தமிழை உரைநடைத் தமிழாக மாற்றிப் புதிய போக்கினை ஏற்படுத்தினர். அச்சகங்களை நிறுவித் தம் மதக் கருத்துகளை நூல்களாகவும் துண்டுப் பிரசுரங்களாகவும் கொடுத்து மக்களை ஈர்த்தனர். இச்சூழலில் அவர்களுக்கும் கிறித்தவர்களின் புனித வேதமாகக் கருதப்படும் பைபிளைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவ்வாறு தமிழில் மொழிபெயர்க்கப் பட்ட விவிலியங்களுள் தென்னிந்தியத் திருச்சபைப் பிரிவில் புராட்டஸ்டன்ட் பிரிவினர் பயன்படுத்தும் வேதாகமம் கருத்துப் பரிமாற்றத்தில் பேச்சுச் செயலை உள்ளடக்கி எவ்வாறு வெற்றி சிறந்துள்ளது என்று ஆய்ந்தால் இப்பிரிவினர் பயன்படுத்தும் இவ்விவிலியம் பேச எடுத்துக் கொள்ளும் கருத்து, வடிவம், கூறுவோர், கேட்போர், சூழல், தொடர்பு, மொழி, ஒட்டுமொத்தம் ஆகிய கூறுகளுக்கிடையே ஓர் இயைபைக் கொண்டிருப்பது புலனாகிறது. தமிழ் விவிலியத்தின் வசனநடை பிற்காலத்தில் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது என்ற கூற்றிற்கிணங்க மொழிபெயர்க்கப்பட்ட போதே விவிலியத்தின் தமிழ் மொழி நடை வசனநடைக்கு ஆக்கம் தருகின்ற பல குறிப்பிடத்தக்க கூறுகளை உள்ளடக்கி விளங்குவதாய் அமைந்துள்ளது. இவ் வகையில் தமிழ் விவிலியத்தின் மொழி அமைப்பு 'சொல்லாட்சி', 'தொடர்', 'உத்திகள்', 'கருத்தோட்டம்' என்ற நான்கு நிலைகளில் எண்ணிப் பார்க்கப்பட ஏதுவாகிறது.

விவிலியத்தை மொழிபெயர்க்கும் பணி ஓர் அரிய பணி. ஏனெனில் விவிலியம் பல புத்தகங்களை உள்ளடக்கிய ஒரு மிகப் பெரிய நூல். அதிக அளவிலான பக்கங்களைக் கொண்டது. இவ்வளவு பெரிய நூலினை ஒதுக்கப்பட்ட ஒரு காலத்திற்குள் மொழிபெயர்க்கும்போது மொழிபெயர்ப்போர் அந்நூலில் மொழிப் பயன்பாடு குறித்த கவனத்தை விட கருத்தைச் சொல்லி விடுதலில் மிகுதியாக ஆர்வம் காட்டுவது இயல்பே. இருப்பினும் கருத்துக்கு மட்டுமின்றி மொழிக்கும் முக்கியத்துவம்

கொடுத்திருக்கின்றனர் என்பதனைப் பல பகுதிகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

விவிலியம் கடவுளின் பிரசன்னத்தை உணரவும் உணர்ந்ததை மனிதன் நடவடிக்கைகளில் காட்டவும் இயேசுவின் நற்செய்தியில் மனம் இயைந்து உறுதிப்பாட்டுடன் வாழ்ந்து காட்டுவதற்கும் வழிவகுக்கும் ஒருநூல். இவ்வுள்ளடக்கத்தைத் தங்களது சொந்த அதிகாரத்திலல்லாமல் தங்களை அனுப்பிய கடவுளின் அதிகாரத்தின்படி அறிவிக்கும் தோரணையில் பல்வேறு நூலாசிரியர்கள் இந்நூலினுள் அடங்கும் பல்வேறு நூல்களில் எடுத்துரைக்கின்றனர். இவ்வெடுத்துரைத்தலில் சொற்கள், தொடர்கள், பல்வேறு உத்திகள் முதலியவற்றைச் சரியாகப் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளனர். ஒரு மிகப் பெரிய நூலின் மொழிபெயர்ப்பில் இந்த அளவிற்குக் கவனமான மொழிப் பயன்பாடு அமைந்திருப்பது வியப்பிற்குரியது. இத்தகைய அமைப்பில் அங்கிங்கெனச் சில பகுதிகள் தவிர விவிலியம் முழுவதும் எளிமையான கருத்தோட்டமே அமைகிறது.

கடவுள், சாத்தான் ஆகிய எதிர்சக்திகள், மற்றும் பல பெயர்களைக் குறிப்பதற்கு அடைமொழிகளாலும் சில பின்னொட்டுகளாலும் 'ஆன', 'ஆகிய', 'இருக்கிற' போன்ற இடைச் சொற்கள், எச்சச்சொற்களாலும் விரித்துக் கூறும் முறை காணப் படுகிறது. 'சுருக்கமாக உரைத்தல், 'விரித்துரைத்தல்' என்ற இரு நிலைகளைப் பெயர்ச்சொற்கள் காட்டுகின்றன. இவ்வாறு விரித்துரைப்பது ஒரே மாதிரியாகவே சொல்லும் போக்கிலிருந்து மாறுபாட்டினைக் கொண்டு வர உதவுகிறது. வடசொற்கள் இக்குறிப்பிட்ட வேதாகமத்தில் அளவிறந்து பயன்படுத்தப் பட்டுள்ளன. ஆனாலும் இவை எவ்வகையிலும் கிறித்தவ மக்களுக்கு (வாசகர்களுக்கு) வாசிப்பில் எவ்விதத்தடையையும் ஏற்படுத்தாத அளவிற்கு இச்சொற்கள் பொதுவாகக் கிறித்தவ மத போதனைகளிலும் நற்செய்திப் பணிகளிலும் இரண்டறக் கலந்துள்ளன. பொது மொழிபெயர்ப்புத் திருவிவிலியம் இத்தகைய சொற்களைத் தமிழ்ப்படுத்திக் கையாளுகிறது. 'கிறித்தவ மரபுச் சொற்கள்' இவை என்று சொல்லுமளவிற்குப் பல குறிப்பிட்ட சொற்கள் கிறித்தவ வழக்கில் காணப்படுகின்றன. ஜெபம், இரட்சிப்பு, பாவமன்னிப்பு போன்ற பல சான்றுகள் இவ்வகையில் குறிக்கப்படலாம். இச்சொற்கள் விவிலியம் முழுதும் இடம்பெற்றிருப்பதும் அதனால் பின்னாளில் கிறித்தவ மக்கள் வழக்கில் இவை இடம்பெற்றிருப்பதும் இவ்விவிலியச் சொற்கள் கிறித்தவ மக்களிடம் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தையே

காட்டுகின்றன. வழக்கில் தக்க வைத்துக் கொள்ளப்பட்ட சொற்களாகவும் 'கிறித்தவ மத போதனைச் செய்தி' என்று இனங்காணப்பட உதவும் சொற்களாகவும் இவை அமைகின்றன. விவிலியத் தமிழில் இத்தகைய மரபுச் சொற்களின் பங்கு கணிசமானது. இம் மரபுச் சொற்களுள் பல வடசொற்களும் அடங்கும் எனினும் இவை தக்கவைக்கப்பட்டிருப்பது புராட்டஸ்டன்ட் கிறித்தவர்கள் சொல்லைவிடக் கருத்துக்கு முதன்மை கொடுக்கும் போக்கையும் விவிலியத்தில் இடம்பெற்றிருப்பதால் வடசொல்லாயினும் தமிழ்ச் சொல்லுக்கு இணையாகக் கருதும்போக்கையும் கொண்டிருப்பதைப் புலப்படுத்துகிறது.

பொதுவாக உரைநடை அமைப்பில் செந்தமிழிலும் அல்லாமல் பல்வகை மொழிக் கலப்பினையும் பயன்படுத்தாமல் இயல்பான மொழியில் எளிய நடையில் அமைவதனைக் கட்டுரை இயல்பு மொழி என்போம். இத்தகைய நடையில் சொல் ஜாலங்களோ பிறமொழிச் சொற்களோ ஓரிரு இடங்களில் இருக்கலாம். ஆனால் பெரிதும் மொழிக் கலப்பின்மையும் எளிமையான முறையான தொடரமைப்புகளும் இருக்கும். இத்தகைய இயல்பிலிருந்து சிறிது மாற்றிக் கொண்டு இது 'சமயம் சார்ந்த உள்ளடக்கம்' என்று புலப்படுத்தச் சிலவழிமுறைகள் கையாளப்படுகின்றன. இவ்வகையில் சுட்டுச்சொற்கள், எதிர்மறைச் சொற்கள், முரண் சொற்கள், அடுக்குச் சொற்கள், ஒலிக்குறிப்புச் சொற்கள் முதலியன பயன்படுத்தப்படுகின்றன.

சுட்டுச் சொற்கள் சில முக்கியச் சம்பவங்களையோ முக்கியக் கருத்துகளையோ முக்கியக் கூற்றுக்களையோ காட்டும் முன்னர் அல்லது கூறும் முன்னர் காட்சிப்படுத்துவது போல, 'இதோ' என்று சுட்டிச் சொல்லி, தொடரில் ஆரம்பமாகின்றன. இது வழக்கத்திலிருந்து மாறுபட்ட அமைப்பாக அமைகிறது. எதிர்மறைச் சொற்களும் முரண்சொற்களும் சொல்லவரும் உடன்பாட்டுக் கருத்தை எதிர்ச்சொற்களின் வழி வேறு வழியில் சொல்லி எளிதில் விளங்கிக் கொள்ள உதவுகின்றன. 'அய்யோ' என்ற ஒலிக்குறிப்புச் சொல் கடவுளுக்கு எதிராக நடக்கின்றவர்களுக்கு விளையப் போகும் அவலத்தைச் சுட்ட இரக்கப் பொருளில் கையாளப்படுகிறது.

தகுந்த இடத்தில் தகுந்த சொற்பயன்பாடு விவிலியத் தமிழுக்குச் சிறப்புச் சேர்க்கும் ஒன்று. பல்வேறு வகையான சொற்கள் - அடைமொழிகள், குறிப்பாக, குறியீடு, ஒப்பீடு ஆகிய உத்திகள் சார்ந்து பயன்படுத்தப்படும் சொற்கள் இவ்வகையின.

கடின சொற்கள் மற்றும் அவற்றால் ஆக்கப்படும் தொடர்கள் சாதாரண வாசகனுக்குப் பொருள் தெரிவிப்பில் - புரிதலில் இடர்ப்பாடு விளைவிக்கிறது.

பெரிய நூல் - குறிப்பிட்ட காலத்திற்குள் மொழி பெயர்க்கப்படும் மொழிபெயர்ப்பு என்பதாலோ என்னவோ மிகச் சிற்சில விடங்களில் வேற்றுமை உருபு மயக்கம், ஒருமை பன்மை மயக்கம் இடம்பெறுகின்றதைக் காண இயலுகிறது.

பேச்சுமொழி சார்ந்த சொற்கள் அதிகம் கலக்கப்பட்டு ஒரு விதக் கொச்சை மொழி நிலைக்குத் தள்ளப்பட்டு விழும் அபாயம் விவிலியத்தமிழில் சற்றும் இல்லாதது மொழி பெயர்ப்பாளர்கள் கவனமாக மேற்கொண்டுள்ள ஒரு முயற்சி மட்டுமன்று, மிகவும் பாராட்டக்கூடிய அமைப்பும் ஆகும்.

விவிலியத்தமிழில் தொடரமைப்புகள், கூற்று நிகழ்த்துவோன், கேட்போர், செய்தி முதலிய கூறுகளோடு மிகுதியும் தொடர்புடையனவாய் அமைவது குறிப்பிடத்தக்கது. விவிலியத் தமிழில் எளிமை காணப்படுகிறது என்றால் அதற்குக் காரணம் தனி வாக்கியங்களாகிய எளிய சொற்றொடர்களே. கேட்போரைக் கருத்தில்கொண்டு உடன்பாட்டு நோக்கில் சொல்லும் இவ் வாக்கியங்கள் விவிலியம் முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளன. 'ஆன்மீக நெறி', 'இறைவன்' ஆகிய இரண்டனுக்கும் எதிரான கருத்துகளைப் புலப்படுத்தும் இடங்களில் எதிர்மறைத் தொடர்கள் கைகொடுக்கின்றன. இறைவனது அருள், மனிதனது தவறுகள் முதலியவற்றின் தொடர்ச்சியைக் காட்ட 'உம்', 'ஏ' ஆகிய இடைச்சொற்களால் இணைக்கப்பட்ட தொடர்கள் விவிலியத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. ஒப்புமைத் தொடர்கள் இறைவன், மனிதன் ஆகியோர் தன்மைகளை உவமித்துச் சொல்லப் பெரிதும் உதவுகின்றன. கேட்போரைக் கருத்தில் கொள்வதால் அவர்களைத் தக்க வைப்பதற்கென விவிலியத் தமிழில் விளித் தொடர்கள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. நகரங்களை விளிக்கும் முறையும் உண்டு. பல்வேறிடங்களில் நகரங்கள் அந்நகரங்களில் வசிக்கும் மக்களுக்கு ஆகிவந்து விவிலியத்தை வாசிப்பவரின் நினைவில் அப்பகுதியைப் பதிப்பதும் உண்டு. இவ்விளிச் சொற்களும் தகுந்த சொற்களாக நபருக்கேற்றவாறும் இடத்திற்கேற்றவாறும் தெரிந்தெடுத்துப் போடப்பட்டுள்ளன. வினாத் தொடர், அதிகார அறிவிப்புத் தொடர், ஆணைத் தொடர், அனுமதிவினைத்தொடர் முதலியன சமய செய்தியைச் சொல்வதற்காகத் தெரிந்தெடுத்துப் பயன்

படுத்தப்பட்டிருப்பதால் கேட்போனாகிய பக்தனை வியப்பிற்கும் பாதிப்பிற்கும் உட்படுத்துகின்றன. கடவுளிடம் மனிதன் வேண்டுவதும் கடவுள் அருள்வதும் இத்தகைய உள்ளடக்கத்தில் இயல்பு என்பதால் அவ்விடங்களில் முறையே வேண்டல், விதித்தல் தொடர்பான பொருள் உடைய வியங்கோள் தொடர்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது சிறப்புடைத்து. இதற்குச் சங்கீத புத்தகம் சான்று ஆகும். மேற்குறிப்பிட்ட தொடர்கள் தவிரப் பிறதொடரமைப்புகள் குறைவாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன.

விவிலியத் தமிழில் தொடரமைப்பு முக்கியத்துவம் பெறுவது போலவே, உத்திகளும் முக்கிய இடம்பெறுகின்றன. இவ்வகையில் குறியீடு, ஒப்பீடு, கதை கூறல் ஆகிய மூன்றும் முதலிடம் பெறுகின்றன. 'மேய்ப்பன் - ஆடு', 'நிலம் - விதை விதைத்தல் - விளைவு - அறுவடை' என்ற குறியீடுகள் பல முறை இடம்பெறுகின்றன. குறியீடுகளின் வழி, பேசப்படும் செய்திகளில் 'இறைவனின் வழிநடத்தல்' மனிதனின் மனந்திரும்பலுக்கேற்ப நியாயத் தீர்ப்பு நாளில் தீர்ப்பு கிடைத்தல் முதலியன திரும்பத் திரும்ப இடம்பெறுகின்றன. ஒப்பீட்டின் வழி மனிதனின் பக்தி சார்ந்த பண்பு நலன்களும், இறைவனைச் சார்வதால் வரும் பயன்களும் பெரிதும் பேசப்படுகின்றன. 'கதை கூறல்' என்ற உத்தி உவமைக் கதைகளால் அமைகின்றது. குறிப்பாக, பரலோக ராஜ்யத்தின் தன்மைகளையும் அதற்காக ஆயத்தப்படுதலையும் குறித்த கதைகளே அநேகமாக மத்தேயு அதிகாரத்தில் இடம் பெறுகின்றன. இதன் விளைவாக 'இரட்சிப்பு' என்ற சொல் பரலோக ராஜ்யத்தில் பிரவேசித்தல் என்ற பொருளைச் சுட்டுகிறது. இவ்வுலக வாழ்வைப் பற்றிக் குறைவாகவும் மறுவுலக வாழ்வைப் பற்றி அதிகமாகவும் பேசுகிற நிலையை இவ்வுள்ளடக்கம் தருகிறது. அத்தனை கதைகளும் மனத்தில் தங்கும் வண்ணம் சொல்லப்பட்டுள்ளன. கதைச் சிறப்பு, சொல்லப்பட்டுள்ள முறை இரண்டுமே முக்கியத்துவமுடையனவாகின்றன.

மேற்சுட்டப்பட்ட உத்திகள் தவிர உருவகம், உரையாடல், வருணனை, விளக்கநடை, விவரிப்பு நடை, நிலைமாற்றம் ஆகிய உத்திகளும் அமைந்துள்ளன.

முன்பு நடந்த சம்பவங்கள், தீர்க்கதரிசனங்கள், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டவை முதலியனவும் தற்கால நிகழ்சம்பவங்களோடு இயைத்து எழுதப்படுகின்றன. இவ்வுத்தி சமய உள்ளடக்கம் என்ற மதிப்பைத் தருவதுடன் இது ஒரு புனிதநூல் என்ற உணர்வையும் வாசகனுக்குத் தருகிறது.

'மறைத்துச் சொல்லுதல்' பொருள் புரிதலில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது; என்றாலும் நின்று நிதானித்து சிந்தித்தால் பொருள் விளங்குகிறது. சொல்லாட்சி, தொடரமைப்பில் தெளிவின்மையே இதற்கான முக்கியக் காரணங்களாகின்றன. பொது மொழிபெயர்ப்புத் திருவிவிலியத்தில் இச்சிக்கல் விளக்கமாக எழுதப்படுவதன் மூலமும் ஓர் அதிகாரத்தையே பக்கத் தலைப்புகளிட்டுப் பிரித்து எழுதுவதன் மூலமும் தவிர்க்கப் பட்டுள்ளது.

விவிலியத்தில் அமையும் கருத்தோட்டத்தினை எளிமையான கருத்தோட்ட அமைப்பு, ஆர்வமூட்டும் கருத்தோட்ட அமைப்பு, எளிமையான கருத்தோட்டத்தினின்று மாறுபட்ட அமைப்பு என்று மூவகையாக, வகைப்படுத்திப் பார்க்க இயலுகிறது. எளிய மற்றும் ஆர்வமூட்டும் கருத்தோட்டத்தின் காரணமாகவே விவிலியத்தில் பல பகுதிகள் திரும்பத் திரும்பப் படிக்கவும் எடுத்துரைக்கவும் படுகின்றன; எளிய கருத்தோட்டத்தினின்று மாறுபட்ட அமைப்புடைய சில பகுதிகள் அதிகம் பேசப்படாமலும் அமைகின்றன.

குறிப்பிட்ட காலத்திற்குள் விவிலியத்தினை (பெரிய நூலினை) மொழிபெயர்க்கும்போது அதில் கூறப்படும் கருத்திற்கேற்ப மொழிப் பயன்பாட்டின் மீது மிகுந்த அக்கறையும் கவனமும் கொண்டு படைத்திருப்பது பாராட்டற்குரியது; வியப்பிற்குரியது. மிகச் சில குறைபாடுகள் இருப்பினும் அவையும் பொதுமொழிபெயர்ப்பு வழிக் களையப்பட்டுள்ளன. அதன் பிறகும் சில குறைபாடுகள் இருக்கின்றன. எனினும் எதிர்காலத்தில் அவை தக்கோர் முயற்சியின் வழி, களையப்படக்கூடும் என்று நம்ப இடமுண்டு.

துணைநூற் பட்டியல்

தமிழ் நூல்கள்

1. அரங்கநாதன், தி., மற்றும் வாசுதேவன், கா., **தமிழ் இலக்கிய வரலாறு – ஒரு புதுப்பார்வை**, தேவன் பதிப்பகம், திருச்சி, முதற்பதிப்பு, பிப். 1999.

2. இசரயேல், மோ., **இலக்கண ஆய்வு – வினைச்சொல்**, மதுரை பப்ளிஷிங் ஹவுஸ், மதுரை, முதற்பதிப்பு, மே, 1976.

3. இராமலிங்கம், மா., **புதிய உரைநடை**, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, மூன்றாம் பதிப்பு, ஆகஸ்ட், 1984.

4. எஸ்தர் நான்சிபியூலா, த., **தமிழில் விவிலிய மொழி பெயர்ப்புகள் – ஓர் ஒப்பாய்வு**, சேவியர் பதிப்பகம், மதுரை, முதற்பதிப்பு, 2002.

5. சிரோமணி, எஸ்.ஏ., **ஜலத்தினால் ஞானஸ்நானம்**, ஜீவவிருட்சம் வெளியீடு, திருச்சி, (வருடம் பற்றிய குறிப்பு நூலில் தரப்படவில்லை).

6. ஜவஹர் சாமுவேல், ஏ., பரிசுத்த **ஆவியானவரை அறிந்து கொள்ளுங்கள்**, இயேசுவின் அன்பின் ஊழிய வெளியீடு, கோவை, மே 1995.

7. ஜார்ஜ், பி.கே., சே.ச., **பொதுவிவிலியத்தின் மறுபக்கம் ஒரு விமரிசனம்**, (பதிப்பகம், வெளியிட்ட ஆண்டு பற்றிய குறிப்புகள் நூலில் இல்லை)

8. தியோடர் வில்லியம்ஸ், **செயல்படும் தேவன்** (முதலாம் பாகம்) அருட்பணி வெளியீடுகள், பெங்களூர், முதற்பதிப்பு 1990.

9. ------------------, **செயல்படும் தேவன்** (இரண்டாம் பதிப்பு) அருட்பணி வெளியீடுகள், பெங்களூர், முதற்பதிப்பு 1991.

10. தியோடர் வில்லியம்ஸ், **செயல்படும் தேவன்** (மூன்றாம் பாகம்) அருட்பணி வெளியீடுகள், பெங்களூர், முதற்பதிப்பு 1992.

11. ------------------, **சிலுவை தியானங்கள்,** திருமறைப் போதனை ஊழியங்கள், சேலையூர், சென்னை - 73, இரண்டாம் பதிப்பு, 1999.

12. நீதிவாணன், ஜெ., **நடையியல்,** தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் நினைவு அறக்கட்டளை வெளியீடு, மதுரை, மூன்றாம் பதிப்பு, 2001.

13. பாக்கியராஜ் (மொ.பெ.),**பள்ளத்தாக்கின் நீருற்றுகள்,** கவ்மேன் பப்ளிகேஷன்ஸ், அமெரிக்கா, ஜுன் 1992.

14. பெஞ்சமின் ஞானமாணிக்கம் (மொ. பெ.), **பாலைவன நீரோடைகள்,** கவ்மேன் பப்ளிகேஷன்ஸ், அமெரிக்கா, 2ஆம் பதிப்பு, மார்ச் 2000.

15. மயிலை. சீனிவேங்கடசாமி, **பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் (1800–1900),** அழகப்பா புத்தக நிலையம், திருச்சி, முதற்பதிப்பு, ஜுன் 1962.

16. மீனாட்சி முருகரத்தினம், **மேலை இலக்கியத் திறனாய்வு அறிமுகம்,** என்னெஸ் பப்ளிகேஷன்ஸ், மதுரை, முதற்பதிப்பு, சனவரி, 1987.

17. மோசஸ் மைக்கேல் பாரடே, **சிலுவை வழிச் சிந்தனைகள்,** கிருபா பதிப்பகம், சேலையூர், சென்னை-73, இரண்டாம் பதிப்பு, 2001.

18. வரதராசன், மு., **தமிழ் இலக்கிய வரலாறு,** சாகித்திய அக்காதெமி வெளியீடு, புதுதில்லி, 12ஆம் பதிப்பு, மார்ச் 1999.

19. வேங்கடராஜுலு, ரா. (மொ. பெ.), காந்தியடிகள், **சத்திய சோதனை,** காந்தி மியூஸிய வெளியீடு, மதுரை, மூன்றாம் பதிப்பு, செப். 1964.

20. வேலுப்பிள்ளை, ஆ., **தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்,** பாரி புத்தகப் பண்ணை, திருவல்லிக்கேணி, சென்னை, மூன்றாம் பதிப்பு, ஆகஸ்ட், 1985.

ஆங்கில நூல்கள்

1. Alex Preminger, Klarnke, J. Frank and Hardison, J., (Ed.), **Princeton Encyclopedia of Poetry and Poetics,** Princeton University Press, Princeton, New Jersey, 1974.
2. Christopher O' Mahony, **Church History,** (Vol. II), Pontifical Institute Publication, Alwaye, Kerala, Fourth edition, 1998.
3. Harold A. Buetow, **God still speaks: Listen!** Humily Reflections for Sundays and Holy Days, Cycle A, St. Pauls Training School Publication, Nagasandra, Bangalore, 1995.
4. Jonathan Culler, **Structuralist Poetics,** Routledge and Kegan Paul Ltd., London, 1968.
5. Propp, V., **Morphology of the Folktale,** American Folklore, University of Texas Press, Austin and London, 1977.
6. Terence Hawker, **Structuralism and Semiotics,** Methuen & Co. Ltd., London. 1977.
7. Winifred Nowottny, **The Language Poets Use,** University of London, The Athlone Press, Bristol, 1962.
8. The Gideons, **Holy Bible,** The Gideons International Publications, America, 1978.

ஆங்கிலக் கட்டுரைகள்

1. Jonathan Calassi, **"Determined Forms",** Poetry, Founded in 1912 by Harriat Monroe, Vol. CXXIX, No.3, Dec. 1976.
2. Lubomir Dolezel, **"Towards a Structural Theory of Content in Prose Fiction",** Literary Style: A Symposium, Seymour Chatman (Ed.), Oxford University Press, London and Newyork, 1971.

ஆய்வேடு

*இரவிக்குமார், மொ., **பாலக்காடு வட்டாரத் தமிழ்க் கிறித்தவக் கூத்துக்கள்,** முனைவர் பட்ட ஆய்வேடு (அச்சில் நூலாக வெளிவராதது), பாரதியார் பல்கலைக் கழகம், திசம்பர் 2002.*

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
அண்மை வெளியீடுகள்

தட்சிணாமூர்த்தி குருமுகம் - 100	50.00
அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா	50.00
நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்	50.00
ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார்	45.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1	80.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2	85.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3	95.00
திராவிட மொழி இலக்கியங்கள்	180.00
நாவல்கலையியல்	50.00
சங்கரநமச்சிவாயர்	60.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள்	40.00
Agreement in Dravidian Languages	100.00
நாடகவியல்	70.00
அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி	60.00
சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்	30.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்	100.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு	50.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
பெரியாரின் பண்பாட்டுப்புரட்சி	25.00
வ. உ. சி. வளர்த்த தமிழ்	20.00
குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு	80.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும்	30.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்	40.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
பரதநாட்டிய சாஸ்திரம்	150.00
இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள்	55.00
தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்	70.00
கருவூரார் பல திரட்டு	70.00
தமிழ் மொழியின் வரலாறு	30.00
சங்ககாலக் காசு இயல்	30.00
பாரதி இந்தியா	40.00
தமிழில் மருத்துவ இதழ்கள்	50.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00

Pub.No. 492 **விவிலியத் தமிழ்** 40.00